விலை ரூபா 20 பக்கங்கள் 28

தினகரன்

30°c - 23°c
தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 78 வள்ளுவர் ஆண்டு 2047 தை 29, வெள்ளிக்கிழமை 12.02.2016

மீனவர்களின் பாதுகாப்புக்கு விசேட தொலைபேசி

கொழும்பு, பெப். 12
கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களின் உயிர் பாது பக். 06

தனியார் பஸ்களை இடைமறித்து இன்று யாழ். நகரில் கவனவீர்ப்பு

மாணவன் சுவஸ்திகனின் சாவு போன்று இனிமேலும் நடக்காமல் தடுப்பதற்காக

யாழ்ப்பாணம், பெப். 12
விபத்தில் சிக்கி உயிரிழந்த பாடசாலை மாணவன் சுவஸ்திகனின் சாவு போன்று இனிமேலும் இடம்பெறாமல் தடுப்பதற்காக, யாழ். நகரில் இன்று கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
காலை 8 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடாமல் இடை நிறுத்தி, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதற்காக உயிரி பக். 23

நல்லெண்ணத்தை அச்சுறுத்தும் சரத் பொன்சேகாவின் நியமனம்

சாடுகின்றது மனித உரிமை கண்காணிப்பகம்

கொழும்பு, பெப். 12
போர்க்குற்றங்களுக்கு இந்த அரசு நீதியை வழங்கும் வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று நம்பியிருந்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பத்தினரின் நம்பிக்கையை சிதைக்கும் பக். 25

12 இந்திய மீனவர் மன்னாரில் கைது

மன்னார், பெப். 12
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறி பக். 24

சட்டமா அதிபராக ஜயந்த ஜயசூரிய பதவியேற்பு

கொழும்பு, பெப். 12
புதிய சட்டமா அதிபராக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய, ஜனாதிபதி மைத்திரிபால சிறி பக். 06

முச்சந்தி முரளி

இலையாவது கொஞ்சம் திருந்தப் பாருங்கோ...

பரிசோதனை வீடமைப்பு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 12
வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் செயற்றிட்டத்தின், பரிசோதனை வீடமைப்புத் திட்டம் யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட் பக். 24

தனிநாடு வேண்டுமாகிலும் துணிவுடன் சொல்லுங்கள்

மக்கள் கருத்தறியும் அமர்வில் தவறாது பங்கேற்கக் கோருகிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப்ரவரி 12
எமக்கு வேண்டிய தீர்வை நாங்கள் தான் கேட்டுப் பெறவேண்டும். அது சமஷ்டியாகவும் இருக்கலாம் அல்லது தனி நாடாகவும் இருக்கலாம். எது வேண்டுமானாலும் துணிவுடன் மக்கள் கருத்தறியும் குழுவிடம் கருத்துக்களை முன்வையுங்கள்.
இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன்.
தற்போது வடக்கில் நடைபெற்று வரும் புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்தறியும் அமர்வுகளில் தவறாது பங்கேற்று கருத்துக்களை முன்வைக்குமாறும் அவர் கோரியுள்ளார்.
புனித ஜோண் பொஸ்கோ ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் பக். 06

விபத்தில் மாணவன் உயிரிழப்பு; சாரதி மீது கொலைக்குற்ற வழக்கு

சட்டமா அதிபரின் ஆலோசனை பெற பொலிஸாருக்கு யாழ். நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 12
திருநெல்வேலி விபத்தில் மாணவன் உயிரிழந்தமையை, விபத்துச் சாவு என்று வழக்குப் பதியாது, சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று கொலைக் குற்றச் சாட்டாக - குற்றத்துக்கிடமான மனித உயிர் போக்கல் என்ற பிரிவின் கீழ் பஸ்ஸின் சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.
இவ்வாறு நேற்றுப் பொலிஸாருக்கு பக். 22

உயிரிழப்பு ஏற்படுத்தும் சாரதிகள் மீது இனிமேல் கொலைக்குற்ற வழக்குகள்

அநியாய உயிரிழப்புக்களைத் தடுப்பதற்காக மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் யோசனை

யாழ்ப்பாணம், பெப். 12
விபத்தின் மூலம் உயிரிழப்பை ஏற்படுத்தும் வாகனச் சாரதிகளுக்கு எதிராக, இனிமேல் விபத்துச் சாவு என்று வழக்குத் தாக்கல் செய்யப்படாமல், கொலைக் குற்றம் என்றே வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும்.
இவ்வாறு யோசனை முன்வைத்துள்ளார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.
அத்துடன், வீதிப் போக்குவரத்தின் போது, பஸ் நடத்துநர்கள் மிதி பலகையில் நின்று, வீதியில் செல்லும் ஏனைய வாகனங்களை பக். 25

நான் முன்வைத்ததை விடவும் சிறந்த தீர்வை வழங்க முயற்சி

நல்லாட்சி அரசுக்கு சந்திரிகா பாராட்டு

கொழும்பு, பெப். 12
என்னுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட தீர்வுத் திட்டத்தை விட, முன்னேற்றகரமான தீர்வுத் திட்டத்தை தற்போதைய அரசு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமார பக். 23

பக்கச்சார்பான ஐ.நா. அறிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது இந்த அரசு

மகிந்த ராஜபக்ச பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.12
தமிழ் மக்களைக் கொலை செய்தமை - அவர்களைச் சித்திரவதை செய்தமை மற்றும் வடக்கில் திட்டமிட்டே உணவுத்தட்டுப்பாடுகளை ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பக்கச்சார்பான அறிக்கை இலங்கை அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்களைக் கொண்ட பக். 22

அரசமைப்புக்குக் கருத்தறியும் அமர்வு 2 நாள் முல்லைத்தீவில்

மக்களைப் பங்கேற்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப். 12
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மக்கள் கருத்தறியும் அமர்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் இந்த அமர்வில், முல்லைத்தீவு மாவட்ட மக்களைக் கலந்து பக். 24

யோசிதவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, பெப்.12
சி.எஸ்.என். தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன் பக். 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுவைப் படகைத் தடை செய்யும் பிரேரணை மாகாண சபைகளுக்கு

கருத்தறிவதற்காக அனுப்பப்படவுள்ளது

யாழ்ப்பாணம், பெப். 12

இயந்திர இழுவைப் படகு நடவடிக் கைகளைத் தடை செய்யும் சட்ட மூலத்துக்கான பிரேரணை தொடர் பில் மாகாண சபைகளின் கருத்துக் கள் பெறப்படவுள்ளன. அதற்காக அந்தப் பிரேரணை மாகாண சபை களுக்கு அனுப்பி வைக்கப்படவுள் ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சும ந்திரனால் கொண்டு வரப்பட்ட இந்த தனிநபர் பிரேரணை நாடாளுமன் றத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போதே, மாகாண சபைகளுக்கு அனுப்பி கருத்துக் கேட்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட மூலமானது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் சட்டத்தில் திருத்தங்களை வலியுறுத்தி நிற்கின் றது. இது நிறைவேற்றப்படுகின்ற போது உலகிலே இந்த நடவடிக் கையைத் தடை செய்கின்ற இரண்டா வது நாடாக இலங்கை இருக்கும். ஏற்கனவே சிலி நாடு இதனைத் தடை செய்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் இழுவை நடவடிக்கைகளைத் தடைசெய்வதை வலியுறுத்துவதுடன், இழுவை நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கும் சட்டங்களில் திருத்தங் களைக் கொண்டு வருதல், இலங் கைக் கடற்பரப்புக்களில் இழுவை

> **"இழுவைப் படகு நடவடிக்கையால் கடல் உயிரினங்களும் பவளப்பாறைகளும் ஒரு சில விநாடிகளில் அழிக்கப்படு கின்றன. இந்தக் காரணி களுக்காகவே சிலி நாடானது தனது கடல் எல்லையில் இந்த நடவடிக்கையை முற்றாகத் தடைசெய்தது."**

நோக்கங்களுக்காக இழுவை வலை களை வைத்திருத்தல் - கொள்வனவு செய்தல் - இறக்குமதி செய்தல் போன்றவற்றைத் தடைசெய்தல், மேலே குறிப்பிடப்பட்ட நியமங்களை மீறி இழுவை நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக எடுக்கப் படும் நடவடிக்கைகளைத் தெளிவா கக் குறிப்பிடுதல் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரி வித்துள்ளதாவது-

வெளிநாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடு வதால், வடக்கு மீனவர்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார்கள். இதைத் தடுப்பதற்காக நாங்கள்வேறு நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளோம். இதில் ஒருபடியா கவே இந்தச் சட்டமூலமா னது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இழுவைப் படகு நடவடிக்கை யால் மிகவும் இலகுவில் அழியக் கூடிய கடல் வளங் களான அருகி வரும் கடல் உயிரினங்களும் பவளப் பாறைகளும் ஒரு சில விநா டிகளில் அழிக்கப்படுகின் றன. இந்தக் காரணிகளுக் காகவே 2015 ஆம் ஆண்டு முதல் தடவையாக சிலி நாடானது தனது கடல் எல் லையில் இந்த நடவடிக் கையை முற்றாகத் தடை செய்தது.

இந்தோனேசியா, நியூசிலாந்து, பெலிஸ், மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்றநாடுகளும்தமதுகடல்எல்லை களில் இழுவை நடவடிக்கைகளை மட்டுப்படுத்தி உள்ளன.

எனவே இந்தச் சட்டமானது நடை முறைப்படுத்தப்படுகின்ற சந்தர்ப் பத்தில் ஆழ்கடல் இழுவையானது தடை செய்யப்படுவதுடன் அது ஒரு குற்றமாகக் கொள்ளப்படும். குற்ற வாளியாகக் காணப்படுபவர் இரண்டு வருட சிறைத் தண்டனையைப் பெறுவதோடு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்த வேண் டிய நிலை ஏற்படும் - என்று தெரி வித்துள்ளார்.

(ற-5)

40 வெற்றிடங்களுக்கு 9,160 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப்.12

வடக்கு மாகாண அரச திணைக்களங்களில்நிலவு கின்ற 40 அலுவலகப் பணியாளர் வெற்றிடங் களுக்கான திறந்த போட் டிப் பரீட்சைக்கு மொத்த மாக 9 ஆயிரத்து 160 விண்ணப்பதாரிகள்விண் ணப்பித்துள்ளனர் என்று வட மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு வட் டாரங்கள் தெரிவித்துள் ளன.

வடக்கு மாகாணத்திலே முதன் முறையாக அலு வலகப் பணியாளர்களுக் கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன், போட் டிப் பரீட்சைகளும் நடத்தப் பட்டன. பரீட்சையில்பெற்ற புள்ளிகளின் அடிப்படை யில் நியமனங்கள் வழங் கப்படவுள்ளன.

40 வெற்றிடங்களை நிரப் புவதற்கு நடத்தப்பட்ட இந் தப் போட்டிப் பரீட்சைக்கு 9 ஆயிரத்து 160 பேர் வரையில் வடக்கு மாகா ணம் முழுவதிலிருந்து விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 8 ஆயிரத்து 654 பேர் போட்டிப் பரீட் சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இவ்வாறு விண்ணப்பித்த வர்களில் பத்து வீதத்துக் கும் அதிகமானவர்கள் பட்டதாரி மாணவர்களா வர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

(ற-ஜ-5,ரி2)

ஓய்வூதியம் பெறுபவர்கள்

யாழ். குடாவில் 14, 276 பேர்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.குடாநாட்டில் ஓய்வூதி யம் பெறுபவர்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாத புள்ளி விவரங்களின்படி 14 ஆயிரத்து 276 பேர் என மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன. குறித்த எண்ணிக்கை யானது, பிரதேச செயலா ளர் பிரிவு ரீதியில் கணக் கிடப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதே செயலா ளர் பிரிவில் 2 ஆயிரத்து 715 பேரும், நெடுந்தீவுப் பிரதேசத்தில் 55 பேரும், வேலணைப் பிரதேசத்தில் 186 பேரும் , ஊர்காவற்று றைப் பிரதேசத்தில் 95 பேரும் , தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரி வில் 700 பேரும் உள்ள னர்.

அதேபோன்று கோப்பாய் பிரதேச செயலாளர் பிரி வில் ஆயிரத்து 518 பேரும், பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரி வில் ஆயிரத்து 253 பேரும், கரவெட்டிப் பிரதே சத்தில் ஆயிரத்து 288 பேரும் , சண்டிலிப்பாய்ப் பகுதியில் 957 பேரும், உடுவில் பிரதேச செயலா ளர் பகுதியில் ஆயிரத்து 229 பேரும் உள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செய லாளர் பிரிவில் ஆயிரத்து 566 பேரும் , யாழ்ப்பா ணம் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 435 பேரும் , சங்கானைப் பிர தேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 47 பேரும் , மரு தங்கேணிப் பிரதேச செய லாளர் பிரிவில் 61 பேரும், காரைநகர் பிரதேச செய லாளர் பிரிவில் 171 பேரும் என மொத்தமாக 14 ஆயிரத்து 276 ஓய்வூதி யர்கள் யாழ்.குடாநாட்டில் தற்போதும் ஓய்வூதியம் பெறுகின்றனர்.

ஓய்வூதியம் பெறும் 14 ஆயிரத்து 276 பேரில் 9 ஆயிரத்து 24 பேர் பணி புரிந்த ஊழியர்களாகவும், 4 ஆயிரத்து 746 பேர் விதவைகள் ஓய்வூதியர்க ளாகவும் , 506 பேர் வேறு வகையிலான ஓய்வூதியர் களாகவும் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(ற-ஜ-01)

உணவகங்களின் உரிமையாளருக்கு சுகாதார அறிவூட்டல்

கோப்பாய் சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் உணவுப்பொருள்களைக் கையாளும் நிலையங் களின் உரிமையாளர் களுக்கு பொதுச் சுகாதார அறிவூட்டல் திட்டங்களை சுகாதார வைத்திய அதி காரி பிரிவு அதிகாரிகள் நடைமுறைப்படுத்தி வரு கின்றனர்.

வலி.கிழக்கு பிரதேச செய லர் பிரிவின் வடக்குப் பகு தியைச் சேர்ந்தவர் களுக் கான கூட்டம் வலி. கிழக்கு பிரதேச சபை கேட்போர் கூடத்திலும், வலி.கிழக் குப் பிரதேச செயலர் பிரி வின் தெற் குப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான கூட்டம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கேட் போர் கூட்டத்திலும் நடை பெற்றது.

கடந்ததிங்கட்கிழமை நடை பெற்ற பொதுச் சுகாதார அறிவூட்டல் கூட்டத்தில் கோப்பாய் பதில் சுகாதார வைத்திய அதிகாரி மருத் துவர் ப.நந்தகுமார் மற் றும் பொதுச் சகாதார பரி சோதகர்கள் கலந்து கொண்டு சுகாதார விதி களை விளக்கினர்.

கூட்டத்தில் கலந்து கொண்டு உரிய விதி களுக்கு அமைய உண வகங்களை நடத்துபவர் களுக்கே இந்த வருடத் துக்கான அனுமதி வழங் கப்படும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது. (ற-ஜ-11)

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் விற்பனையாகின்றது மாவா

நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் கஞ்சா மற் றும் மாவா என்ற போதை கலந்த பாக்கு என்பன பாடசாலை மாணவர்கள் உட்படப் பலருக்கும் விற்பனை செய்யப்பட்டு வரு கின்றது என அந்தப் பகுதி மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

25 கிராம், 225 மில்லி கிராம் நிறை யுடைய கஞ்சா கலந்த மாவா பாக்கைத் தனது உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 18 வயதுடைய இளைஞர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சட்ட விரோத தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மணிக்கூட்டு வீதிப்பகுதிக்கும், வின் சர்ன் தியேட்டர் சந்திப் பகுதிக்கும் இடையில் உள்ள கராஜ் ஒன்றில் வேலை செய்யும் இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளார். அவர் யாழ்.வயல்கரை வண் ணார்பண்ணைப் பகுதியைச் சேர்ந்தவர். தகவலறிந்த பொலிஸார் குறித்த இளை ஞரை கைதுசெய்துள்ளனர். கைதுசெய் யப்பட்ட இளைஞரை யாழ். நீதிவான் நீதி மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக் கையையும் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்.ஐந்து சந்தி உட்பட சில இடங்களி லுள்ள கடைகளிலும் அத்தகைய போதைப் பொருள்கள் விற்பனை செய் யப்படுகின்றன என்று பொதுமக்கள் தெரி விக்கின்றனர். யாழ்.ஐந்து சந்தியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கடைகளை வைத்திருக்கின்றனர். அவர்களில் குறிப் பிட்ட சிலர் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்றும், அவர்கள் கைது செய்யப்படும் சந்தர்ப்பங்களில் உடனேயே விடுவிக்கப்பட்டும் விடுகின்றனர் என்றும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறித்த பகுதியில் கடந்த சில மாதங்களாக மாவா எனப்படும் போதைப் பாக்கு விற் பனை அதிகரித்துள்ளது என்றும், இத னால் பாடசாலை மாணவர்களும் பாதிக் கப்படுகின்றனர் என்றும் தெரிவித்துள்ள பொதுமக்கள், இது குறித்து சம்பந்தப் பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத் துள்ளனர். (ற-ஜ-4,106)

வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றியவருக்கு தண்டம்

சாவகச்சேரி,பெப்.12

வழித்தட அனுமதிப்பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதிக்கு 22 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று. கடந்த சனிக்கிழமை கொடிகாமம் பொலிஸாரால் வழித் தட அனுமதிப் பத்தி ரம், வாகன உரிமையாளரின் பெயர், வழித்தட பெயர்ப் பலகை என்பன இல்லாது பயணிகளை ஏற்றிச் சென்ற வாகன சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருந்தது. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே அபராதம் விதிக்கப்பட்டது (ற-ஜ-9)

அரசமைப்புக் குறித்து கருத்தறியும் அமர்வு மட்டக்களப்பில்

அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனை கள் குழுவின் மட்டக்களப்பு மாவட் டத்துக்கான அமர்வுகள் எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் மட்டக் களப்பு மண்முனை வடக்கு பிர தேச செயலகத்திலுள்ள பேர்ல் மண் டபத்தில் நடைபெறவுள்ளன. அரசமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து வாய் மொழி மற்றும் எழுத்து மூல சமர்ப்பணங்களைப் பெறுவது அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைக் குழுவின் செயற்பாடாகும்.

உத்தேச அரசமைப்புச் சீர்திருத் தங்களுக்கான முன்மொழிவு களை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்துடன் இருபது உறுப் பினர்களைக் கொண்டதாக இந் தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் கருத்துக்களை அறிந்து இந்தக் குழு அறிக்கை யொன்றையும், பரிந்துரைகளை யும் தயாரித்து அரசியல மைப்புச் சீர்திருத்தங்கள் மீதான அமைச் சரவை உபகுழுவுக்குச் சமர்ப்பிக்கும். அத்துடன், இந்த அமர்வுகளில் பொது மக்கள் பங்குபற்றித் தங் கள் யோசனைகளை முன் வைக் கலாம். முக்கியமாக தங்களது யோசனைகளை எழுத்து மூல மாக வழங்குவது விரும்பத்தக்கது என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளை நிறைவேற்றவே முழுக் குடும்பமும் சேவையில்

ஜனாதிபதியின் மகள் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 12

எனது அப்பாவின் பதவி நிரந்தரமில்லை. இன்று இருக்கும் பதவி நாளை இல்லாமல் போகலாம். இதனாலேயே சமூகத்திற்கு நிறைவேற்றவேண்டிய கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு என்னுடைய முழுக் குடும்பத்தினரும் சேவையில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் மகள், சத்துரிக்கா சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

எனது தந்தையின் ஜனாதிபதிப் பதவி நிரந்தரமில்லை. இன்று இருக்கும் பதவி நாளை இல்லாமல் போகலாம். எனது தந்தையின் பதவி நிரந்தரம் இல்லை என்பதனால் சமூகத்திற்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு எனது முழுக் குடும்பமும் சமூக சேவையில் ஈடுபடுகின்றது.

எந்தவொரு பேதமும் பாராமல் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதிக்கு வலு சேர்ப்போம். 2020 ஆம் ஆண்டு வரும் போது எமது நாட்டை மது அற்ற நாடாக உருவாக்குவதே எங்கள் நோக்கமாகும்.

மேலும் பூச்சிக்கொல்லி மருந்துகள் இல்லாத பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு சிறுநீரக நோய்களில் இருந்து எங்கள் நாட்டு மக்களைக் காப்பாற்றிக் கொள்வதே எங்கள் நோக்கமாக இருக்கின்றது-என்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் தொடர்பில் பல்வேறு சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியாகி இருந்தன. தந்தைக்கு இணையாக அவரது மகள் சத்துரிக்கா சிறிசேன, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறானதொரு நிலையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். (த-5)

நாம் இப்போதும் விரும்புவது சர்வதேசப் பங்களிப்புடனான கலப்புப் பொறிமுறையையே

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசேன் ரொய்ட்டர்ஸுக்கு செவ்வி

கொழும்பு, பெப்.12

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டங்களில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில், விசாரணைகளை மேற்கொள்ளும் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஆரம்பத்திலும் தற்போதும் கூட சர்வதேச பங்களிப்புடன் கூடிய கலப்பு வகையான பொறிமுறையொன்றையே விரும்புகின்றது என்று மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசேன் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையின் ஷிகார் அனீஸிற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆரம்பத்தில் எமது விருப்பமும் இன்னும் எமது விருப்பமும் சர்வதேச பங்களிப்புடன் கூடியதான கலப்புரகப் பொறிமுறையொன்றாகவே இருக்கின்றது எனத் தெளிவாக அவர் கூறியுள்ளார். பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச பங்களிப்பு அவசியமில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்து சில நாள்களின் பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஆணையாளர் ரொய்ட்டர்ஸுக்கு வழங்கிய செவ்வியில்,

இலங்கை அரசின் மீது நாம் எதனையும் திணிக்கவில்லை. ஜனாதிபதி தமது விருப்பை அவரது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். நாம் எமது விருப்பை வெளிப்படுத்தியுள்ளோம்எனமேலும்தெரிவித்தார். கடந்த காலங்களில் உள்ளகப் (தேசிய) பொறிமுறைகளினூடாக விசாரணைகளை எதிர்கொண்டவர்கள் நீதியை எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றத்திற் குள்ளான நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் தேசியப் பொறிமுறையொன்றின் மீது நம்பிக்கை கொள்ளமாட்டார்கள் என மனித உரிமைகள் சபை நம்புவதாக ஆணையாளர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இலங்கை தீர்மானிப்பது எதுவாக இருந்தாலும், அதற்குப் பாதிக்கப்பட்டவர்களின் அனைத்துத் தரப்பினரதும் ஆதரவு இருக்குமேயானால், அது எம்மைப் பொறுத்தவரையில் ஏற்புடையது. அந்தப் பொறிமுறை பக்கச்சார்பற்றதாகவும் சுயாதீனமானதாகவும் இருக்குமிடத்தில் அது எமக்கு ஏற்புடையது என்று தெரிவித்துள்ளார். (த-சி)

புதிய நிர்வாகம் தெரிவு

கிளிநொச்சி கிருஷ்ணன் ஆலயத்தின் பொது கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக சு.பசுபதிப்பிள்ளை, உப தலைவர் களாக கே.வி.கே.திருலோகமூர்த்தி, என். சோதிநாதன் ஆகியோரும், செயலாளராக திருமதி.கிருஷ்ணலதா, உப செயலாளராக விஜயகுமார், பொருளாளராக தர்மலிங்கம், ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர். (ற-ஜ-ரி3)

பொதுக் கூட்டமும் ஆரம்ப நிகழ்வும்

யாழ்ப்பாணம்,பெப்.12

பலாலி மக்கள் விவசாய அமைப்பின் பொதுக் கூட்டமும் ஆரம்ப நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தோப்பு அச்சுவேலி மீனாட்சி அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து பலாலி விவசாய மக்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-422)

மகிந்த காலத்து அதிகாரிகளின் வங்கிக் கணக்குகள் விசாரணை

கொழும்பு, பெப். 12

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் அவரது பாதுகாப்பு அதிகாரிகளாக இருந்த, மூன்று இராணுவ அதிகாரிகளின் வங்கி மற்றும் நிதி நிறுவனக் கணக்கு விவரங்களை ஒப்படைக்கநீதின்றம்உத்தரவிட்டுள்ளது. இந்த மூவருக்கும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் 79 இல் கணக்குகள் இருந்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பு வழங்கிய, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய அதிகாரிகளான பிரிகேடியர் தமித்த ரணசிங்க, ஜேர் நெவில் வன்னியாராச்சி, கப்டன் திஸ்ஸ விமலசேன ஆகியோரின் உள்ளூர் வங்கி மற்றும் நிதி நிறுவன வைப்புகள் தொடர்பான விவரங்கள் தேவைப்படுவதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்திடம் கோரினர்.

இதற்கமைய, நீதிவான் கிஹான் பிலபிட்டிய, 32 வங்கிகள் மற்றும் 47 நிதி நிறுவனங்களில் உள்ள சந்தேக நபர்களான மூன்று இராணுவ அதிகாரிகளினதும் கணக்கு விவரங்களை வழங்குமாறு உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இவர்களில் ஜேர் நெவில் வன்னியாராச்சி, மகிந்த ராஜபக்சவின் பிரதிப் பாதுகாப்பு அதிகாரியாக இருந்தவர். இவரது பெயரில், ஓர் உந்துருளி, ஐந்து உழவு இயந்திரங்கள், இரண்டு பார ஊர்திகள், ஏழு பஸ்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (த-5)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வரிசை 460
சீட்டிழுப்பு திகதி 2016.02.11
வெற்றி இலக்கங்கள்
01 06 47 57 A
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 42,497,340/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வரிசை 1236
சீட்டிழுப்பு திகதி 2016.02.11
வெற்றி இலக்கங்கள்
30 32 46 57 Y
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 12,598,420/=

நோயாளர் நல்னபுரி சங்கம்
ஆதார வைத்தியசாலை -தெல்லிப்பழை
பணிநிலை வேண்டுகை
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன் புரிசங்கம், நோயாளர்களைப் பராமரிக்கும் தொண்டர்கள் ஆண்/ பெண் என்போரிடமிருந்து பணிநிலை வேண்டுகைகளைக் கோரியுள்ளது.
விண்ணப்பம் வழங்கும் இறுதித் திகதி - 24.02.2016 புதன்கிழமை
விண்ணப்பம் சமர்ப்பிக்கும் திகதி - 26.02.2016 வெள்ளிக்கிழமை
விண்ணப்ப படிவங்களைத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவை அலுவகத்தில் 100 ரூபா செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
லயன் சி.ஹரிகரன்
செயலாளர்.
021 300 3455, 077 900 5856

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
முது கல்வியியல் மாணிப் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்காக மாணவர்களை தேர்வு செய்வதற்கான எழுத்துப்பரீட்சை
காலம் : 13.02.2016
நேரம் : 10.30 மு.ப. - 12.30 பி.ப
இடம் : யாழ். பல்கலைக்கழகம்
மேற்படி பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் கவனத்துக்கு
பரீட்சை மண்டப ஒதுக்கங்களில் சில மாற்றங்களை மேற்கொண்டுள்ளதால் பரீட்சார்த்திகள் நேரகாலத்தோடு யாழ். பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்து மேற்படி பரீட்சை மண்டப மாற்றத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப் படுகின்றீர்கள்.
(C/29097)(10.17.20)
பதிவாளர்.

எழுச்சியகம்
இளவாலை
021 221 1936 eluchiyaham@live.com
நடப்பாண்டுக்கான புதிய பயிற்சி நெறிகள்-2016
கல்வி
* ஆரம்பக்கல்வி மாணவருக்கான சிங்கள வகுப்பு
* ஆங்கில வகுப்பு (O/L. மேற்பட்டோர்)
* அழகியல்
* பரத நாட்டியம்
* மேற்கத்தேய நடனம்
* சித்திரமும் வடிவமைப்பும்
* ஓகன்
ட்றம்ஸ்
மிருதங்கம்
வாய்ப்பாட்டு
வயலின்
புல்லாங்குழல்
கிற்றார்
நாட்டுக்கூத்து (வடமோடி,தென்மோடி)
பொது
கராத்தே
யோகா
தியானம்
தொழிற்பயிற்சி
* பன்னவேலை - பாவனைப்பொருள்கள் அலங்காரப்பொருள்கள்
* முத்துமாலை அலங்காரம்
* முக அலங்காரம் (Facial), * தையல் பயிற்சி
* கேக் ஜசிங், * சமையல்
* அட்டைத்தாள் அலங்காரம்
* தோற்பொருள் உற்பத்தி. * சேலை அலங்காரம்
* சந்தன மாலை * பாசி மாலை
விவசாயம்
விலங்கு வேளாண்மை
பூங்கனியியல்
சேதன வேளாண்மை
உணவு பதனிடல்
காளான் உற்பத்தி
இயற்கை வேளாண்மை
* ஒவ்வொரு பிரிவிலும் மட்டுப்படுத்தப் பட்ட அனுமதிகள்.
* விண்ணப்பப் படிவங்களை எழுச்சியகம், இளவாலையில் பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுதிகதி: 29.02.2016
நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 ஆயிரம் முறைப்பாடுகள் குறித்து யாழில் விசாரணை

பரணகம ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணத்தில் மக்களால் மேற்கொள்ளப்பட்ட 12ஆயிரம் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக, யாழ்ப்பாணத்தில் மீண்டும் சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது காணாமற்போனோரைக்கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழு.

எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை யாழ்ப் பாணத்தில்காணாமற்போனோர் தொடர்பான சாட்சிப் பதிவுகள் இடம்பெறும் என்று ஆணைக் குழுவின் செயலாளர் குணதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

இதில் யாழ்ப்பாணம், கோப்பாய், வலி.வடக்கு, வலி.தெற்கு, காரை நகர், நெடுந்தீவு முதலிய பகுதி களிலும் அமர்வு நடைபெறவுள் ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் சாட்சியப் பதிவுகள் இடம்பெற்ற போது, கலந்துகொள்ளத் தவ றிய மருதங்கேணி மக்கள் கோப் பாய் அமர்வில் தமது வாக்கு மூலங்களைப்பதிவுசெய்துகொள் ளலாம்என்றும்சம்பந்தப்பட்டவர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. என்றார். (வு)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் ஒரே இரவில் 3 வீடுகளில் திருட்டு

யாழ்ப்பாணம். பெப். 12

அளவெட்டி மற்றும் மல்லாகம் பகுதிகளில் இடம்பெற்ற வெவ் வேறு 3 திருட்டுச் சம்பவங்களில் 12 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 24 பவுண் நகை கள் திருடப்பட்டுள்ளதாக தெல் லிப்பழை குற்றத் தடுப்புப் பொலி ஸார் தெரிவித்தனர்.

குறித்த திருட்டுச் சம்பவங்கள் நேற்றுமுன்தினமிரவு வெவ் வேறு நேரப்பகுதிகளில் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தகவல் தருகையில்,

அளவெட்டிதெற்குப்பகுதியில் உள்ளவீடு ஒன்றின் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர் கள் 2 லட்சம் ரூபா பெறுமதி யான நான்கு பவுண் நகையை திருடிச் சென்றுள்ளனர் என முறைப்பாடு வழங்கப்பட் டுள்ளது.

அத்துடன், அளவெட்டி மேற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அங்குள்ளவர்கள் அனைவரும் நித்திரையில் இருந்துள்ள நேரம் பார்த்து, யன்னல் கம்பியை வளைத்துஉள்நுழைந்தவர்கள், 4 லட்சத்து 80ஆயிரம் ரூபா பெறுமதியான காப்பு, மோதிரம், சங்கிலி உள்ளிட்ட 10 பவுண் நகையை எடுத்து சென்றுள் ளார் முறைப்பாடு கிடைத்துள் ளது.

மேலும், மல்லாகம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அதன் உரி மையாளர் இரவு பின்பக்க வாசற் கதவைப் பூட்டாமல் தூங்கியுள்ள னர். இந் நிலையில் பின்பக்கப் பாதையூடாக வந்தவர்கள், அனைவரும் வீட்டுஅறையில் நித்திரையில் இருக்கும் போது, பீரோவில் இருந்த 6 லட்சம் ரூபா பெறுமதியான 12பவுண் நகை யைத் திருடியுள்ளனர்.

குறித்த சம்பவங்கள் அனைத் துடனும் ஒரு திருட்டுக் குழு தொடர்புபட்டுள்ளமை விசார ணைகள் மூலம் தெரியவந்து துள்ளது என பொலிஸார் கூறினர்.

இதேவேளை- இந்தச் சம்பவங் கள் தொடர்பில் பொலிஸ் தட அறிவியல் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வரு வதுடன், மோப்பநாயின் உதவியையும் பெற்றுள்ளனர். திருடர்கள் விட்டுசென்ற இரு தடயப்பொருள்களை மீட்டுள்ள பொலிஸார் அவற்றின் உதவி யுடன் திருட்டு நபர்களை கைது செய்ய ஆரம்பக்கட்டவிசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (வ-107)

கஞ்சாவுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதி யில் ஒரு கிராம் 64 மில்லிகிராம் கஞ்சா வைத் தனது உடைமை யில் வைத்திருந்த குற்றச்சாட் டில்ஒருவர்கைதுசெய்யப்பட்டுள் ளார் என்று யாழ்.விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித் தனர்.

தொடர்மாடி குடியிருப்பு பகுதி யைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே கைது செய்யப் பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டது.

சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞன் நிற்பதைக் கண்ட பொலிஸார் அவரிடம் விசா ரணை மேற்கொண்டதில், உடை மையில் கஞ்சா வைத்திருந்தமை தெரியவந்தது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரை யாழ்ப் பாண நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, யாழ்.மாவட்டத் தில்அண்மைக்காலமாககஞ்சாப் பாவனை அதிகரித்து வருவதா கப் பொலிஸார் சுட்டிக் காட்டியுள் ளார். (ற-ஜ-4,107)

தோட்டத் தொழிலாளருக்கும் 2,500 ரூபா சம்பள உயர்வு

கொழும்பு, பெப்.12

தனியார்துறை ஊழியர்களுக் கான 2,500 ரூபா சம்பள உயர் வுக்குள் தோட்டத் தொழிலாளர் களையும் உள்வாங்குவதாக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

காலாவதியான கூட்டு ஒப்பந்தம், சம்பந்தப்பட்ட தரப்பினரால் இது வரை கைச்சாத்திடாதுள்ள நிலையிலேயே இந்த முடிவு எடுக் கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில்தனியார்துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப் புத் தொடர்பில் ஐ.ம.சு.முன்ன ணியின் நாடாளுமன்ற உறுப் பினர் டலஸ் அழகப்பெரும , நிதி அமைச்சர் ரவி கருணாநாயக் கவிடம் எழுப்பிய கேள்விக்கு விளக்கம் அளித்தபோதே அமைச்சர் ஜோன் செனவிரட்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் குறிப்பிட்ட அவர்,

தனியார்துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக் குறித்து நாம் தீர்மானம் எடுத்துள்ளோம். இதில் தோட்டத் தொழிலாளர் களின் சம்பள அதிகரிப்புக் குறித்துப் பிரச்சினை எழுந்துள் ளது. ஏனெனில், தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கான கூட்டு ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட தரப்பினரால் இதுவரை கைச் சாத்திடப்படாமலுள்ளது.

எனவே, தனியார்துறை ஊழியர் களுக்கான 2,500 ரூபா சம்பள உயர்வு சட்டமூலத்துக்குள் இவர் களையும் (தோட்டத் தொழி லாளர்களை) உள்வாங்கியுள் ளோம். தனியார்துறை ஊழியர் களுக்கு ஆகக் குறைந்த சம்பளம் 10,000 ரூபாவாகும் -என்றார். (த-சி)

இல்லத்தில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தும் அறிவியல் பொக்கிஷம்
ஒளிஅரசி
மாதமொரு சஞ்சிகை
பெப்ரவரி மாத இதழ் நாளை வெளிவருகின்றது
அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள: தொடர்புக்கு: 071-8724057, அலுவலகம்: 077-2722726
மல்லாகம்: 071-8724056, ஏனைய மாவட்டங்கள்: 071-4114990

ஷைலோ ஜஸ்கிறீம் வெற்றிடங்கள்

* மனேஜர் (பொறுப்பாளர்) ஜஸ்கிறீம் உற்பத்தி மற்றும் விற்பனையில் நன்கு அனுபவமும் கோயில் முதலான இடங்களில் இடம் எடுத்து தற்காலிக விற்பனை நிலையம் அமைத்து விற்பனை செய்தல்திறன் மற்றும் நிர்வாக திறமையுள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். (ஆண்கள் மட்டும்)
* ஜஸ்கிறீம் வாகனத்தில் விற்பனையாளர்கள் ஜஸ்கிறீம் விற்பனை மற்றும் கையாள்வதில் அனுபவமும் திருவிழாக்கால வாகன அனுமதி. விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். (ஆண்கள் மட்டும்)
* ரெஸ்ரோறன்ட் வெயிட்டர்கள் (உணவுபரிமாறுபவர்கள்) உணவு மற்றும் ஜஸ்கிறீம் விற்பனை நிலையத்தில் அனுபவமும் வாடிக்கையாளர்களுடன் நன்றாகப் பேசக் கூடிய சுத்தமான சுகாதார பழக்க வழக்கமுள்ள உணவு பரிமாறுநர்கள், பல்மொழி திறன், யூனிபோம்.கூ.ரை அணியக்கூடியவர்கள் நேரில் வரவும். (ஆண்/ பெண் இருபாலாரும்)

திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் EPF/ ETF என்பன கிடைக்கும்

இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 771 0785
(68833)(13.17.18)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை

ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம்: 05
ஆதன இலக்கம்: 75(புதிய இலக்கம்)
யாழ் மானிப்பாய் வீதி,
கிராமசேவையாளர் பிரிவு: J/132 ஆனைக்கோட்டை.

வட்டாரம் 05, யாழ் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 75(புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவில் பற்று ஆனைக்கோட்டை இறை ''தரகன் புலம்'' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 13.46 கொண்ட) இவ்வாதனமானது தற்போது சுவிஸ்லாந்தில் வசிக்கும் இராஜசேகர் (இராஜசேகரன்) கிரான்சன் ஆகிய இவரால் ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த அற்றோனி தத்துவக்காரி திருமதி புஸ்பநாயகி இராஜசேகரன் மூலம் வெளிப்பட்டு அறுதி உறுதி மூலம் 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இறப்பியல் அன்ரனி மதுரநாயகம் பெண் அமலோற்பவமல்லிகாவும் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு சி.இளங்கீரன் முகதாவில் நிறைவேறிய 4223 ஆம் இலக்க 2015.08.03 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்து வதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இந்த '' தரகன் புலம் '' நிலப்பரப்பு 01 குளி 13.46 கொண்ட இந்த ஆதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாத விடத்து இவ்வாதனம் இறப்பியல் அன்ரனி மதுரநாயகம் பெண் அமலோற்பவமல்லிகா என்பவர் பெயருக்கு மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய். (68863)(14.18.20)

அறிவித்தல்

வடமராட்சி கிழக்கு பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் (வ .து) கிளைக்குழுதெரிவு - 14.02.2016 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணி

மேற்படி வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக் குழுவினை ''பனை தென்னை வளஅபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கிளை குழுவினை தெரிவுசெய்தல்'' என்ற ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கமைய கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைப்படி நடைபெறும் என சங்கத்தின் எல்லா உறுப்பினர்களிற்கும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்தல் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

கூட்டம் நடைபெறும் இடங்களின் விவரங்கள்

தொடர் இல.	கிளை இல.	கிளையின் பெயர்	கூட்டம் நடைபெறும் இடம்
01	177	மணற்காடு	வைரவர் கோயில் மண்டபம்
02	178	குடத்தனை	குடத்தனைப்பொதுநோக்கு மண்டபம்
03	180	அம்பன்	அண்ணமார் கோயிலடி
04	183	மாமுனை	மாமுனை பொதுநோக்குமண்டபம்
05	184	செம்பியன்பற்று	சச்சிதானந்தம் இல்லம்
06	185	மருதங்கேணி	சங்கத்தலைமை அலுவலக மண்டபம்
07	186	கிளை ஆழியவளை	பழைய கிளைக் கட்டடம்
08	187	ஆழியவளை/ வெற்றிலைக்கேணி	கிளை ஆழியவளை பழைய கிளைக்கட்டடம்
09	188	நித்தியவெட்டை	நித்தியவெட்டை முன்பள்ளி
10	189	கேவில்	கேவில்பொதுநோக்குமண்டபம்
11	190	வல்லிபுரம்/பூனைத்தொடுவாய்	கேவில் பொதுநோக்குமண்டபம்

செயலாளர்,
வடமராட்சி கிழக்கு, ம.தெ.வள.அ.கூ.சங்கம். (68854) (13.18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்போக வெங்காய செய்கை இம்முறை 1,900 ஹெக்ரேயரில்

அச்சுவேலி,பெப்.12

யாழ்.மாவட்டத்தில் பெரும் போக வெங்காயப் பயிர்ச் செய்கை ஆயிரத்து 900 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஜன வரி மாதம் வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 310 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த மாதத்தி லும் பெருமளவில் வெங் காய நடுகை நடைபெறுவ தோடு அடுத்த மாத முற்பகு தியிலும் வெங்காய நடுகை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பெரும் போகத்தில் ஆயிரத்து 900 ஹெக் ரேயர் நிலப்பரப்பில் வெங் காயப்பயிர் செய்கை பண்ணப்படவுள்ளது. அதில் 280 ஹெக்ரேயர் உண்மை வெங்காய விதையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்.

ஆயிரத்து 620 ஹெக் ரேயர் மரபுவழி யாழ்ப் பாண வெங்காயச் செய் கையாக இருக்கும் என யாழ்.மாவட்ட விவசாயத் தி ணைக்கள பயிர்ச் செய்கைப் பெறுபேற்று மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்போக வெங்காயப் பயிர்ச்செய்கை ஆயிரத்து 900 ஹெக்ரேயராக இருக் கும் அதேவேளையில் இந்த வருட சிறுபோக வெங் காயச் செய்கைக்கான உத்தேச இலக்கு 2 ஆயி ரம் ஹெக்ரேயராகத் தீர்மா னிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட் விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுவரு கின்றது.

இரண்டாயிரம் ஹெக் ரேயர் சிறுபோக வெங் காயச்செய்கையில்குறைந் தது 25 வீதமான செய் கையை உண்மை வெங் காய விதையைப் பயன் படுத்தி பயிர்ச்செய்கை மேற் கொள்வதற்கானமுன்னேற் பாடுகளை மாவட்ட விவசா யத் திணைக்களம் மேற் கொண்டு வருகின்றது.

உண்மை வெங்காய விதையைப் பயன்படுத்தி வெங்காயச்செய்கையை மேற்கொள்ளுவது உற் பத்திச்செலவும் கணிச மான அளவு குறைவாக இருப்பதோடு, நோய்த் தாக்கமும் குறைவு. திட் டமிட்டபடி விளைச்சளை யும் பெற்றுக்கொள்ள முடியும். உண்மை வெங் காய விதையைப் பயன் படுத்துவதில்விவ சாயிகள் ஆர்வம் கொள்ள முன்வர வேண்டும் என யாழ். மாவட்ட விவசாயப் பணிப் பாளர் இ.பால சுந்தரம் தெரிவித் தார்

(ற-ஜ-11)

குடும்பஸ்தர் மீது தாக்குதல்

சாவகச்சேரி,பெப்.12

நெல் அறுவடை செய்து விட்டு வீடு திரும்பிய குடும் பஸ்தரை வழிமறித்த கும்பல் மோசமாகத் தாக்கிவிட்டுத் தப்பியோடியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம்இரவு 10 மணியள வில் தாவளை – இயற்றாலையில் நடந்துள்ளது. தாக்கு தலுக்கு இலக்கான குடும்பஸ்தர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நெல் அறுவடை இயந்திரம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி யமை தொடர் பாகவுற்பட்ட ராறே தாக்கு தலுக்குக் கார ணம் என்று கூறப்படுகின் றது. (ற-ஜ-9)

தவறிவிட்டது

பூமகள் வீதி, அரியாலையில் வசிக்கும் ப.மோகநாதன் ஆகிய எனது தே.அ.அட்டையும் (460952417 V) வேறு முக்கிய ஆவணங்களும் கறுப்பு நிற அட்டைக் கவருடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அறியத் தரவும். சன்மானம் வழங்கப்படும்.
(68867) (14.18.20)
தொடர்பு: 077 752 5472

நுழைவாயில் திறப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், பெப்.12

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தி ன் நுழைவாயில் திறப்பு விழாவும் நாவாந்துறை புனித லூர்து அன்னையின் கெபி திறந்து அர்ச்சித்து முதல் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு அருட்தந்தை யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்து கொள் ளவுள்ளார் என நாவாந்துறை பங்குத் தந்தையும் பங்கு மக்களும் தெரிவித்துள்ளனர்.

(ற-ஜ-ரி)

சேவை நயப்புப் பாராட்டு

மகேந்திரராணி பொன்னம்பலம்

இருபத்து நான்கு ஆண்டுகள் இதயம் உவக்க இங்கு நீர் சேவை தந்தீர் இன்றோடு அகவை அறுபதில் இங்கிருந்து விடை பெறுகின்றீர் பலர் போற்ற பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்க பல்லாண்டு... வாழ்க பல்லாண்டு....

கடமையாற்றிய சேவை விவரம்
1.அ/தாருஸ் – ஸலாம் வித்தியாலயம் அநுராதபுரம் – 12.03.1984 – 10.07.1989
2. ய/விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் – மீசாலை – 11.07.1989 – 31.01.1992
3. ய/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் – மீசாலை– 01.02.1992 – 12.02.2016

அன்போடு வாழ்த்திடும்:
அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
ய/ அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் - மீசாலை

(80729)(11.18.20)

தவறிவிட்டது

வட்டுத்தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த புஸ்பகுமார் வைஷ்ணவன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (952682318V) மற்றும் மோட்டார் சைக்கிளின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் பூநகரிக்கும் வட்டக்கச்சிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (68872) (14.18.20)
தொடர்பு: 077 182 9935

வலி.கிழக்கு வட பகுதி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் -அச்சுவேலி
கூலிவிலை கோரல்
வெற்றுச்சாக்கு, வெற்றுப்பை, வெற்று ரின் பார்வையிடுதல் - 29.02.2016
சங்கப் பணிமனை புத்தூர்.
பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.சங்கம் அச்சுவேலி.
தொடர்பு: 021 321 5262

வாகனம் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் விற்பனை நிலையமொன்றுக்கு வாடகைக்கு சாரதியற்ற வாகனமொன்று (Light Vehicle) உடன் தேவைப்படுகின்றது.
தொடர்பு: 077 192 0206 ,076 549 3389

தேவை

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதி யில் வீட்டில் தங்கி நின்று சுவையா கச் சமைக்கத் தெரிந்த நல்ல தேகாரோக் கியமுள்ள 40-50 வயதுக்கு இடைப் பட்ட பெண் ஒருவர் தேவை.
தொடர்பு: 076 529 0342

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

கலாசாலை வீதி, திருநெல்வேலி
5V டீசல் மின்பிறப்பாக்கிகள் 2 விற் பனைக்குண்டு. 22.02.2016 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல:
021 222 6525
அலுவலக நேரம்
காலை - 8.00 - மாலை 5.00 வரையும்.
செயலாளர்
தி.செல்வமனோகரன். (A/29060)(11.18.20)

டனுஸ்கா ரெஸ்ரோரன்ஸ்

வேலையாள்கள் தேவை
*ரொட்டி மேக்கர்
*உணவு பரிமாறுபவர்
*சமையல் உதவியாளர்
*சுத்திகரிப்பாளர்கள்
*சமையலாளர்
போன்ற அனுபவமுள்ள வேலையாள் கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும் பத்தக்கது. நேரில் சமுகம் தரவும்.
தொடர்பு: 077 462 3625
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

வேலைவாய்ப்பு

கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு வேலையாள்கள் தேவை.
*சுத்திகரிப்பாளர்
*பாதுகாப்பு உத்தியோகத்தர்
ஆர்வமுள்ளவர்கள்
இன்றும் நாளையும் 12.02.2016, 13.02.2016 ஆகிய தினங்களில்
நேரில் சமுகம் தரவும். நேரம் 9.30 - 12.00 வரை
நியூ உதயன் பப்பிளிகேஷன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

VACANCY IN MALAYSIA

ரெஸ்ரோறன்டில் ஆலிகளுக்கான உடனடி வேலைவாய்ப்பு (50 ஊழியர்கள் தேவை)
சம்பளம் - RM 1000 (1RM=35 RUPEE)
யாழ்ப்பாணம் 0722269873 0722270117

ஆரம்பமாக நிபந்தனைகள்
- 3 வருடகால ஒப்பந்தம்
- தங்குமிடம் வழங்கப்படும்
- மருத்துவ செலவு போக்குவரத்து செலவு வழங்கப்படும்
- ஒப்பந்த காலம் முடிந்தபின் திரும்ப வருவதற்கான பயணச்சீட்டு வழங்கப்படும்
- 2 நேர சாப்பாடு வாழங்கப்படும்
- வேலை நேரம் கிழமைக்கு 48 மணித்தியாலங்கள் (ஒரு நாளுக்கு 8 மணித்தியாலங்கள்)
- வயது எல்லை 21-35
- ஏனைய அனைத்தும் மலேசிய தொழில் சட்டத்தின் கீழ் அமையும்
- மேலதிக வேலை நேரத்திற்கு மாதத்திற்கு RM562 வழங்கப்படும்

Licence No-1216 Job order no- AL/1216/32/16 SLBFE Approved charged – Rs.90,000/=

SIO INTERNATIONAL
RECRUITMENT AGENCY
NO-77, FIRST FLOOR, PEOPLE'S PARK SHOPPING COMPLEX, GAS WORK STREET, COLOMBO-11, SRI LANKA.
Hot Line--0727977977, 0722222377, 0722269876

சிவிலிம
JAFFNA SHOWROOM

புதிய காட்சியறைத் திறப்பு விழா
12.02.2016

வீடு மற்றும் கட்டடங்களின் உட்புற, வெளிப்புற தேவைகளுக்கான நவீன, பாரம்பரிய அழகுடன் கூடிய Ceiling மற்றும் Wall panal களை விற்பனை செய்யும் இலங்கையின் முன்னணி நிறுவனத்தின் புதிய கிளை தற்போது யாழ் நகரில்.

i-Panel
- ✓CEILING & WALL SHEETS
- ✓2X2 COMMERCIAL CEILING
- ✓FINISHING CEILING SHEETS
- ✓BATHROOM SHEETS
- ✓FLOORING SHEET
- ✓ROOFING
- ✓2X2 FAN & LED LIGHTS



077 949 4200
No.644, Hospital Road, Jaffna. (In front of Sri Lanka Insurance.Co)

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
அரியரத்தினம் பிரபாகரன்



தாய் மடியில்
11.07.1950

ஆண்டவன் அடியில்
10.02.2008

நித: உறுத்து

எம் அப்பா எம்மை விட்டு
நீங்கி நீண்டது எட்டாண்டுகள்
ஊர் போற்றும் உத்தமனாய்
பாசம் மிகுந்த தந்தையாய் – நினைத்து
என்றும் வாழும் உங்கள் மனைவி, பிள்ளைகள்

விமானநிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி. (68861) (14,18,20)

துயரில் வாழும்
குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21
.
05
.
1951

மறைவு
24
.
01
.
2015

அமரர் வேலுப்பிள்ளை வாரித்தம்பி

நித: பூர்வபக்க பஞ்சமி

மாமா இவ் உலகை விட்டு நீங்கி ஆண்டொன்று சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் எம் மனதில் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
முருகப் பெருமானை வேண்டுகின்றோம்...

நீங்காத நினைவுகளுடன்

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (68856)(11,18) மருமக்கள்.

ஐயலின் இதய அஞ்சலி

எமது கல்வி நிறுவன குடியுரிமை ஆசிரியர்
திரு. S.நிவாகரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

கந்தையா சின்னத்தம்பி

அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஐயல் அக்கடமி (சி.58852)(13,18,20)

சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். 681/B,K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.

நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 13.01.2016 புதன்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவி

அமரர்
கலைமகள் சண்முகலிங்கம்

மண்ணில்
05.04.1950

விண்ணில்
13.01.2016

கடந்த 13.01.2016 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி கலைமகள் சண்முகலிங்கம் நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் நலன்விசாரித்தவர்கள், யாழ்போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்திய அதிகாரிகள், மற்றும் உத்தியோகத்தர்களுக்கும். அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறி பேருதவிபுரிந்த யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இறுதிவரை பேருதவிபுரிந்த யாழ்ப்பாண சுகாதாரசேவைகள் பணிமனையின் அனைத்து சாரதிகளுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் துண்டுப் பிரசுரம் ஊடாகவும், பத்திரிகை வாயிலாகவும், இணையம் ஊடாகவும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (12.02.2016) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இல.26/2, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.
(68842) (14,18,20)

மங்கள உடனடியாக பதவி விலகவேண்டும்

சொல்கிறார் வாசுதேவ

நாட்டின் இறைமைக்குப் பங்கம் விளைவித்து நாட்டை சர்வதேசத் திடம் சிக்கவைத்தது மாத்திரமன்றி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடன் நாங்கள் (மகிந்த அணி) பேச விருந்த சந்தர்ப்பத்தையும் இல்லா தொழித்தமை இந்த நாட்டின் மக்கள் ஆணையை மீறும் பெரிய செயற்பாடு என்பதால், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உடன் பதவி விலக வேண்டும். இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த தாவது,

இலங்கை அரசும், அதன் வெளிவிவகார அமைச்சும்எடுத்த நடவடிக்கைகளுக்கு அமையவே இந்த நிலை உருவாகியுள்ளது. நாடாளுமன்றதில் அங்கம் வகிக்கும் 50 க்கும் மேற்பட்ட பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கவிடாமல்மக்கள்ஆணையை வெளிவிவகார அமைச்சர் நிராகரித்துள்ளார். எனவே, அவர் உடனடியாகப் பதவி விலகவேண்டும். அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு செயற்பட்ட தால் நாடு சர்வ தேசத்திடம் சிக் கியுள்ளது.மனித உரிமைகள் ஆணை யாளருடன் நாம் பேசவிருந்த சந்தர்ப்பமும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. – என்றார். (த-சி)

மீனவர்களின்

காப்புக்காக விசேட தொலைபேசி இலக்கத்தைக் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

24 மணி நேரமும் செயற்படும் இந்த இலக்கத்துடன், இலங்கையின் எந்தப் பகுதியிலும் மீன்பிடித் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பு கொள்ள முடியும் என்று, இந்தச் சேவையின் தலைவர் ஆரிய சீல விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

011-2346134 மற்றும் 0722244063 என்ற இரண்டு தொலைபேசி இலக்கங்கள் உயிர் காப்புச் சேவைக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கடலுக்குச் செல்லும் மீனவர்கள் ஏதாவது ஆபத்துக்கள் நேர்ந்தால் உடனடியாக இந்தத் தொலைபேசி இலக்கத்துக்குத் தகவல் தெரிவிக்க முடியும்.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து செயற்படும் மேற்படி மத்திய நிலையம், எந்தப் பகுதியிலிருந்து அழைப்புக் கிடைக்கப் பெறுகின்றதோ, அந்தப் பகுதிக்குப் பொறுப்பான கடற்படையினர் மற்றும் கடலோரக் காவல் படையினருக்குத் தகவல் வழங்குவார்கள். இந்தச் செயன்முறை அடிப்படையிலேயே தற்போது இந்தச் சேவை பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆரியசீல தெரிவித்துள்ளார்.

இந்த உயிர் காப்புச் சேவைக்காக 47 அடி நீளமான 25 கோடி ரூபா பெறுமதியான படகு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் படகில் வைத்தியர், தாதியர்கள் உள்ளிட்ட 6 பேர் தொடர்ந்து பணியாற்றுவர். கொழும்புத் துறைமுகத்துக்கு அண்மையாக ஏற்படும் ஆபத்துக்களுக்கே தற்போது இந்தப் படகின் உதவியுடனான சேவை இடம்பெறும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் செயற்படுவதற்கு இவ்வாறான இரண்டு படகுகள் இந்த ஆண்டு இறுதிக்குள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக ஆரியசீல மேலும் தெரிவித்தார். (த-5)

சட்டமா அதிபராக

சேன முன்னிலையில் நேற்று முற்பகல் பதவிப்பிரமாணம் செய்தார்.

இலங்கையின் 45ஆவது சட்டமா அதிபராகப் பதவிப் பிரமாணம் செய்த ஜயந்த ஜயசூரிய, சட்டமா அதிபர் திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் ஆவார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோனும் ஜயந்த ஜயசூரியவின் குடும்ப உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே பதவியில் இருந்த சட்டமா அதிபர் யுவன்ஜன வனசுந்தர கடந்த ஜனவரி 10ஆம் திகதியுடன் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில், ஜயந்த ஜயசூரியவை புதிய சட்டமா அதிபராக நியமிக்குமாறு அரசமைப்புப் பேரவை நேற்றுமுன்தினம் பரிந்துரை செய்திருந்தது. (த-சி)

தனிநாடு

போட்டி நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 1977 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு – தனிநாட்டுக்கு – தமிழீழத்துக்கு, வடக்கு – கிழக்கு மக்கள் ஏகோபித்த ஆதரவை வழங்கினர். இதனை அடிப்படையாக வைத்துதான், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார். அவர் இறுதி வரை தனிநாட்டுக்காகப் போராடினார். ஆனால் தலைவர் பிரபாகரன் போராடிய காலத்திலும் சரி, அதற்குப் பின்னரும் சரி இலங்கை அரசு, தலைவர் பிரபாகரனே தனிநாடு கோரினார் என்றும் தமிழ் மக்கள் கோரவில்லை என்றும் பரப்புரை செய்து வந்தது – வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையிலேயே புதிய அரசமைப்பு தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக மக்கள் கருத்தறியும் அமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் தமிழ் மக்கள் பங்கெடுத்து தமது கருத்துக்களைச் சொல்லவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகூடிய சமஷ்டி அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்துகின்றது. தற்போது நடைபெற்று வருகின்ற மக்கள் கருத்தறியும் அமர்வில் தமிழ் மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கா விட்டால், இந்த அரசு, தமிழ் மக்கள் அதிகாரப் பரவலாக்கலைக் கோரவில்லை. கூட்டமைப்பே கோரிக் கொண்டு இருக்கின்றது என்று சொல்லி, எங்களுக்கு எதையுமே தராமல் விட்டு விடுவார்கள்.

எனவே தமிழ் மக்கள் என்ன தீர்வு அமைய வேண்டும் என்பதை இந்த அமர்வில் கலந்து கொண்டு தெரிவிக்க வேண்டும் என்றார். (த-5)

கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் காவலாளியாகக் கடமையாற்றி வந்த
வேலுப்பிள்ளை அருளானந்தர் (வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டை)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர் நலன்புரிசங்கம்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை.

(சி/29078)(11,17,18,20)

31 ஆம் நாள் ஞாபகார்த்த ஆராதனை அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
24
.
12
.
1953



ஆண்டவன் அடியில்
14
.
01
.
2016

அமரர் ஜோசப் பீற்றர் ஜேசுராஜன்

(ஓய்வுபெற்ற தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து எம் அன்பு வழி காட்டியாய் இருந்து எம்மையெல்லாம் ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு ஆண்டவர் அடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் ஜோசப்பீற்றர் ஜேசுராஜன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்கள், மரணச் சடங்கில் பங்கு கொண்டவர்கள், அஞ்சலி உரையாற்றியவர்கள்,வெளிநாடுகளில் இருந்து தொலைபேசியூடாகவும், இணையமூடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்கள் மற்றும் சாவகச்சேரி "Ever Green" வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்திய சாலையில் அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள், தாதியர், அங்கு வந்து ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது ஞாபகார்த்த ஆராதனை நிகழ்வுகள் நாளை (13.02.2016) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் இவ்வாராதனை நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்)

குடும்பத்தினர்.
077 172 7650,
சாவகச்சேரி. 077 193 0443, 077 247 9796.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்சிப் திட்ட ஊழல் விசாரணை நிறைவு

தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

நெல்சிப் திட்ட ஊழல் - மோசடி தொடர்பான விசாரணை நிறைவு பெற்று அறிக்கை கையளிக்கப் பட்டுள்ளது. அதற்கமைய அதன் மீதான தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - இவ்வாறு வடக்குமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரி வித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு தொடக்கம், உலக வங்கியின் நிதி உதவியுடன் நெல்சிப் திட்டம் வடக்கில் நடை முறைப்படுத்தப்பட்டது. இந்தத் திட் டத்தில் மிகப் பெரிய ஊழல் - மோச டிகள் இடம்பெற்றிருக்கின்றன என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் குற்றம் சுமத்தியிருந்தார். இது தொடர்பில் அப்போதைய ஜனாதி

> "நெல்சிப் திட்டத்தில் சுமார் 100 கோடி ரூபா வரையில் ஊழல் இடம் பெற்றுள்ளது என்றும் 2014ஆம் ஆண்டு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இரு ஆண்டுகள் கழித்து அது தொடர்பான விசாரணை நிறைவுற்று அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டுள்ளது."

பதி மகிந்தவின் கவனத்துக்கும் அவர் கொண்டு சென்றிருந்தார். இதனையடுத்து அப்போதைய ஜனாதிபதி மகிந்தவால், அப்போதி ருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக ஓர் விசாரணை ஆரம்பிக் கப்பட்டது. அத்துடன்குற்றப் புலனாய்வுப்பிரிவினராலும் ஒரு விசாரணை ஆரம்பிக் கப்பட்டிருந்தது. இந்த இரண்டு விசாரணைகளும் முழுமையடையாத நிலை யில், வடக்கு மாகாண சபை யின் பொதுக் கணக்குகள் குழுவாலும்மூன்றுமாகாண சபை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு விசார ணைக்குழு அமைக்கப்பட் டிருந் தது.

இவற்றுக்கு மேலதிகமாக, வடக்கு மாகாண பிரதம செய லாளர் அ.பத்திநாதனால், மூவர் கொண்ட விசார ணைக் குழு கடந்த ஆண்டு ஜூன் மாதம் நியமிக் கப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களைக் கொண்ட விசார ணைக்குழு தனது அறிக்கையை மாகாண பொதுக் கணக்குகள் கு முவுக்கு சமர்ப்பித்துள்ள போதும், அது தொடர்பான விவரங் கள் வெளியிடப்படவில்லை.

பிரதம செயலாளரால் நியமிக் கப்பட்ட விசாரணைக்குழு, தனது விசாரணை அறிக்கையை கடந்த ஆண்டு இறுதியில் வடக்கு மாகாண ஆளுநர் பளிக்கார்விடம் சமர்ப் பித்திருந்தது. இந்த அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, ஆளுநர் தனக் குப் பணித்துள்ளார் என்று தெரி வித் துள்ள பிரதம செயலாளர் அ.பத்திநாதன், தொடர் நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். (ற-5)

நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.12

கலைஞர் வேல் ஆனந் தனின் 'ஆடல் உலகில் எனது சுவடுகள்' நூல் வெளியீடு நாளை சனிக் கிழமைபிற்பகல்3மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபம் குரு, கோபிநாத் நினை வரங்கத்தில் நடைபெற வுள்ளது.

கல்வி பண்பாட்டலுவல் கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவ காரஅமைச்சர் த.குரு குலராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளு நரின்செயலாளர் இ.இளங் கோவனும், இலங்கை நிர்வாகசேவை செல்வின் இரேனியஸ் மரியாம்பிள் ளையும், வடக்கு மாகாண பண் பாட்டலு வல் கள் திணைக்களத்தின் உத விப் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரத்தினமும் கலந்து கொள் ள வுள் ளனர். (ற-ஜ-ரி)

பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்,பெப்.12

வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நாளை சனிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு வலி. கிழக்கு கால்நடைவைத்திய நிலையமண்டபத்தில்நடை பெறும் என அறிவிக் கப்பட்டுள்ளது. தலைவர் மு. சிவசுந்தரலிங்கம் தலைமையில் நடை பெறும் இந்தக் கூட்டத்தில் சகல அங்கத்தவர்களை யும் தவறாது கலந்து கொள்ளுமாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-ரி)

கஞ்சா வைத்திருந்தவருக்கு 6 மாதங்கள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், பெப்.12

கஞ்சாவை உடைமையில் வைத்தி ருந்ததோடு விற்பனை செய்த குடும்பஸ்தருக்கு யாழ்.நீதிமன்று 6 மாதகால கடூழியச் சிறைத் தண் டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்ப்பாணம் குருநகர் பிர தேசத்தைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் கடந்த செப்ரெம்பர் மாதம் யாழ்.பொலிஸாரால் கைது செய் யப்பட்டார். அவர் கைது செய்யப் படும் போது 7 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என் றும், 2 கிராம் கஞ்சாவை விற்பனை செய்தார் என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நீதிமன்றின் கட்டளைப்படி அவர் தொடர்ச்சியாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். அந்தச் சந்தேக நபர் மூன்று மாத காலத்தின் பின்னர் பிணையில் விடப்பட் டிருந்தார்.

அவருக்கெதிரான குற்றப் பத்திரம் பொலிஸாரால் தாக்கல் செய் யப் பட்ட போது குற்றச்சாட்டுக்கு தான் குற்றவாளி என அவர் ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 3 மாத கால சிறைத்தண்டனை வீதம் 6 மாத காலத்துக்கு கடூழிய சிறைத்தண் டனை விதித்து நீதிவான் சி.சதீஸ் தரன் தீர்ப்பளித்தார். (ற-ஜ-4,103)

கட்டாக்காலி கால்நடைகளை பிடிப்பதற்கு நடவடிக்கை

யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.மாநகரப் பகுதியில் கட் டாக்காலிகளாக நடமாடும் கால் நடைகளை பொலிஸாரின் பாது காப்புடன் பிடிப்பதற்கு ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

நகரில் கட்டாக்காலிகளாக நட மாடும் குறிப்பிட்ட கால்நடை களை மாநகரசபை சட்ட விதிகளுக்கு அமைய பிடித்துக் கட்டுப்படுத்த வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கால்நடைகள் பொலி ஸாரின் பாதுகாப்புடன் பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலை யத்துக்கு அருகில் கட்டிவைத்துப் பாது காப்பதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டுள்ளது.

குறிப்பிட்ட நாள்களுக்குள் கால் நடைகளை உரியவர்கள் மாநக ராட்சி மன்றத்திடம் அதற்கான குற்றப்பணத்தை செலுத்தி கொண்டு செல்ல முடியும். இல் லாவிட்டால் இந்தக்கால்நடைகள் ஏலத்தில் விற்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-17)

INSTITUTE OF JUNIOR

Spoken & Written Elocution (எலக்கியூசன்)
பரீட்சையில் 100 புள்ளிகளைப் பெற்றவர்களைப்
பாராட்டுகின்றோம்.

✷ N.பரணிகா
✷ K. ஆரபி

✷ Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written)
4 வயதிலிருந்து 12 வயது வரை
✷ English Classes Gr.1 - O/L
20.02.2016 இற்கு முன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

இல.926, பருத்தித்துறை வீதி, நவாலி (சட்டநாதர் கோயில் முன்)
தொ.பே. 077 1999 630

(68851) (13.18.20.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடலங்களை பொறுப்பேற்குமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

இரண்டு ஆண்களின் சடலங்கள் உரிமை கோரப்படாத நிலையில் போதனா வைத்தியசாலையில் உள்ளன.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கவிச்செழியன் (வயது - 31) மற்றும் முகவரி தெரியாத தங்க வடிவேல் (வயது - 56) ஆகியோரது சடலங்களே உரிமைகோரப்படாது உள்ளன என்றும் இவர்களது உறவினர்கள் அல்லது உரித்துடையோர் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)

கும்பாபிசேகம்

தெல்லிப்பழைபன்னாலை மயிலையம்பதி சாமுண்டிகாசமேதஸ்ரீஞானவைரவர் ஆலய இராஜகோபுர கும்பாபிசேகம் இன்று காலை 6.36 மணி தொடக்கம் 8.15 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (ற-ஐ-ரி)

வீடமைப்புக் கடன்களை இரத்துச் செய்யுமாறு மனு

குளவிசுட்டான் கிராம மக்கள் கையளிப்பு

வவுனியா, பெப்.12

வவுனியாவில் வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட கடன்களை இரத்துச் செய்யுமாறு கோரி மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. குளவிசுட்டான் கிராம மக்கள் (நேற்று) வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதனிடம் குறித்த மனுவைக் கையளித்துள்ளனர்.

வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்ட குளவிசுட்டான் கிராமம் போரால் பாதிக்கப்பட்ட கிராமம் ஆகும். இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. ஆனால் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர் என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாழ்வாதாரத்தை இழந்துள்ள நிலையில் வீடமைப்புக்காகப் பெற்றுக் கொண்ட கடனை மீளச் செலுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. வீடமைப்பு அதிகார சபையால் 2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடனை தற்போதுள்ள பொருளாதாரச் சிரம நிலையில் மீளச் செலுத்துவது கடினமானதாக மாறியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வீடமைப்புக் கடன்களை இரத்துச் செய்ய வேண்டும் என்று அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

> “கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே காணப்படுகின்றது. எனினும் காட்டுயானைகளின் அட்டகாசத்தால் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.”

இது குறித்து கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன், போரின் பின்னர் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் வீட்டுத் திட்டத் தெரிவில் புறக்கணிக்கப்பட்டமை, காட்டு யானைகளின் தாக்கத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டமை, போக்குவரத்துப் பிரச்சினை என்பவை குறித்து மக்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் அடுத்து நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலர், பிரதேச செயலர், கிராம சேவையாளர் ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்கள் விடயத்தில் அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டும் - என்றார்.

(ற-ஐ)

மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.12

வடமாகாணத்தில் ஊர்காவற்றுறை, பளை ஆகிய பிரதேசங்களில் இயங்கிவரும் மத்தியஸ்த சபைகளின் உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சி நெறி ஒன்று நடத்தப்பட வுள்ளது.

வர்த்தகப் பிணக்குகளைத் தீர்ப்பது தொடர்பிலான மத்தியஸ்தம் பற்றிய இந்தப் பயிற்சி நெறி இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிறு வரை மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீதியிலுள்ள மிலேனியம் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது என்று - மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் எம்.எஸ்.ஆர். ஜோன்பிலிப் தெரிவித்தார்.

மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இந்த மூன்று நாள் பயிற்சி நெறியில் வர்த்தகப் பிணக்குகள் தொடர்பிலான மத்தியஸ்தம் பற்றிய விரிவுரைகளும், பயிற்சிகளும் வளவாளர்களால் வழங்கப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ற-ஐ-30)

அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

சாவகச்சேரி, பெப்.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அதிபர் பதவிகள் வெற்றிடமாக உள்ள 4 பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போக்கட்டி அ.த.க. பாடசாலை, சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம், கரம்பை அ.மி.த.க. பாடசாலை, கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி. ஆகியவற்றுக்கான அதிபர் பதவிகளுக்கே அதிபர் தரம் III ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ற-ஐ-9)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்



தோற்றம்
06 . 05 . 1938

மறைவு
24 . 01 . 2015

அமரர் இளையவி ஆறுமுகம்

நிஜமாக நீங்கள் மறைந்து
ஆண்டு ஒன்று ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூஜிப்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (12.02.2016) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூதவராயர் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (68832)(11.17.18.20) குடும்பத்தினர்.

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
24 . 08 . 1928

இறைவன் அடியில்
14 . 01 . 2016

அமரர் தெய்வானை வேலுப்பிள்ளை

கடந்த 14.01.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி தெய்வானை வேலுப்பிள்ளை அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், நாளை (13.02.2016) சனிக்கிழமை நடைபெற்று, தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி, முகநூல் மூலம் தொடர்பு கொண்டு துக்கம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் நேரடியாக வந்து சரீர உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மரணச் செய்தி கேட்டு எம்மோடு கலந்துகொண்ட அந்தியேட்டிக் கிரியைக்குச் சொல்லத் தவறவிட்டவர்கள் மன்னித்து இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முல்லையடி, பளை. (6883)(11.17.18.20) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொது இடத்தில் குப்பை கொட்டினால் அபராதம்

யாழ். மாநகர சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ். மாநகரப் பகுதியில் வீதியோரங்கள் மற்றும் பொது இடங்களில்கழிவுப்பொருள்களைக்கொட்டுவோருக்கு எதிராக தண்டப்பணம் அறவிடப்பட்டு வருகின்றது.

இதன் போது மாநகராட்சி மன்றத்தின் அறிவித்தலையும் மீறி வீதிகள் மற்றும் பொது இடங்களில் இவ்வாறு கழிவுப் பொருள்களைக் கொட்டிய சிலர் சிக்கிக் கொண்டனர். மாநகர கழிவகற்றும் பிரிவினரிடம் சிக்கிக் கொண்டவர்கள் அதற்கான தண்டப் பணத்தையும் செலுத்தியுள்ளனர். இதுவரைக்கும் 25 பேரிடம் இருந்து தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. இவ்வாறு கழிவுப் பொருள்களைக் கொட்டும் மக்களை கையும் மெய்யுமாக பிடிப்பதற்கு மாநகர கழிவகற்றும் பிரிவினர் இரவும், பகலும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டும் வருகின்றனர். இதற்கான கண்காணிப்பு பிரிவு ஒன்றையும் மாநகராட்சி மன்றம் அமைத்துள்ளது.

> "மாநகராட்சி மன்றத்தின் திண்மக் கழிவகற்றும் பணிக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்"

மாநகரப் பகுதியின் சகல இடங்களிலும் கழிவுப் பொருள்கள் கொட்டுவோர் பிடிக்கப்பட்டு, அவர்களிடம் தண்டப்பணம் அறவிடப்படும். மக்கள் கழிவுப் பொருள்களை பொது இடங்களில் கொட்டவேண்டாம் என்றும், அவற்றைச்சேகரித்துதரம்பிரித்து வைக்குமாறும் மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் கேட்டுள்ளார். மக்கள் கழிவுகளைத் தரம் பிரித்துச் சேகரிக்கும்போது, இலத்திரனியல் மற்றும் பொலித்தீன் வகைகளை வேறாக்கி வைத்து ஒப்படைக்குமாறும், மாநகராட்சி மன்றத்தின் திண்மக் கழிவகற்றும் பணிக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் – ஆணையாளர் கேட்டுள்ளார். (ற-ஐ-17)

வலி.வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்காக புதிய அமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

வலி.வடக்கு இடம் பெயர்ந்தோர் மக்கள் ஒன்றியம் எனும் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்று அந்த அமைப்பின் ஆலோசகர் கிருஷ்ணபிள்ளை மனோகரன் தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையுடன் வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து இந்த அமைப்பை உருவாக்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். பாடிவிருந்தினர் விடுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. அந்தச் சந்திப்பின்போதே குறித்த அமைப்பு உருவாக்கப்பட்டமை குறித்து தெரிவிக்கப்பட்டது.

இந்த அமைப்புத் தொடர்பில், ஆலோசகர் மனோகரன் தெரிவித்ததாவது:-

நலன்புரி முகாம்களில் தமது வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு இருக்கும் மக்களுக்கு ஆறுதல் வழங்கும் வகையில், வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. வலி.வடக்கில் இடம் பெயர்ந்த மக்களின் நலன் சார்ந்தும் மற்றும் தேவைகள் சார்ந்தும் இது இயங்கவுள்ளது.

இதன் தலைவராக ரட்ணராஜாவும், செயலாளராக விஜிதாவும், பொருளாளராக தவமும் நியமிக்கப்பட்டுள்ளனர். இடம் பெயர்ந்த மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை நீக்கும் முக்மாக என்னென்ன வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமோ, அந்த வேலைத் திட்டங்களை இந்த அமைப்பு முன் னெடுத்துச் செல்லும். 25 வருடங்களாக தமது வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு, என்ன செய்வ தென்று தெரியாது நலன்புரி முகாமுக்குள் தமது வாழ்க்கையைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த மக்களின் துன்பங் களையும் தேவைகளையும் நீக்கும் முகமாக யாழ். மாவட்டஅரசஅதிபர்நா.வேத நாயகன் மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோருடன் கலந்துரையாடி வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் வலி.வடக்கு மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் குறித்தும் உரிய நடவடிக்கைகள்மேற்கொள் வதற்கான அழுத்தங்களை இந்த அமைப்பு கொடுக்கவுள்ளது- என்றார்.

வலிவடக்கில்இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் வலி. வடக்கு மீள்குடி யேற்ற மற்றும் புனர்வாழ் வுச் சங்கம், மீள்குடியேற்றக்குழு ஆகிய அமைப்புக்கள் செயற் பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இந்தப் புதிய அமைப்பு உருவாக்கப்பட் டுள்ளது. (ற-5,106)

அரைக்கும் ஆலை திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.12

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நிதியின் மூலம் பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் 2 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அரைக்கும் ஆலை இன்று பிற்பகல் 2 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாணசபைஅவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும், கௌரவவிருந்தினராக மாகாண மீன்பிடி மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப்பணிப்பாளர் ஜே.ஜே. பெலிஸியன், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் நா.பஞ்சலிங்கம் ஆகியோரும்கலந்துகொள்ளவுள்ளனர். (ற-ஐ-9)

சாவகச்சேரி நீதிமன்ற சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட குருதிக் கொடை நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில் இடம்பெற்றது. அதில் பலர் கலந்து கொண்டு குருதிக் கொடையை வழங்கினர். (ற-ஐ-9)

பழரசப் பானங்களில் அதிகளவு இரசாயனப் பொருள்கள் கலப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

பழரசப் (கோர்டியல்) பானங்களில் அதிகளவு இரசாயனப் பொருள்கள் கலக்கப்படுவது பரிசோதனைகளின் ஊடாகத் தெரியவந்துள்ளது. அவ்வாறான உற்பத்தியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். – இவ்வாறு பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி தனசேகரம் வசந்தசேகரன் தெரிவித்தார்.

கடந்த மாதம் மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட கோர்டியல் உற்பத்தி நிறுவனத்துக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, உற்பத்தியாளர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம்விதிக்கப்பட்டதுடன், நீதிமன்றால் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டும் விடுக்கப்பட்டிருந்தார். உள்ளூர் உற்பத்தியாளர்கள் அதிகளவு கெமிக்கல் கலந்துதமதுபழரசப்பானங்களை உற்பத்தி செய்வதை நிறுத்த வேண்டும் – என்றும் அவ் வேளை அவர் குறிப்பிட்டார்.

தற்போது 9 விதமான பழரச பானங்களின் கலவைகள் சில சேகரிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பானங்கள் உணவுஇரசாயனகுப்பாய்வுக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பானங்களின்பகுப்பாய்வுஅறிக்கைவந்ததன் பின்னர் உற்பத்தியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஐ-106)

மணவாளக் கோலமும் சங்காபிசேகமும்

யாழ்ப்பாணம், பெப்.12

கொழும்புத்துறை மேற்கு வதரி பீட மன்றுளாடும் விநாயகப் பெருமான் மற்றும்பழனியாண்டவர்ஆலய மணவாளக்கோல திருவிழாவும், சங்காபிஷேகமும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 108சங்காபிசேகமும், விசே பூசையும் இடம்பெற்று நண்பகல் மகேஸ்வரப் பூசையும்இடம் பெறும். தொடர்ந்து மாலை 6 மணிக்கு சுவாமி பூச்சப்பறத்தில் எழுந்தருளி வீதி வலம் வருவார். (ற-ஐ-17)

சேதனப் பசளைப் பாவனையை ஊக்குவிக்க 'மல்டி சொப்பர்' இயந்திரம் யாழில் அறிமுகம்

அச்சுவேலி, பெப்.12

சேதனப்பசளைப் பாவனையை ஊக்குவிக்கும் வகையில் 'மல்டி சொப்பர்' இயந்திரம் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அந்த இயந்திரம் சேதனப் பசளைக்கானமூலங்களைசிறுசிறு துண்டுகளாக்கி எளிதில் உக்கக் கூடியனவாக மாற்றுகின்றது.

பனை ஓலை, வாழைத் தண்டுகள் மற்றும் பூவரசங்குழை போன்ற சேதனப்பசளைக்கான மூலப் பொருள்களை ஒரு சென்றிமீற்றர் நீள அகல பரிமாணத்தில் இந்த இயந்திரம் துண்டுகளாக்கும். ஒரு மணி நேரத்தில் ஐந்து தொன் பசளைப் பொருள்களை இது சிறு துண்டுகளாகுகின்றது.

இயந்திரத்தால் துண்டுகளாக்கிய சிறுதுண்டுகளைசூல்கலப்பையால் உழுதுவிட்டால் மண்ணில்மறைத்து சில தினங்களில் அவை உக்கி சேதனப்பசளையாகி விடும்.

விவசாயிகள் தமது சேவைகளுக்கு பிரதேச விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்மாவட்டவிவசாயப்பணிப்பாளர் பாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சி.பாலசுந்தரம் தெரிவித்ததாவது:-

விவசாயிகள், குப்பையில் இருந்து உக்குவதற்கு காலம் செல்லும் எனக்கருதும் சேதனப்பசளை மூலங்களை வெளியே வீசிவிடுவது உண்டு. ஆனால், இந்த இயந்திரம் அத்தகைய மரம், தடி துண்டங்களையும் வெட்டி சிறுசிறு துண்டங்களாக்கி விடுகின்றது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இந்த இயந்திரம் விவசாயிகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். கழிவுப் பொருள்களை சிறு துண்டுகளாக வெட்டிவிடுவதால் தோட்டங்களில் அவற்றை விசிவிட்டு கொத்தி அல்லது உழுது விடலாம். இதன் மூலம் தரமான சேதனப் பசளையை குறைந்த செலவுடன் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் இந்த இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகள் சேதனப்பசளைப் பயன்பாட்டை அதிகரிக்கலாம். 'மல்டி சொப்பர்' இயந்திரத்தை அறிமுகம் செய்யும் வகையில் விவசாயக் கிராமங்களில் இயக்கிக் காண்பிக்கும் செயல்முறை வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதனைப் பயன்படுத்தி விரும்புபவர்கள் தமது பிரதேச விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம் – என்றார். (ற-ஐ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,பெப்.12

ஆஸ்திரேலியக் கவிஞர் தம்பிப்பிள்ளை நந்திவர்மனின் 'எழில் பூக்கள்' கவிதை நூல், 'இசைக் குறுந்தகடு'அறிமுகவிழா நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

நிகழ்வில் நூல் நயவுரையை யாழ். பல்கலைக் கழக தமிழ்த் துறை முன்னாள் தலைவர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார். (ற-ஐ-ரி)

ஐ.தே.க. தொகுதி அமைப்பாளர் பதவி சரத் பொன்சேகாவுக்கு ?

கொழும்பு, பெப் 12
முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியொன்று வழங்கப்பட உள்ளதாகக் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரி விக்கின்றன.
கோட்டே தொகுதி அமைப்பாளர் பதவியை அவர் கோரியுள்ள தாகவும், அதற்குக் கட்சித் தலை மைத்துவம் இணங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை, அம்பலாங் கொடை தொகுதி அமைப்பாளர் பதவியை அவருக்கு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைமை இணங்கியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொகுதி அமைப்பாளர் பதவி வழங்குவது மற்றும் பெற்றுக் கொள்வது குறித்து இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்பட வில்லை. (தி)

திருகோணமலையில் கலாசார நிலையங்கள்

கொழும்பு, பெப் 12
திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, கோமரன்கடவெல மற்றும் மொரவெவ ஆகிய பிரதேசங்களில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட 3 கலாசார நிலையங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி திறந்து வைக்கப்பட வுள்ளன.
திருகோணமலை மாவட்ட அரச அதிபர் என்.ஏ.ஏ.புஷ்பகுமார வின் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வுகளில் உள்ளக அலுவல்கள் வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச் சர் எஸ்.பி.நாவின்ன பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு குறித்த கலாசார நிலையங் களைத் திறந்து வைக்கவுள் ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.
இதன்படி, குச்சவெளி பிரதேச கலாசார நிலையம், முற்பகல் 10 மணிக்கும், கோமரன்கடவெல கலாசார நிலையம், பிற்பகல் 2 மணிக்கும், அமைச்சரினால் திறந்து வைக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (தி)

வாளால் வெட்டியவருக்கு இரு வருடக் கடூழியச் சிறை

மல்லாகம் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 12
வாளால் வெட்டிக் காயப்படுத்திய நபரொருவருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது நீதி மன்று. அத்துடன் பாதிக்கப் பட்டவருக்கு ஒரு லட்சம் ரூபா நட்டஈடு செலுத்துமாறும்நீதிமன்று பணித்தது. வாள் வெட்டுக்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில்அதில்ஈடுபட்டஒருவருக்கு இத்தகைய கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட் டுள்ளது.
மல்லாகம் நீதிமன்ற மேலதிக நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னி லையில் இந்த வழக்குத் தீர்ப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டி ருந்தது.
அளவெட்டியில் 2014 ஆம் ஆண்டு தாச்சிச் சுற்றுப் போட்டி இடம்பெற்றுள்ளது. இதன்போது ஏற்பட்ட சூழ்நிலைகளால் அள வெட்டி கனி என்றழைக்கப்படும் அழகன் ரணேஸ்வரன் என்பவர் தே.ஜெகதாஸ் உள்ளிட்ட 3 பேரை வாளால் வெட்டிக் காயம் ஏற்

> “ரணேஸ் வரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டபோது தான் சுற்ற வாளி என்று சுமறி யிருந்தார் சந்தேக நபர்.”

படுத் தியிருந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டது.
இதனடிப்படையில் ரணேஸ் வரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன் றில் முற்படுத்தப்பட்டபோது சந் தேகநபர் தான் சுற்றவாளி என்று கூறியிருந்தார்.
இதனால் அந்த வழக்கை விசா ரணை செய்ய நீதிமன்று தீர்மா னித்தது. அதன்படி விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டு வந் தன. அந்த விசாரணைகளின் போது முதலிரண்டு பேரையும் வாளால் வெட்டியமை போதியஆதாரங்கள்மூலம் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் 3 ஆவது நப ருக்குவாளால்வெட்டியமை விசாரணையின் மூலமா கக் கடந்தமாதம் உறுதிப் படுத்தப்பட்டது. அதன்படி ரணேஸ்வரன் குற்ற வாளியாகநீதிமன்றினால் இனங்காணப்பட்டார்.
இதனையடுத்துஅவருக்குத் தண்டனை வழங்குவதற்காக வழக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இதன்போது குறித்த நபருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டது. அத்துடன்பாதிக்கப்பட்டவருக்குஒரு லட்சம் ரூபாவை நட்டஈடாகச் செலுத்த வேண்டும் என்றும், அதனைச் செலுத்தத் தவறின் மேலும் ஒரு வருட காலம் சிறைத் தண்டனை அனு பவிக்கவேண் டும் என்றும் நீதிமன்று தீர்ப் பளித்தது. (த-4-86)

ரோசி சேனநாயக்க கடும் அதிருப்தியில்

கொழும்பு, பெப் 12
முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கியமை தம்மை மிகவும் கவலையடையச் செய்துள்ளதாக முன்னாள்மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடக மொன்றுக்கு வழங்கியநேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
ஐக்கியதேசியமுன்னணியின் தேசி யப் பட்டியல் நாடாளுமன்ற உறுப் புரிமைசரத்பொன்சேகாவுக்கு வழங் கப்பட்டமைஎன்னை அதிருப்தி அடை யச் செய்துள்ளது.
இதனால் கட்சியின் ஆதர வாளர் களுக்கும் கடும் அநீதி இழைக்கப் பட்டுள்ளது.
பலஆண்டுகளாக கட்சிக்காக நான் செய்தி ருந்த அர்ப்பணிப்புக்களுக்கு உரிய அங்கீகாரம் வழங் கப்படவில்லை.
கட்சியின் ஆதரவாளர் களுக்காகத் தொடர்ந்தும் கட்சியில் வகித்துவரும் பதவிகளில் நீடிப்பேன்.
அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டுமென பல்வேறு கருத்துக்கள் முன்வைக் கப்படுகின்றன. எனினும் பெண் என்ற கார ணத்தி னால் எனது நாடாளுமன்ற உறுப்புரிமை பறிபோனது.
ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்புரிமை எனக்கும் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கும் வழங்காது வேறு கட்சியை சேர்ந்த ஒருவருக்கு வழங்கியமை அநீதியான செயலாகும்.
தேசியப்பட்டியல் ஆசனம் தொடர்பிலான தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவினால் எடுக்கப் பட்டதல்ல, அமைச்சரவை யினால் எடுக்கப்பட்டது என ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (தி)

பிள்ளையானின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, பெப் 12
தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் கட்சியின் தலைவரும், முன் னாள் கிழக்குமாகாணமுதலமைச் சருமான சிவநேசதுரை சந்திர காந்தன் உட்பட மூவருக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள் ளது.
குறித்த மூவரையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மட் டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராசா நேற்று முன் தினம் உத்தரவிட்டுள்ளார்.
கிழக்கு மாகாணத்தின் முன் னாள் முதலமைச்சரும் ,தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவ நேசதுரை சந்திரகாந்தன், தேசிய அமைப்பாளரும் முன் னாள்மாகாணசபை உறுப் பினருமான பிரதீப் மாஸ்டர், கஜன் மாமா எனப்படும் கன கநாயகம் மற்றும் இராணுவ புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல் ஆகியோருக்கே விளக்க மறியல் நீடிக்கப்பட் டுள் ளது. (தி)

மரண அறிவித்தல்

வடிவேலு சிவசுப்பிரமணியம்

தோற்றம்
15 . 06 . 1944

மறைவு
10 . 02 . 2016

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வடிவேலு சிவசுப்பிரமணியம் 10.02.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பராசக்திராசா மற்றும் சச்சிதானந்தம், வைத்தீஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் யோகமங்களம், இராசமணி, தங்கமலர், சிவமனோகரி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் சுயாகரன், பாஸ்கரன், கவிதா, மனோகரன், விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரியரின் பாசமிகு பெரிய தந்தையும் சிவாஜினி, ஞானசேகரன், காண்டீபன், சிவராகினி, விஜிதா, சுபாங்கி ஆகியோரின் அன்பு மாமனும் கிருசாந், திவ்யா, கிருபிகா, செந்தூரா, பவிந், விதுன், விமன், அபிதன், வினுதன், கியாஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று(12.02.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடையார் வளவு, இடைக்காடு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(68857)(14.18.20)

பிரியன் (077 776 7742), பாஸ்கரன் (077 756 5903)

பிடிபடும்போது 8 ஆக இருந்த மாடுகள் குற்றப் பத்திரத்தில் 5 ஆகியது எப்படி?

யாழ்ப்பாணம், பெப்.12
பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட போது எட்டாக இருந்த மாடுகளின் எண்ணிக்கை நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபோதுஐந்தாகக்குறைவடைந்த சம்பவமொன்று கடந்த 8ஆம் திகதி யாழ்.நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது.
கடந்த சனிக்கிழமை கோப்பாய் பகுதியில் வைத்துகோப்பாய்பொலிஸாரால்8மாடுகளை மிருகவதை செய்யும் வகையில் கொண்டு சென்றமைதொடர்பாகயாழ்ப்பாணம்சோனக தெருவைச்சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பிலுத்தித் சென்ற டிமோ பட்டா வாகனத் துடன்சேர்ந்த 8 மாடுகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. நேற்று இந்த வழக்கு நீதி மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பொலிஸாரால் 5 மாடுகளை மிருக வதை செய்யும் வகையில் கொண்டு சென்ற தாகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப் பட்டது. இது தொடர்பாக மாடுகளின் உரிமையாளர் சட்டத்தரணி ஒருவரூடாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதனையடுத்து பொலிஸாரிடம் நீதிமன்றம் இது தொடர்பாக வின வியபோது மாடுகளை வாகனத்திலிருந்து இறக்கும் போது அவை தப்பியோடி விட்டதாகவும், அவற்றைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணி யில் பொலி ஸார் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து பொலிஸாரை இன்று வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய நட வடிக்கை எடுத்து நீதிமன்றுக்கு அறிக்கை யிடுமாறு நீதிமன்றம் பணித்தது.(த-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நாவின் தீர்மானத்தை செயற்படுத்த விடோம்

மகிந்த அணி உறுதி

கொழும்பு, பெப்.12

இராணுவத்தைத் தண்டிக்கும் செயற்பாட்டை தம்மிடம் இலங்கை அரசு வழங்கியுள்ளது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கூறியுள்ளார். எனவே, ஐ.நா. தீர்மானம்தொடர்பில் இலங்கை அரசு உடனடியாகத் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும். அதேவேளை, இந்தத் தீர்மானத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்த ஒரு போதும் நாம் அனுமதியளிக்கப்போவதில்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். அதற்கு எதிராக நீதிமன்றம் செல்லவும் தயங்கமாட்டோம்.

-இவ்வாறு மகிந்த ஆதரவு அணியான பொது எதிரணி சூளுரைத்துள்ளது.

பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துவிட்டுச் சென்றுள்ளார். இதில் முக்கியமாக இராணுவம் பற்றியகருத்துகள் முற்றுமுழுதாக அசாதாரணமானவையாகும்.

இராணுவத்தின் மீது கறைபடிந்துள்ளதால் இராணுவத்தின் நன்மதிப்பின் மீதும் கறைபடிந்துள்ளது. இதை இராணுவம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த அபகீர்த்தியை நிவர்த்திசெய்ய முறையான உபாயமார்க்கத்தை எடுக்கவேண்டும். அதேபோல், ஐ.நா. அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைக்கு அமைய இலங்கை இராணுவத்துக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ள சாதாரண காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதாவது, இலங்கை இராணுவம் குற்றமிழைத்ததற்கான ஆதாரம்

உள்ளது. அதனால் இராணுவத்துக்கு எதிராக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெளிவாகக் கூறியுள்ளார்.

> இராணுவத்தின் மீது கறை படிந்துள்ளதால் இராணுவத்தின் நன்மதிப்பின் மீதும் கறை படிந்துள்ளது. இதை இராணுவம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த அபகீர்த்தியை நிவர்த்திசெய்ய முறையான உபாய மார்க்கத்தை எடுக்கவேண்டும்.

மனித உரிமைகள் ஆணையகம் ஓர் ஒப்பந்த அடிப்படையிலேயே ஆதாரங்களைப் பெற்றுக்கொண்டு வருகின்றது. அதாவது, கருத்துத் தெரிவிப்பவர்களின் பெயர்களோ அல்லது விவரங்களோ 20 வருடங்களுக்கு வெளிப்படுத்தப்பட மாட்டாது என்ற அடிப்படையில். எனவே, அதில் எவ்வாறு நம்பிக்கை கொள்வது?

இலங்கை இராணுவத்தினருக்கு எதிராகவே ஆணையாளர் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். விசேட நீதிமன்றம், விசேட சட்டங்கள் என்பன இருக்கவேண்டும். எதிர் காலத்துக்கு ஏற்றவகையில் குற்றவியல் சட்டங்கள் திருத்தப் படவேண்டும். இவை அனைத்தும் செய்து எமது இராணுவத்தை ஒடுக்க முடியாவிடின் இராணுவத்தைக் கையாளும் புதிய நிர்வாக முறையொன்றை அறிமுகம் செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இவர் இலங்கை இராணுவத்தை மட்டுமல்ல, நீதித் துறையின் சுயாதீனத்தையும் விமர்சிக்கின்றார். இலங்கையில் நீதித்துறை அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நீதியை எதிர்பார்க்க முடியாது. தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இன்னமும் இங்கு காணப்படுகின்றன எனப் பெரிய முறைப் பாடுகளை முன்வைத்து சர்வதேச நீதிபதிகளின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இன்றி நடைமுறைப் படுத்தப்படும் என்று ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தம்மிடம் தெரிவித்துள்ளனர் எனக் கூறுகிறார். எனவே, இலங்கை இராணுவத்தைக் காட்டிக் கொடுத்து தண்டிப்பதுதான் அரசின் நிலைப்பாடா? இது தொடர்பில் அரசு உடனடியாக மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார். (த-சி)

நல்லாட்சி அரசின் செயற்பாடுகளை வரவேற்றுள்ளார் ஐ.நா. ஆணையாளர்

தீர்மானம் தொடர்பில் குழப்பம் வேண்டாம் என்கிறது சு.க.

கொழும்பு, பெப்.12

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல்ஹுசேன் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டபோது அரசுக்குப் பெரிய அழுத்தங்களைப் பிரயோகிப்பார் என நாங்கள் எதிர்பார்த்தபோதிலும், அவர் நல்லாட்சி அரசின் செயற்பாடுகளை வரவேற்றிருந்தமை சர்வதேசத்தில் எமக்குக் கிடைத்துள்ள அங்கீகாரத்தைப் பறைசாற்றுகின்றது.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

எவர் என்ன கூறினாலும், சர்வதேச நீதி மன்றத்துக்கு ஒருபோதும் இலங்கை அரசு இடமளிக்கப்போவதில்லை என சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெளிவாகக் கூறியுள்ளார். ஆகவே, ஹுசேனின் பயணம் தொடர்பில் எவரும் குழம்பமடையத் தேவையில்லை. அத்துடன் எவரையும் குழப்பவும் வேண்டாம் என்றும் சு.க. தெரிவித்துள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசேன் தனது இலங்கைப் பயணம் தொடர்பில் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் சர்வதேச பொறிமுறையை வலுவூட்டும் வகையிலேயே கருத்துத் தெரிவித்திருந்தார். இது இலங்கைக்குப் பாரதூரமாக அமையுமல்லவா? என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அமைச்சர் பைசல் முஸ்தபா மேற் கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படும் செயற்பாடுகளை அரசு மேற்கொள்ளாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஐ.நா.விலும் நாங்கள் எமது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறியுள்ளோம். சர்வதேசத் தலையீடுகள் இல்லாவிட்டாலும், தொழில்நுட்ப அறிவுகளுக்காக சர்வதேசத்தின் உதவிகளைப் பெறுவோம். கடந்த ஆட்சியிலும் சர்வதேச தொழில் நுட்ப உதவிகள் பெறப்பட்டிருந்தன.

ஐ.நா. ஆணையாளர் தனது இலங்கைப் பயணத்தின்போது நடத்தியிருந்த ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் அரசின் செயற்பாடுகளை வரவேற்றிருந்தார். இலங்கை அரசு இதனை எதிர்பார்க்கவில்லை. கடந்த காலங்களில் சர்வதேசம் எம்மை மட்டம்தட்டவே பார்த்தது. எனினும், இன்று எமக்கு நல்ல அங்கீகாரம் கிடைத்துள்ளதைக் காணமுடிகின்றது.

இலங்கை விவகாரம் தொடர்பில் எவர் என்ன கூறினாலும், அரசின் நிலைப்பாட்டுக்கு அமையவே அனைத்தும் முன்னெடுக்கப்படும். அதேவேளை, அனைத்துத் தீர்மானங்களையும் நாடாளுமன்றமே எடுக்கும்-என்றார். (த-சி)

வெல்லம்பிட்டியில் மூன்று பேர் சுட்டுக் கொலை

கொழும்பு, பெப்.12

கொழும்பு புறநகர்ப் பகுதியான வெல்லம்பிட்டிப் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

20 வீட்டுத் தோட்டப் பகுதிக்கு கடந்த செவ்வாய் இரவு சுமார் 11.45 மணியளவில் ஓட்டோவில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவர்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என வெல்லம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கித்தம்பஹுவ பகுதியைச் சேர்ந்த 19, 24 மற்றும் 49 வயதுடைய மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மூவரும், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், வெல்லம்பிட்டிய பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் செறிவான மேற்படி பிரதேசத்தில் இடம் பெற்ற இந்தக்கொலைகள் பிரதேச வாசிகளை மிகுந்த அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன.

இதேவேளை - உயிரிழந்த மூவரும் முன்னாள் பிரபல பாதாள உலகக்குழுவைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் பிரின்ஸ் கொலம் என்பவரது சகாக்கள்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

உள்ளூராட்சி நிறுவனங்களது பிரிவுகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான முறையீடுகள் / மேன்முறையீடுகள் மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட கால எல்லையை முடிவுறுத்தல்

உள்ளூராட்சி நிறுவனங்களது பிரிவுகளின் எல்லை நிர்ணயக் குழுவுக்குத் தமது முறையீடு / மேன்முறையீடுகளை மேற்கொள்ள 2015.11.27 ஆம் திகதிய செய்திப் பத்திரிகை விளம்பரம் மூலம் பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்ட கால எல்லை 2015.11.30 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

ஆயினும் இதுவரை சில தரப்புக்களிடமிருந்து முறையீடுகள் / மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. எல்லை நிர்ணயக் குழுவின் குறித்த விடயம் தொடர்பான செயற்பாடுகள் விரைவாக முடிவுறுத்தப்பட வேண்டியுள்ளதால் 2016 பெப்ரவரி 20 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் முறைப்பாடுகள் / மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்பதை இத்தால் அறியத் தரப்படுகிறது.

அதன்படி இன்னமும் முறைப்பாடுகள் / ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பின் 2016.02.20 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எச்.ரீ.கமல் பத்மசிறி
செயலாளர்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
இல.330, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

(அ/29259)(11.17.18.20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

இனப்பாகுபாட்டை உதைத்துத் தள்ள வேண்டியவேளை இது

வடக்கு, கிழக்கில் வாழும் மலையகத் தமிழ் மக்கள், மலையகத் தமிழர் என்ற தேசிய இனத்துவ அடையாளத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

இலங்கையின் உத்தேச புதிய அரசமைப்பின் ஊடாக அதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்படுவது தவிர்க்க முடியாத தேவை யாகும்.

மேற்கண்ட கோரிக்கை (கருத்து என்றும் கொள்ளலாம்), புதிய அரசமைப்பு யாப்புக்குக் கருத்தறியும் குழுவினர்கள் கிளிநொச்சியில் நடத்திய அமர்வின்போது மேலெழுந்தது, முன்வைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட் டத்தில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மலை யகத் தமிழ் மக்களே, குறித்த கோரிக்கையை முன்வைத்தனர்.

கிளிநொச்சி மாவட்டச் சனத்தொகையில் நாற்பத்தைந்து சதவீதத்தினர் மலையகத்தில் இருந்து வந்தவர்களே, இப்போதும் வாழ்ந்து வருபவர்களே.

குறிப்பாகச் சொல்லப்புகின், கிளிநொச்சி மேற்கில், பதினாறு கிராம சேவையாளர் பிரிவுகளில், மலையகத்தில் இருந்து வந்தோர் குடியேற நேர்ந்தமை, 1983 ஆம் ஆண்டில், ஜூலைக் கலவரத்தின்போது அப்போதைய அரசு, இனக் கலவரத்தை அடக்குவதற்கு முன் னுரிமை கொடா மல், தமிழ் இனத்தவர்களைப் பூண்டோடு அழிக்க உத்வேகத்துடன், ஒருவகை வெறியுடன் செயற் பட்டதன் பெறுபேறுகளின் விளைவே என்பதை அனைத்துலக அரசுகளும் அறியும்; அவற்றின் மக்களும் அறிவர்.

தமிழர்கள் என்றால் தென்னிலங்கை மற்றும் மலையகப் பிரதேசங்களில் இருந்து துரத்தப்பட வேண்டியவர்கள் என்ற சிங்கள அரசியல்வாதி களின், இனவெறியர்களின் (எல்லோரும் அல் லர்) சூழ்ச்சியின் பெறுபேறுகள், இந்த நாட்டின் இருண்ட "யுகம்" எனக்கொள்ளத் தக்கது. அது அனைத்துலகமும் அறிந்த, கண்டித்த கொடுமை என்றாகியது.

மலையகத்தில் இருந்து இடம்பெயர வைக்கப்பட்ட மக்கள், வடக்கு நோக்கி வந்த மறுபுறத்தில், மலையகத்திலிருந்து வந்த தமிழ் உறவுகள் எமது மண்ணைத் தமது உழைப்பின் மூலம் மகிமைப்படுத்தினர் எனின் தவறன்று.

இதேவேளை--

வடக்கு, கிழக்குக்குக் குடிபெயரச் செய்யப் பட்ட மலையகத் தமிழ் மக்களின் கருத்துக்கள், நாட்டின் அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட வேண்டும். அது தவிர்க்கப்படக்கூடாத ஒன்று.

மொத்தத்தில், பல்லின மக்கள் வாழும் எங்கள் நாட்டில்-ஈழத்தில்-இன, மத, மொழி பேதம் கடந்த மானிட நேயத்துக்கு மதிப்பளித்துச் செயற் பட வேண்டியது காலத்தின் தேவை.

இது குறித்து தென்னிலங்கை அரசியல் தலைவர்கள், அவர் தம் கட்சிகள், மனம் கொள்ளவேண்டிய காலம் நெருங்குகிறது. அதனை மனதில் கொண்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

மானிட நேயத்துக்கு முதன்மை நல்கும் வகை நாடி, வழி தேர்ந்து, இனப்பாகுபாட்டை எட்டி உதைத்துத் தள்ளி, நல்லாட்சி அரசு செயற்பட வேண்டும். எதிர்பார்க்கலாமா என்ன....?

அடுப்பு கணக்கான சூட்டில் இருக்கிறது; சோறு சமைக்கப்பட்டேயாக வேண்டும்

ஆங்கிலமூலம்;
சார்ள்ஸ் கவிலான்ட், பி.பி.சி.
தமிழில்; தேவிந்தி

இந்துக்களின் பெருங் காவியமான இரா மாயணத்தின் பெரும் பகுதி இலங்கையில் தான் நிகழ்ந்தது. ஆனால், அந்தத் தீவின் வாழ்க் கையில் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததா கத் தோன்றிய குடும்பத்தின் மீதான மக்களின் மோகம் வீழ்ந்து நொறுங்கியதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டில் அல்லது அதன் பின்பாக தீவு புதியதொரு காவி யத்தைக் கண்டிருக்கிறது.

ஒரு வருடத்துக்கு முன்னர் மகிந்த ராஜபக்ச தனது பதவியை இழந் தைத் தொடர்ந்து, அவரது பதவி யைப் பிடித்தவர் (மைத்திரி), மகிந்த கட்டியெழுப்பிய அதிகார வலையமைப்பைக் கலைத்து வருகிறார். அதன் ஆகப் பிந்திய உதாரணம், ஊழல் குற்றச்சாட் டுக்களுக்கான மகிந்தவின் மனைவி கடந்த வாரம் விசார ணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், மகன்மாரில் ஒருவர் பண மோச டிக் குற்றச்சாட்டில் கைது செய் யப்பட்டும் உள்ளமை.

மகன் யோசித கைது செய்யப்பட்ட சில மணி நேரத்தில், தன்னையும் தனது குடும்பத்தையும் பழிவாங் குவதற்காக பண மோசடிச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது என்று மகிந்த சாடிக் கொண்டிருக்கை யில், கண்கள் கலங்கிக் குளமான நிலையில் முன்னாள் அரச தலை வர் மகிந்தவின் ஒளிப் படத்தை ஒரு படப்பிடிப்பாளர் பதிவு செய்தார். கடந்த ஆண்டு முற்பகுதியில் மகிந்த ராஜபக்ச அரச தலைவர் பதவியில் இருந்து வெளியேறி யதைத் தொடர்ந்து, வெல்லப் படவே முடியாதது என்று கணிக் கப்பட்ட ஒரு குலத்தின் எதிர்காலம் எப்படி வீழ்ந்து நொறுங்கியுள்ளது என்பதை அந்த ஒளிப்படம் எடுத் தியம்பியது.

மகிந்தவும் சகோதரர்களும்

மகிந்த, அவரது இரு சகோதரர் கள் ஒரு காலத்தில் பாதுகாப்புத் துறையையும் பொருளாதாரத் தையும் கட்டுப்படுத்திய மிகப் பலம் பொருந்தியவர்கள். அவ ரது மனைவி, அவரது இரு மகன் மார் ஆகியோர் நீண்ட குற்றச் சாட்டுப் பட்டியலின்கீழ் ஒன்றில் விசாரணைக்கு உட்படுத்தப் படுகின்றனர். அல்லது கைது செய் யப்படுகின்றனர். இந்தக் குற் றச்சாட்டுக்களையெல்லாம் அவர்கள் மறுக்கிறார்கள். ஆனால், ஆயுதங்களுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுக் கள்கூட பட்டியலில் அடங்கி யுள்ளன.

மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற் படுத்துமளவுக்குப் மிகப் பெரும் பொதுமக்கள் இழப்பு களை ஏற்படுத்தியது ஒருபுறம் இருந்தாலும், 30 வருடங்க ளாகத் தொடர்ந்த தமிழ்ப் பிரி வினைவாதத்தை அழித்தமைக் காக மகிந்த ராஜபக்சவை பெரும் பான்மைச் சிங்களவர்களில் அனேகர் வரவேற்கிறார்கள்.

அதேசமயம், ஆட்சி அதிகாரத் தில் இருந்தபோது மகிந்தவின் குடும்பம் அனுபவித்த உல்லாசம், மக்கள் மத்தியில் விசனத்தையும் வெறுப்பையும் வளர்த்திருந்தது. அதுவே, மைத்திரிபால சிறிசேன வெற்றிபெறுவதற்கு உதவியது. மகிந்தவுடன் கருத்து வேறுபாடு களைக் கொண்டிருந்தவர் அவர். கடற்படையில் இளம் ராஜபக்ச வுக்கு (யோசித) நெறிமுறைகளை மீறிய பதவி உயர்வு வழங்கப்பட் டிருந்ததாகவும், அளவுக்கதிக மான சலுகைகள் வழங்கப்பட்டி ருந்ததாகவும் அதிகாரிகள் இப் போது குற்றஞ்சாட்டுகிறார்கள்.

முன்னாள் அரச தலைவரின் மக னான அவருக்கு ஒரு பெண் மீது மோகம் ஏற்பட்டபோது, அதில் போட்டிக்கு வந்தார் எனக்கூறப் படும் ரக்பி விளையாட்டு வீரர் ஒருவர் கொல்லப்பட்டதில் மகிந் தவின் முன்னாள் பாதுகாப்பு அலு வலர் தொடர்புபட்டிருந்தார் என்று கடந்த ஆண்டு அமைச்சர் ஒரு வர்கூடக் குற்றஞ் சாட்டியிருந்தார்.

சட்டத்தின் கனம்

சட்டத்தின் கனம் என்ன என்பதை இப்போது உணர்பவர்கள் ராஜ பக்சாக்கள் மட்டுமல்ல, புத்த பிக்கு கள் மற்றும் படையினரும் கூடத் தான். இந்த இரு பகுதியினருமே இப்போது கையறு நிலையை அடைந்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பெண் ஒருவர் கூட்டு வன் புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பான வழக்கில் வழக்கத் துக்கு மாறாக 4 படையினருக்கு நீண்டகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

6 வருடங்களுக்கு முன்னர் காணாமற்போய்விட்ட கேலிச் சித்திரக் கலைஞரும், பத்திரிகை யாளருமான பிரகீத் எக்னெலி கொட கொலை வழக்கில் அரச புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டிருக்கி றார்கள். அத்தோடு, பிரகீத்கொலை தொடர்பான வழக்கு விசாரணை நடந்த நீதிமன்றத்தை முற்று கையிட்டமைக்காகவும் பிரகீத் தின் மனைவிக்கும் விசாரணை களை நடத்தும் அதிகாரிகளுக் கும் சாபமிட்டதற்காகவும், கடும் போக்கு வாதியான பிக்கு கல கொட அத்தே ஞானசார தேரரும் கடந்த மாதம் கைது செய் யப்பட் டார். கட்டமைப்பு ரீதியான மாற்றங் கள் நடக்கின்றன என்பது தெரி கின்றது. இப்போது, அடுப்பு கணக்கான அளவான சூட்டில் இருக்கிறது; சோறு கட்டாயம் சமைக்கப்பட்டாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொஹான் எதிரிசிங்க

அரசமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகள் இலங்கையில் முற்றாக நிராகரிப்பு என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளிவந்த கட்டு ரையின் தொடர்ச்சி

இலங்கைக்குப் பொருத்தமில்லாத ஜனாதிபதி ஆட்சிமுறை

1970களின் தொடக்கத்தின்போது ஜனாதிபதி ஆட்சி முறை குறித்த விடயம் கலந்துரையாடப்பட்ட போது, டட்லி சேனா நாயக்க இந்த விடயத்தை முன்னுணர்த்தியிருந்தார். ஜனாதிபதி ஆட்சி முறை ஜக்கிய அமெரிக்காவில் சாத்தியமாகியுள்ளது. ஏனெனில், அது அங்கு ஒரு விசேட வரலாறின் விளைவாகவே தோன்றியிருந்தது. அதே காரணங்களினால் அது பிரான்ஸில் சாத்தியமாகியுள்ளது. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் அது அழிவுகரமான விளைவுகளையே எடுத்து வர முடியும். அது ஒரு சீசரிஸ பாரம்பரியத்தை உருவாக்கமுடியும். அதுஒருதலைவரின்கையில் அதிகாரங்கள் அனைத்தையும் ஒன்று குவிப்பதுடன், நாடாளுமன்றம் மற்றும் அரசியல் கட்சிகளின் கட்டமைப்பு என்பவற்றை உதாசீனம் செய்ய முடியும்.

மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் முன்னுணர்ந்து கூறப்பட்டதைப்போல, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அது அறிமுகம் செய்து வைக்கப்பட்டது தொடக்கம் நிறைவேற்று அதிகாரத்தைப் போசித்து வளர்த்து வந்திருப்பதுடன், அரச சபை, நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறை போன்ற ஏனைய ஜனநாயக நிறுவனங்களை உதாசீனம் செய்துள்ளது. 1982இல் இடம்பெற்றதைப்போல, மக்கள் தீர்ப்பு என்ற முறைக்கூடாகத் தேர்தல்கள் மற்றும் பல்கட்சி ஜனநாயக முறைகளும் கூட உதாசீனம் செய்யப்பட்டிருந்தன. அதிகார மையம் நாடாளுமன்றத்திலிருந்து நகர்த்தப்பட்டிருந்தது. நாடாளுமன்றம் அதன் அனைத்துக் குறைபாடுகளுடனும், சார்பு ரீதியில் திறந்த தன்மை கொண்டதாகவும், வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும் இருந்து வந்தது. தெரிவு செய்யப்படாத, ஆனால், அதிகாரமிக்க ஜனாதிபதி ஆலோசகர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரினால் சூழப்பட்டு மூடப்பட்டிருந்த ஜனாதிபதி அலுவலகத்திலும் பார்க்க நாடாளுமன்றம் சார்பு ரீதியில் சிறந்ததாக இருந்து வந்தது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தின்போது அமைச்சரவை அமைச்சர்களிலும் பார்க்க அதிகாரமிக்கவர்களாக இருந்து வந்த ஜனாதிபதி ஆலோசகர்கள், பொது மக்களுக்கு வகைப் பொறுப்புக் கூறுபவர்களாக இருந்து வரவில்லை).

தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி ஒருவர், சந்திரிகா குமாரதுங்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற குறுகிய கூட்டாட்சியின்போது அவதானிக்கப்பட்டதை போல, கூட்டு அரச மற்றும் அதிகாரப் பகிர்வு என்பவற்றைத் திரிபுபடுத்தக் கூடியவராக இருந்து வருகின்றார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், அவருக்குத் துதிபாடியவர்களும் பெரும் பாலான சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி ஆட்சி முறை நாட்டின் ஸ்திர நிலையை மேம்படுத்தி வருவதாகக் கூறி, அதற்குச் சார்பாக வாதிட்டு வந்துள்ளனர். இலங்கையின் பின்புலத்தை பொறுத்தவரையில், ஸ்திர நிலை என்பது, அதிகாரம் தனியொரு நபரின் கைகளில் குவிந்திருப்பதைப் பார்க்கிலும், சித்தாந்த ரீதியிலும், இனத்துவ அடிப்படையிலும் வேறுபட்ட பல அரசியல் கட்சிகளைக் கொண்ட ஒரு அரசில் காணப்பட முடியும். இலங்கையின் அரசியல் கலாசாரத்தின் பின்புலத்தில் ஸ்திர நிலை என்ற சொல்லுக்கான பொருளை மிகவும் நுட்பமான விதத்தில் நாங்கள் புரிந்து கொள்வது அவசியமாகும். 1982இல் அவதானிக்கப்பட்டதைப் போல, ஸ்திர நிலை மற்றும் சர்வாதிகாரப் போக்கு என்ற பதங்களுக்கான எளிமையான வரைவிலக்கணம் மற்றும் என்பவற்றிற்கிடையில் ஒரு மெல்லிய இழை மட்டுமே இருந்து வருகிறது.

நாடாளுமன்றத்தில் அமரக்கூடிய தேசிய ரீதியில் தெரிவு செய்யப்படும் ஒரு பிரதமர் குறித்து, அரசின் ஒரு சில பிரிவுகள் முன்வைத்து வரும் கருத்துகள் கவலைக் குரியதாகும். பிரதமர் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு மூலம் தோற்கடிக்கப்பட முடியும். ஆனால், அது மறுபுறத்தில் நாடாளுமன்றக் கலைப்புக்கு வழிகோலும். ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு தனிநபரின் கைகளில் அதிகாரங்களைக் குவிக்கும் அடிப்படை தவறுகளைக் கொண்டிருக்கும். இந்தப் பிழையான கருத்து, 1990களின் நடுப்பகுதியில் இஸ்ரேலில் பின்பற்றப்பட்டு தோல்வியடைந்ததுடன், பின்னர் அது கைவிடப்பட்டது.

தேர்தல் முறை

ஜேர்மனி, ஸ்கொட்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் பின்பற்றி வரும் தேர்தல் முறையை ஒத்த, உண்மையில் கலப்பு முறையான தேர்தல் முறையை இலங்கையும் பின்பற்ற வேண்டுமென்ற

> 1982இல் இடம்பெற்றதைப்போல, மக்கள் தீர்ப்பு என்ற முறைக்கூடாகத் தேர்தல்கள் மற்றும் பல்கட்சி ஜனநாயக முறைகளும் கூட உதாசீனம் செய்யப்பட்டிருந்தன. அதிகார மையம் நாடாளுமன்றத்திலிருந்து நகர்த்தப்பட்டிருந்தது.

விடயத்தில் 1994ஆம் ஆண்டு தேர்தலின்போது ஒரு கருத்தொற்றுமை ஏற்பட்டிருந்தது. அத்தகைய ஒரு தேர்தல் முறை எளிமையான பெரும்பான்மை முறையின் (ஆகக் கூடிய வாக்குகளை பெறும் நபர் வெற்றியீட்டும் முறை) சிறந்த பண்புக் கூறுகளையும், விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் அடிப்படை கோட்பாட்டையும் கொண்டதாக இருந்து வருகின்றது. அதாவது, வெற்றியீட்டியவர் அனைத்தையும் அபகரித்துக்கொள்ளும் கோட்பாட்டுக்கு மாறாக, கட்சிகள் பெற்றுக் கொண்டிருக்கும் வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையில் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தீர்மானிக்கப்பட வேண்டுமென்பதனையே விகிதாசார பிரதிநிதித்துவ முறை எடுத்துக் காட்டுகின்றது. எளிமையான பெரும்பான்மை முறை, கட்சிகளுக்குக் கிடைத்திருக்கும் வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் நாடாளுமன்றத்தில் அவற்றுக்கு ஒதுக்கப்படும் ஆசனங்களின் எண்ணிக்கை என்பவற்றுக்கு மத்தியில் ஒரு பொருத்தமின்மையை எடுத்து வருகின்றது.

மேலும், இந்தக் கலப்புத் தேர்தல் முறை மக்கள் எளிதில் புரிந்துக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன், அது இலகுவானதாகவும் உள்ளது. அது பெண்களின் பிரதிநிதித்துவத்தைக் (இலங்கை நாடாளுமன்றத்தில் தென்னாசியாவில் ஆகக் குறைந்தளவிலான பெண்களின் பிரதிநிதித்துவம்) கொண்டுள்ளது என்ற முக்கியமான விடயத்தின் அடிப்படையில் பெண்களின் பிரதிநிதித்துவம் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பொறிமுறைகளையும் கொண்டுள்ளது. மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்கு தாவுவதை தடுத்துக் கொள்ளவும் அது உதவ முடியும். மேலும், இந்தக் கலப்பு தேர்தல் முறை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சித் தலைமைத்துவத்திலிருந்து ஓரளவுக்கு சுதந்திரத்தை கொண்டிருப்பதையும் உறுதிப்படுத்த முடியும்.

அரசியல் அமைப்புக்கான உத்தேச 20ஆவது திருத்தம் இந்த அனைத்து அம்சங்கள் தொடர்பாகவும் குறை பாடுகளைக் கொண்டிருந்தது.

எனவே, அது முற்றாகப் புறமொதுக்கப்படுதல் வேண்டும். சட்டத் தரணிகளாலும் கூட புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக அது இருந்து வந்தது.

(தொடரும்)

யாழ்-காரை 785/1 வழித்தட பஸ்சேவையின் நேர ஒழுங்கீனம்

கேணியடியான்

யாழ்-காரைநகர் சேவையிலீடுபடும் 785/1 வழித்தட இலக்க பஸ் சேவையின் மூலம் பயன்பெறுவோர் ஏராளம். அதுவும் குறிப்பாக மூளாய்ப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மித்து ஆரம்பமாகி சித்தன்கேணி, வட்டுக்கோட்டை வீதியைச்சென்றடையும் டச்சு வீதியிலும், அதனை அண்டிய பிரதேசங்களிலும் வதியும் மக்களுக்கு இந்தப் பஸ்சேவை பெரும் வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும்.

நோயாளர், அரசதனியார்துறை ஊழியர்கள், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இன்னோரன்ன தேவைகளின் நிமித்தம் பயணிப்போர் என அனைவரது போக்குவரத்துத் தேவைகளையும் நிறைவேற்றிவரும் இந்தச்சேவை தினமும் இருவழிச்சேவையாக 6தடவைகள் நடைபெறுவது இந்தப்பகுதி வாழ்மக்கள் செய்த புண்ணியமாகும்.

ஏனெனில் அரச, தனியார் பஸ்சேவைகளைப் பெறுவதற்காகப் பானாவெட்டி, வழக்கம்பரை, தண்ணித்தொட்டி, சித்தன்கேணி, புளியடி எனநடந்து அலுத்துக் களைத்தவர்கள் இவர்கள். இந்தச் சேவையை ஏற்பாடு செய்துதந்த வர்கள், அழுத்தங்களைப் பிரயோகித்தவர்கள், காரைநகர்சாலை அதிகாரிகள், நடத்துநர்கள், சாரதிகள் ஆகியோர் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். அதேசமயத்தில் அண்மைக்காலங்களில் காலையில் காரைநகரில் இருந்து புறப்பட்டு யாழ்.நகரை வந்தடையும் இந்த பஸ், மீண்டும் அங்கிருந்து புறப்படும் நேரம் தான், ஒழுங்குப்பிரகாரம் அமைவதில்லை. (அந்த பஸ்ஸுக்குக் காத்திருந்தமையால் எமக்கு ஏற்பட்ட அனுபவம் இது. ஏனைய நேர ஒழுங்கும் எப்படியோ?) காலை8.15க்குப் புறப்படும் என்பார்கள்.

அது தான் நேர அட்டவணையாம். ஆனால், சிலசமயம் 8.30மணிக்கே புறப்படுகிறார்கள். பஸ்நிலையத்தில் ஏறுபவர்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தாதுவிடினும் இடைவழியில் இதற்காகக் காத்திருப்பவர்கள் பாடுதான் பரிதாபத்துக்குரியது. நாம்8.15க்கு புறப்பட்டு வந்தால் 8.35க்கு பஸ்வரும். நாம் 8.30மணிக்கு வந்தால் (முதல் நாளின் நேரப்படி). காத்திருக்கவேண்டியதுதான். பஸ் 8.20மணிக்கே நாலுசனத்துடன் போய்விட்டிருக்கும். இந்த பஸ் சென்றுவிட்டதை 8.45மணிக்கு அடுத்து வரும் 782இன் சாரதியும் உறுதிசெய்வார்.

ஆனால் 8.30மணிக்கு பஸ் புறப்பட்டால் ஓரளவு சனம் நிறைந்திருக்கும்.

முன்னையைப்போலல்லாது, தற்போது நடத்துநர், சாரதி ஆகியோரை அடிக்கடி மாற்றுவதுதான் இதற்கான காரணம் எனப் பயணிகளிடையே கருத்து நிலவுகிறது. இதற்கான நேர அட்டவணை ஒன்று இருந்து, அதற்கமையவே சேவையும் நடைபெறவேண்டி இருக்கும்போது சேவை நேரத்தை மாற்றலாமா?பணியாளருக்கு அமைவாகவே நேரமும் மாறுபடும் என்றால், பயணிகள் கதி அதோ கதிதான். பலவாறான இடர்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவரும் இந்தச்சேவை, டச்சு வீதி வாழ் மக்களுக்கு நிச்சயமாகப் பயன்தர வேண்டும். இதுவே கதியா? அதுவே விதியா? என்றாகிவிடக்கூடாது.

கடந்த புதன்கிழமை யாழில் இருந்து காலை 8மணிக்கே இந்த பஸ்புறப்பட்டுவிட்டதாகவும், அது மட்டுமல்லாது வழமையான வழித்தடத்தை விடுத்து 786 வழித்தடத்தில் காரைநகருக்குச் சென்றதாகவும் அறிய முடிகிறது. டச்சு வீதிவழியாக பஸ்சேவை நடத்த உழைத்தவர்களுக்கு இது சமர்ப்பணம்.

சண்டப் பிரசண்டங்கள்

வன்னிவாசி.

கடந்த எட்டாம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவில் இருந்து 12.25க்கு யாழ்ப்பாணத்துக்கு புறப்பட்ட கிளிநொச்சி டிப்போவுக்குச் சொந்தமான N.C.1280இலக்கம் கொண்ட இ.போ.ச பஸ்சில் யாழ்ப்பாணம் வந்தேன்.

சரியாக இரண்டு மணிக்கு இந்த பஸ் பரந்தன் சந்திக்கு கிட்டவர யாரோ ஒரு குறுந்தாடி விட்ட பொடிப்பயல் பஸ்சைமறிச்சு சாரதிப் பொடியனுடன் தர்க்கப்பட்டதுமல்லாமல், சாரதிப் பொடியனின் பக்கக் கதவைத் திறந்து "கீழை இறங்கடா பாப்பம்..."என்று சண்டித்தனக் கதையள் கதைக்க பஸ்சுக்குள்ளை இருந்த சனம் எல்லாம் பயந்து போச்சுதுகள்.

நடுமத்தியான நேரம். அகோர வெய்யில். நட்ட நடுச்சந்தியிலை ஓர் அரச பஸ்சை மறிச்சு சாரதிப் பெடியனை இறங்கடா... என்று சண்டித்தனம் காட்டுகிற அளவுக்கு நிலைமை கீழ் இறங்கி வந்திட்டுது.

இனி உந்த இ.போ.ச காரருக்கு நட்டநடு வீதியில எந்த நேரத்தில எதுவும் நடக்கலாம்.

பிரச்சினையின் மூலவிடயம் ஒருபுறம் கிடக்கட்டும். தட்டிக்கேட்க ஆளில்லையெண்டால் தம்பி சண்டப்பிரசண்டன்... என்று சொல்லுவார்கள். தட்டிக்கேட்ட ஆள்கள் எல்லாம் 2009 தோடை தலைகுனிஞ்சு போனதாலை, அதர்மம் ஆட்டம் போட வெளிக்கிட்டிருக்குது என்பதுதான் பஸ்சுக் குள்ளை இருந்த பலபேரின் பேச்சாக இருந்தது. இது இப்படியே தொடர்ந்து சென்றால் சாதாரண மனிதர்கள் இந்த நாட்டில் வாழவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும் தாக்குதலைச் சந்திக்கும் சிரியாவின் அலப்போ நகர்

டமஸ்கஸ், பெப்.12

சிரியாவில் உள்ள அலப்போ நகர் உச்சக்கட்டப் போருக்கு முகம் கொடுத்து வருகின்றது. தொடர்ந்து வான்தாக்குதல்களும் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 5 வருடங்களாக இடம்பெற்று வந்த போர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இந்த மாதத்தின் ஆரம்பத்தில் சிரிய ஜனாதிபதி பசார் அல்- அசாத்தினால், அலப்போவில் இருந்து துருக்கிக்குச் செல்லும் பிரதான சாலை மூடப்பட்டுள்ளது. இதனால் அப்பாவி மக்கள் செய்வதறியாது தவித்து வருகின்றனர். கிட்டத்தட்ட 3லட்சத்து 20 ஆயிரம் மக்கள் அலப்போ நகரில் வெளியேற வழியின்றி முடக்கப்பட்டுள்ளனர். தொண்டு நிறுவனங்கள் மக்களுக்கான உணவை வழங்க கடும் முயற்சி எடுத்து வருகின்றன.

அங்கு வசிக்கும் மக்களுக்கு உணவு, ளிபொருள் வசதிகள் இன்றித் தவித்து வருகின்றனர். தப்பிக்கும் முயற்சிகள் பெரும் சவாலாக இருக்கும் அதேவேளை, பட்டினியால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். நகரில் வசிக்கும் மக்கள் பலருக்கு மின் சாரத்தை வழங்க சிரிய அரசு, இயந்திரங்களைப் பயன்படுத்தி வருகிறது. இந்த நிலையில் சிரிய ஜனாதிபதிக்கு எதிரான போராளிகள் தொடர்ந்தும் போர் நடத்தி வருகின்றனர். இந்தப் போராளிகளுக்கு எதிராக ரஷ்யா போரிட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (த-ரி4)



சூரியனை விட 3 மடங்கு வெப்பமான நட்சத்திரம் செயற்கையாக உருவாக்கம்

ஹொங்கொங், பெப்.12

சீனாவின் ஹெபி பிரதேசத்தில் அமைந்துள்ள பௌதிக ஆய்வு கூடத்தினர் தற்காலிகச் சூரியனை உருவாக்கியுள்ளனர்.

இந்தத் தற்காலிகச் செயற்கை நட்சத்திரம் சூரியனைவிட 3 மடங்கு அதிக வெப்பமானது எனவும், எமது கிரக மையக் கருவை விட 8 ஆயிரத்து 600 மடங்கு மேற்பரப்பு வெப்பத்தை உடையது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

102 செக்கன்கள் ஒளிரச்செய்யப்பட்ட இந்த நட்சத்திரம், 49.999 மில்லியன் பாகை செல்சியஸ் வெப்பத்தை எட்டியது. இது அணுக்கரு இணைவு பரிசோதனைக்கூடத்தில் பரிசோதிக்கப் பட்டது.

இந்தப் பரிசோதனை, அணுக்கரு இணைவிலிருந்து சக்தி பிறப்பாக்கத்தை அறியும் நோக்கில் செயற்படுத்தப்பட்டது. நிலக்கரி நுகர்வைக் கட்டுப்படுத்துவதுடன், புதிய சக்தி முதலை கண்டறியவும் பரிசோதனை செய்யப்பட்டது. இந்தப் பரிசோதனைக்கு 37 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளன. உருவாகிவரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு அதிக சக்திக்கான முதல்கள் தேவைப்படுகின்றன. உலகில் இன்னமும் நிலக்கரி பாவனை தான் உள்ளது. நிலக்கரியின் நுகர்வு அதிகரித்துக் கொண்டிருப்பதுடன், குறிப்பிட்ட அளவே காணப்படுகின்றது. இவ்வாறான சக்தி உருவாக்கம் எதிர்காலச் சந்ததியரின் சக்தி தேவைகளை ஈடு செய்யும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர். மேலும், இவ்வாறான ஒரு சக்தியில் ஒரு கிலோவை உருவாக்க, 100 மில்லியன் கிலோ எரிபொருள் தேவைப்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (த-ரி4)

ஈரவிழிகளுடன் ஐந்தாண்டுகள்

கனகரத்தினம் குமாரசாமி (சங்கானை)

(சோதிடர், ஓய்வு பெற்ற நடத்துநர், இ.போ.ச)

மலர்வு 11.01.1943 — உதிர்வு 07.02.2011

திதி : சதுர்த்தி 12.02.2016 வெள்ளிக்கிழமை

குடும்பத்தின் குல விளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் - நற்
பண்புகளுடன் எமை வழிநடத்தி
எமக்காகவே வாழ்ந்து.....
ஐந்தாண்டுகள்
ஓடி மறைந்துவிட்டதென்று
நம்ப முடியவில்லை !
எம் மனதில் சோகம் அலைகடல்
போல் இருந்தாலும்
நாளும் பொழுதும் எம் இதயத்தில்
அகல்விளக்காய் பிரகாசித்துக்
கொண்டுதான்
இருக்கிறீர்கள் எங்கள் அப்பாவே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

நிகரை வீதி, சங்கானை.

(c 29093) (14,18,20)

இந்தோனேஷியாவில் விழுந்து நொறுங்கிய ராணுவ விமானம்

ஜகார்த்தா, பெப்.12

இந்தோனேஷிய இராணுவ விமானமொன்று, அதன் சோதனை ஓட்டத்தின்போது குடியிருப்புப் பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்ப வத்தில் விமானி உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அபுல் ரச்மன் சலி விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட, ருகானோ ரெர்பபுறொப் எனும் விமானம் விபத்துக்குள்ளானது என விமானத்தள அதிகாரியொருவர் தெரிவித்தார். 45 நிமிடங்கள் நடத்தப்பட்ட சோதனை ஓட்டத்தின் பின்பு விமானத்துக்கும் கட்டுப்பாட்டு மையத்துக்கும் இடையேயான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அதன் பின்னர் பொது மக்களிடம் இருந்து, விமானம் விபத்துக்குள்ளான தான செய்தி வந்தது என அவர் தெரிவித்தார்.

மக்கள் குடியிருப்புப் பகுதியில் விமானம் மோதியது. பெரும் சத்தத்துடன் விபத்து இடம்பெற்றது. பின்னர் அடர்த்தியான புகையும், பெற்றோல் மணமும் மிகையாக இருந்தது என விபத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார். வீடொன்றில் இருந்த இரு வரும் விமான விபத்தில் உயிரிழந்தனர். விபத்துக்கான காரணம் குறித்து ஆராயப்பட்டு வருவதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த-ரி4)

15 கிலோ வெடிபொருளுடன் துருக்கி எல்லையில் அகதிகள்

அங்காரா, பெப்.12

சிரியாவில் இருந்த துருக்கிக்கு வந்த அகதிகளிடம் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. புகலிடம் கோரிவந்த அகதிகளிடம் துருக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் நடத்திய சோதனையில் இவை கண்டு பிடிக்கப்பட்டன.

34 பேர் அடங்கிய அகதிகள் குழுவில் 20 சிறுவர்கள், 10 பெண்கள் உட்பட, மீதமுள்ளோர் ஆண்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பொருள்களைச் சோதனையிட்டபோது 4 தற்கொலைக் குண்டுதாரியின் அணிகலங்கள், 15 கிலோகிராம் வெடி பொருள்கள் என்பன மீட்கப்பட்டன எனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் சிரியர்கள் அல்லர் வெளிநாட்டவர்கள் எனும் தகவலை நிருபர் ஒருவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

வேறு தகவல்களைக் கூற பாதுகாப்புத் தரப்பினர் மறுத்து விட்டனர்.

இந்த ஊடுருவலுக்கும் ஐ.எஸ். அமைப்புக்கும் தொடர்புகள் உள்ளனவா என விசாரிக்கப்பட்டு வருகின்றது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ
சிவமயம்

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

வாரிவளவு - காரைநகர்

மஹா கும்பாபிஷேகம்

12.02.2016
வெள்ளிக்கிழமை

காலை 6.01 மணிமுதல் 7.30 மணிவரை இராஜகோபுர, விமான (ஸ்தூபி) அபிஷேகங்களும், காலை 8.49 மணிமுதல் 10.29 மணிவரை மஹா கும்பாபிஷேகமும் நடைபெறும்.

கும்பாபிஷேக தின மாலை நிகழ்ச்சிகளாக பிரபல தவில், நாதஸ்வர வித்துவான்களின் "நாத கான மழை" நடைபெறும்.

தென்னிந்தியத் திரைப்படப் பாடகர் Dr.T.M.S.பால்ராஜ் குழுவினரின் திரை இசைப் பாடல்கள் கலந்த "பக்தி இன்னிசை" நடைபெறும்.

காரைநகர், வாரிவளவு ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக திருத்தில்
பிரபல தென்னிந்திய திரைப்படப்பாடகர் பத்மஸ்ரீ T.M. சௌந்திரராஜன் அவர்களின் புதல்வர், பின்னணிப் பாடகர், கலைமாமணி, இசைஞானி இளவல்,
Dr. T.M.S. பால்ராஜ் குழுவினரின்

சினிமா திரைஇசை பாடல்கள் கலந்த பக்தி இன்னிசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயகாரர்கள்.

(C/28457)(10.18)

வடக்கில் மறைந்து அருகிவரும் பழங்கள்

பி.எஸ்.ஏ.அரியறட்ணம்
கோப்பாய்

பழங்களில் சில வடக்கில் முற்றாக மறைந்துள்ளன. உதாரணமாக வில்வம் பழமானது இக் காலப் பிள்ளைகளுக்குத் தெரியாததொரு பழமாகும். இந்தப் பழம் மருத்துவக் குணத்தைக் கொண்டது. விளாம்பழத்தைப் போன்று கடினமான கோதைக் கொண் டது. கொஞ்சம் சிறிதள வான சதையே உள்ளுக்குள் இருக்கும். இது பல நோய் களுக்கு நிவாரணியாகப் பயன்படுத்தப்பட்டது. மருத்துவர்கள் விசேடமாக ஆயுள்வேத வைத்தியர்கள் இதனை மருந்துக் காகப் பயன்படுத்தினர். இலந்தைப்பழமும் இப்போது மறைந்துள் ளது. இலந்தைப்பழத்தை நினைக்கும் போது 1960களில் வெளியான கே.எஸ். கோபாலகிருஷ்ணனின் திரைப்படமான "பணமா பாசமா" படத்தில் இலந்தைப்பழம் விற்ற நடிகைதான் நினைவுக்கு வருகிறார். இந்தப்படம் ஒரு வெற்றிப்படம். யாழ்ப் பாணம், ராணி தியேட்டரில் திரையிடப்பட் டது. இலந்தைப் பழங்களை ஒரு தள்ளு வண்டியில் தள்ளிச் சென்றபடி நடிகை விற்றமை இன்னமும் கண்களுக்குள் இருக் கின்றது. இந்தப் பாடல் அப்போது அதிக வருமானத்தை அள்ளிக்கொடுத் தது. இலந்தைப்பழத்தை இப்போது அதி கம் காணக்கூடியதாக இல்லை. எங்கள் சிறு பராயத்தில் கோப்பாயில் ஏராளமான இலந்தை மரங்கள் காணப்பட்டன. இலந்தை இலையை அவித்து கைக் குழந்தைக ளுக்கு தலை முழுக்குக்குப் பயன்படுத்தப் பட்ட காலம் அது. இப்போதெல்லாம் குழந் தைகளுக்கு கிரீம், ஷம்பு என்று மேற் கத்தேய சாதனங்களைப் பயன்படுத்து கின்றனர். இவை எந்த அளவுக்கு குழந் தைகளின் ஆரோக்கியத்துக்கு உகந்தது என்று கூறமுடியாது. இலந்தை இலையில் முள்கள் காணப் படும். ஆகவே பழங்க ளைப் பிடுங்கும்போது அவதானமாயிருத் தல் அவசியம். பழங்கள் பழுத்து சிவப் பாகவும் மேலும் பழுத்து மண்ணிறமாக வும் அழகாகக் காட்சிதரும். பழங்களில் ஒரு தனிச்சுவை காணப்படும். இதில் ம ற்றுமொரு விசேடம் என்னவென்றால் பொன்வண்டுகள் இந்த மரங்களைச் சுற்றிவலம் வந்து இலை களைச் சுவைத்துத் தின்னும். எனது கல்லூரிக் காலத்தில் நண்பர்கள் பொன்வண்டு களைப் பிடித்து எனக்குத் தருவார்கள். நான் அவற்றைவளர்ப்பதுண்டு, சில பொன் வண்டுகள் தப்பிப்பறந்து போவதும் உண்டு. நாவல் மரங்கள், அன்னமுன்னா மரங்கள், கிஞ்ஞாப்பழங்கள் ஆகியனவும் இப்போது அருகி வரு கின்றன அது மட்டு மல்லாமல் விளாத்தி மரங்கள், நெல்லி மரங்கள், அரை நெல்லி மரங்களை முன்பு போல் இப்போது ஏராளமாகக் காணக்

> "இலந்தை இலையை அவித்து கைக் குழந்தைகளுக்கு தலை முழுக்குக்குப் பயன்படுத்தப்பட்ட காலம் அது. இப்போ தெல்லாம் குழந்தை களுக்கு கிரீம், ஷம்பு என்று மேற்கத்தேய சாதனங்களைப் பயன்படுத்துகின் றனர்."

கூடியதாக இல்லை. இந்தப்பழங்களை எமது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் உண்ணாதிருப்பதும் மிகவும் வருத்தத்தை யும் துக்கத்தை யும் தருகிறது. இன்னும் எத் தனை மரங் கள் மறைந்து போகுமோ தெரியாது இத னைப்பார்க்கும் போது, ஜி. எம்.ஹொபிசின்ஸ் என்ற ஆங்கில கவிஞரது பின்சி பொப்லர்ஸ்

என்ற கவிதை தான் நினை வுக்கு வருகிறது. கைத்தொழிற் புரட்சியின் போது பிரிட்டனில் மரங்கள் வெட்டப்படு வதைப் பார்த்துக் கண்ணீர் விட்ட அந்த ஆங்கிலக் கவிஞர் இந்தக் கவிதையை எழுதினார். பின் வரும் சந்ததியினர் இந்த அரிய மரங்களைக் காணமாட்டார்கள் என்று எழுதியிருந் தார். Binsey Poplars என்ற மரங்கள் குளக்கரைகளில் நடப்பட்டிருந்தன. அவற்றின் நிழலில் மக் கள் இளைப் பாறினர். இந்த நிழலைப் பின்வரும் சந்த தியினர் பார்க்க முடியாதே என்று கண் ணீர் விட்டார் அந்தக் கவிஞர், (After comers cant guess the bea uty been). "பின்வரும் சந்ததியினர் இந்த அழகிய அற்புதக்காட்சியைக் காண முடியாதே" என்பது அதன் பொ–ருள். அவர் மேலும் கூறியது "The sweet especial scene rural scene a rural scene sweet especial rural scene மேற்கூறியமை போன்று எமது வருங் காலச் சந்ததியினரும் இந்தப் பழங் கள் பற்றி எதனையும் அறியாம லும் அனு பவித்துச் சுவைக்க முடியாம லும் இருக்கப் போகின்றனர் என்பதை நினைக்க கண்ணீர்தான் வருகின்றது.

[உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் கும்ப ராசிக்காரர் களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனில் பார்த்தோம். கும்ப ராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.]

கலைஞர்கள்
கலைஞர்கள் எதிர்பார்க்கும் வாய்ப்புக்கள் தடையின் றிக் கிடைக்கும் என்றாலும் கையிலிருக்கும் வாய்ப்பு களை நழுவவிடாமல் பாதுகாத்துக் கொள்வது நல் லது. பொருளாதார நிலை ஓரளவுக்கு சிறப்பாக இருக் கும். சக கலைஞர்களையும் அனுசரித்து நடந்துகொள் வது நல்லது. பத்திரிகைகளில் வரக்கூடிய கிசுகிசுக்க ளால் சற்று மன நிம்மதி குறையக்கூடும். பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது.

விவசாயிகள்
பயிர்விளைச்சல் சிறப்பாகவே இருக்கும். புழு பூச்சி களின் தொல்லைகளால் நிறைய வீண் செலவுகள் ஏற்படுவதால் அறுவடையில் தாமதம் உண்டாகும். விளைபொருளுக்கேற்ற விலை சந்தையில் கிடைக் கப்பெற்று லாபம் பெருகும். அரசு வழியில் எதிர்பாராத ஆதரவுகள் கிடைக்கப்பெறுவதால் எல்லா வகையிலும் முன்னேற்றத்தை அடைய முடியும்.

பெண்கள்
குடும்பத்தில் சிறு வாக்குவாதங்கள் தோன்றினாலும் ஒற்றுமை குறையாது. ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொண்டால் கடன்களைத் தவிர்க்கலாம். அசையாச் சொத்துக்கள் வகையில் சில செலவுகள் ஏற்படும். சுபகாரிய முயற் சிகள் ஆண்டின் தொடக்கத்தில் கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம்செலுத்துவது நல்லது. உற்றார்- உறவி னர்களை அனுசரித்துச் செல்லவும்.

மாணவ- மாணவியர்
மாணவர்கள் முழு முயற்சியுடன் பாடுபட்டால் நினைத் ததை சாதிக்க முடியுமென்றாலும் மனது அலைபாயக் கூடிய காலமென்பதால் தேவையற்ற சிந்தனைகளைத் தவிர்க்கலாம். பெற்றோர், ஆசிரியர்களின் ஆதரவுகள் உங்களுக்கு எப்பொழுதும் உண்டு. சுற்றுலா போன்ற உல்லாசப்பயணங்களில் கவனத்துடன்நடந்துகொள்வது நன்மை அளிக்கும். விளையாட்டுப் போட்டிகளில் பரிசுகளைப் பெறமுடியும்.

மாதப்பலன் (ஜனவரி)
ஜென்ம ராசிக்கு 10-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதும் மாத முற் பாதியில் சூரியன் 11-ல் சஞ்சாரம் செய்வதும் சாதகமான அமைப்பாகும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும், தடைப்பட்ட சுபகாரியங்கள் கைகூடக்கூடிய வாய்ப்பும் அமையும். கொடுக்கல்- வாங்கல் சரள நிலையில் நடக் கும். எதிர்பாராத திடீர் உயர்வுகளும் உண்டாகும். பொன், பொருள், ஆடை, ஆபரணச் சேர்க்கைகள் யாவும் அமை யும். சிலருக்கு வீடு, மனை வாங்க வேண்டுமென்ற கனவும் நனவாகும். தொழில், உத்தியோகம் செய்பவர் எதிலும் சிந்தித்துச் செயல்பட்டால் லாபம் பெறமுடியும். விநாயகப் பெருமானை வழிபடவும்.

பெப்ரவரி
ஜென்ம ராசிக்கு 10-ல் சனியும் விரயஸ்தானமான 12-ல் சூரியனும் சஞ்சாரம்செய்வது தொழில், வியா பாரரீதியாக வீண் விரயங்களை ஏற்படுத்தும் அமைப் பாகும். தேவையற்ற அலைச்சல்கள், பதற்றம் உண் டாகும். கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடு கள் ஏற்பட்டு ஒற்றுமை குறையும். உற்றார்- உறவினர் கள் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்துவார்கள். திரும ணம் போன்ற சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் தடைகளுக்குப்பின் அனுகூலம்உண்டாகும். உடல்ஆரோக் கியத்தில் அதிக கவனம் எடுத்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு வேலைப் பளு அதி கரிக்கும். சனிக்குப் பரிகாரம் செய்வது உத்தமம்.

மார்ச்
ஜீவன ஸ்தானமான 10-ல் சனி செவ்வாய் சஞ்சரிப்பதும், 7-ல் சஞ்சரிக்கும் குரு வக்ரகதியில் சஞ்சாரம் செய்வதும் எடுக்கும் எல்லாக் காரியங்களிலும் எதிர்நீச்சல் போடவேண் டிய அமைப்பாகும். பணவரவுகளிலும் நெருக்கடிகள் நிலவுவதால் குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் சிக்கல்கள் உண்டாகும். தொழில், வியாபாரம் செய் பவர்கள் எதிலும் சிந்தித்துச் செயல்படுவது நல்லது. கூட் டாளிகளால் வீண் பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டி யிருக்கும். ஜென்ம ராசியில் சூரியன் சஞ்சரிப்பதால் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது உத்தமம்.

ஏப்ரல்
ஜீவன ஸ்தானமான 10-ல் சனி, செவ்வாய் சஞ்சரிப்பது சாதகமற்ற அமைப்பு என்றாலும், மாதப் பிற்பாதியில் சூரியன் 3-ல் சஞ்சரிக்க விருப்பதால் எடுக்கும் முயற் சிகளில் வெற்றிகிட்டும். எந்த எதிர்ப்புக்களையும் சமா ளித்து ஏற்றம்பெறுவீர்கள். குரு 7-ல் இருப்பதால் எதிர் பாராத உதவிகளும் கிடைக்கப்பெறும். பணவரவுகள் ஓரளவுக்குச் சிறப்பாக அமைந்து குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்திலும் ஒற்றுமை சிறப்பாக இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறுகிய சிந்தனைகளை விடுத்து சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்போம்

இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின வைபவத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரை

- ஜனாதிபதி ஊடகப் பிரிவு.

நேற்றைய உதயனின்
17 ஆம் பக்கத் தொடர்ச்சி

பாதுகாப்புப் படையினர்களின் மனங்களை குழப்புகின்ற விதமாக வெவ்வேறு விதமான பிழையான கருத்துக்கள், சிந்தனைகளை அரசியல் எதிர்தரப்பினர், தீவிரவாத கருத்துக்களைக் கொண்டோர் பரப்பி வருவதைக் காணக்கூடியதாய் உள்ளது.

நாட்டின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்து நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை வலுவடையச் செய்வது, அரசின் கௌரவம், பாதுகாப்புப் படையினரின் கௌரவம், ஒட்டுமொத்த மக்களின் கௌரவம் ஆகியவற்றைப் பாதுகாப்பதன் மூலமே இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் அரசு என்ற ரீதியில் ஒன்றிணைந்து முகம் கொடுப்பதாக இன்று 68வது சுதந்திர தினத்தின்போது உங்களது அன்பான தலைமை மக்கள் சேவகன் என்ற ரீதியிலும் – முப்படைகளின் தளபதி என்ற ரீதியிலும்– ஜனாதிபதி என்ற ரீதியிலும் நான் ஒட்டுமொத்த மக்களுக்கும் உறுதிமொழி அளிக்கின்றேன்.

ஆகவே, இன்று போன்ற ஒரு தினத்தில் நாம் அபிமானமுடையவர்கள் என்பதை நினைவில் நிறுத்துதல் வேண்டும். அபிமானமுடைய ஒரு தேசமாக உலகப் படத்தில் குறித்து வைப்பதற்காக நாம் செயற்படல் வேண்டும். ஒட்டுமொத்த மக்களும் இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவார்களென நான் நம்புகிறேன்.

கடந்த ஆண்டில் புதிய அரசு என்ற ரீதியில் நாம் பெற்றுக்கொண்ட வெற்றியின்போது இந்நாட்டு மக்களின் ஜனநாயகம், சுதந்திரத்தைப் பாதுகாத்து 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டமையானது, இந்த நாட்டு மக்கள் இந்த யுகத்தில் பெற்றுக் கொண்ட மிக முக்கியமான ஒரு வெற்றியாகுமென நான் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றேன். சுயாதீன ஆணைக் குழுக்களை ஏற்படுத்துவதன் ஊடாக 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டு மக்கள் வேண்டி நின்ற தேர்தல் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. 19ஆம் அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் தேர்தல், அரச சேவை, பொலிஸ், மனித உரிமைகள், கணக்காய்வு போன்ற பல்வேறு நிறுவனங்களுக்கான சுயாதீன ஆணைக் குழுக்களை நிறுவி இந்த நாட்டு மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

அவ்வாறே கடந்த ஓராண்டு காலத்தினுள் ஊழல், மோசடி, வீண்விரயம் ஆகியவற்றை குறைப்பதற்காக நாம் அரசு என்ற ரீதியில் மேற் கொண்ட செயற்பாடுகளின் மூலம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு கிறோம். 19ஆவது அரச மைப்புத் திருத்தத்தின் மூலம் நாம் நாடாளுமன்றத்தை வலுவடையச் செய்துள்ளோம் என்பதை நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள். அரச சேவையை அரசியல் மயப்படுத்துவதில் இருந்து விடுவிக்கும்பொருட்டு19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்தப்படும்.

இவ்வனைத்து விதமான சுதந்திரங்களையும் வழங்கும்போது விசேடமாக ஊடக சுதந்திரம் தொடர்பாக நாம் பின்பற்றும் கொள்கையின் பயனாக இந்த நாட்டு ஊடகங்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சுதந்திரம் இன்று உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. ஊடகத்துறையில் உள்ள அறிஞர்கள், புத்திஜீவிகள் போன்றோர் நன்நெறியுடனும் பண்பாகவும் செயலாற்றி தனது ஊடக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்பதற்காகவே நாம் இந்த ஊடக சுதந்திரத்தை வழங்கியுள்ளோம் என்பதை நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்பு கின்றேன்.

> **கடந்த ஆண்டில் புதிய அரசு என்ற ரீதியில் நாம் பெற்றுக் கொண்ட வெற்றியின்போது, இந்த நாட்டு மக்களின் ஜனநாயகம், சுதந்திரத்தைப் பாதுகாத்து 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டமையானது, இந்த நாட்டு மக்கள் இந்த யுகத்தில் பெற்றுக் கொண்ட மிக முக்கியமான ஒரு வெற்றியாகுமென நான் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றேன்.**

நாம் வழங்கிய இந்தச் சுதந்திரமானது குறித்த நோக்கத்துக்காக பயன்படுத்தப்படாது விடின் வழங்கப்பட்டுள்ள இந்தச் சுதந்திரமானது எமக்குப் பின்னர் வரவுள்ளவர்களினால் என்றோ ஒரு நாள் இல்லாது செய்யப்படலாம். ஆகவே இந்தச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அனைத்து ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் உள்ளதென நான் குறிப்பிடுகின்றேன்.

பொருளாதார ரீதியாக சுபீட்சமான ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, அபிவிருத்தியடையச் செய்வதற்கு, இலவசக் கல்வியை வலுவடையச் செய்வதற்கு, இலவசச் சுகாதாரத்தை வலுவடையச் செய்வதற்கு, போசாக்குள்ள நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, புதிய உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய புதிய சந்ததியினரை ஒன்றிணைத்து போட்டி மிகுந்த இவ்வுலகில் சர்வதேச ரீதியாக முன்னேறிச் செல்வதற்கு உள்நாட்டு கைத்தொழில், உள்நாட்டுஉணவுஉற்பத்தி ஆகியவற்றை விருத்தி செய்து வெளிநாட்டுச் சந்தைக்காக எமது உள்நாட்டு உற்பத்திகளை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை வலுவடையச் செய்யும் எமது கொள்கையை நாம் சிறப்பாகச் செயற்படுத்துவோம்.

அவ்வாறே சுதந்திரத்தின் பின் எட்டு ஆண்டுகள் காலத்தக்குள் எமது கடல் வளம் எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக எவ்வளவு தூரம் பயன்படுத்தப்பட்டுள்ளதென்ற வினா எம்முன் உள்ளது.

உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள் கடல்வளத்தைப் பயன்படுத்தும்போது, நாம் எமது நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு வீதமேனும் கடல் வளத்தைப் பயன்படுத்தவில்லை என்பது தெரியவந்துள்ளது.

ஆகவே, அதி நவீன உலகின் ஒரு தீர்வாக நாம் இந்தப் பெரிய கடல்வளத்தின்மூலம்எமதுபொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு தொழில் நுட்ப அறிவின் மூலம் சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்வதற்கு எம்மால் முடியும்.

இன்றைய தினத்தைப் போன்ற பாக்கியம் பெற்ற ஒரு தினத்தில் 1948ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக போராடிய நாட்டுப்பற்றுள்ள சிரேஷ்ட தலைவர்களைக் கௌரவத்துடன் நினைவுகூர்ந்து, 26 ஆண்டுகள்காலகொடிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்து உயிர்த்தியாகம்செய்து நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டிய எமது சிரேஷ்ட இராணுவ வீரர்களுக்கு மரியாதைசெலுத்தி, இன்றைய தினத்தின் எமது பணியை நாளைய தினத்துக்கான அர்ப்பணிப்புடன் ஒன்றிணைந்து நிறைவேற்றி குறுகிய அரசியல் வேறுபாடுகளின்றி, குறுகிய சிந்தனைகள் இன்றி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அவசர நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளிலிருந்து மீண்டு, ஒன்றுபட்டுச் செயலாற்றி சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்போம் என்ற வேண்டுகோளை நான் விடுக்கின்றேன்.

அவ்வாறே இந்தச்சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கப் பெற்றுள்ள சகல உரிமைகளையும் அனுபவிக்கும்போது, புத்திசாதுரியமாகவும் அறிவுபூர்வமாகவும், பொறுமையுடனும் இந்தப் பணிகளுக்காகதம்மை அர்ப்பணிக்குமாறு விசேடமாக அரசியல் எதிர் தரப்பினருக்கு நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உலகின் உன்னத ஒரு தேசமாக எமது நாட்டை மாற்றுவதற்கு, மலரப்போகும் தசாப்தங்களுக்காக எமது நாளைய தினத்தை தயார் செய்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு, நட்புறவுடன் செயற்படுவோம் எனக் கௌரவத்துடன் அழைப்பு விடுக்கின்றேன்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயன்பு

பக்கத்து வீட்டில் ஏதோ சண்டை போலி ருக்கிறது. அம்மாவும் பிள்ளையும் சத்தம் போட்டுப் பேசிக்கொள்வது வீதிவரை கேட்டது. பையன் அம்மாவைத்திருந்தபணத்தை எடுத்துச் செலவு செய்திருப்பான் போலும். பணத்தைக் காணோமே எனப் பதறி வீடு முழுவதுமே தேடிப் பாக்கிறார் அந்த அம்மா தேவகி. கடைசியில் அவர் மகன் பூபாலன் தான் எடுத்திருக்கிறான் எனத் தெரிந்தபோது ஆத்திரம் தாளவில்லை அவருக்கு. இரவு நெடுநேரங்கழித்து வீடு திரும்பிய தன் மகனிடம் கேட்கிறார்.

"நீ பாத்தியா...?" என எகத்தாளமாய் கேட் கிறான் பூபாலன். தேவகிக்கும் கோபம் வந்து அவனைத் திட்ட.. பதிலுக்குத் தன் தாயென்றும் பாராமல் கெட்ட வார்த்தை களால் அவன் தாயைத் திட்ட...

அவர்களது பேச்சு எங்களது செவியில் விழாதவாறு இருக்க வேண்டி முன் கத வைச் சாத்தி விடுகிறார் அம்மா. "அம்மா திட்டறாங்கனு பையனும் திருப்பித் தன் தாயை மட்டமாய் ஏசுகிறானே எத்தனை மட்ட மான பையன்" என்று அம்மாவும் கோபப் படுகிறார்.

நாங்கள்எல்லோரும்ஒரேஅறையில்மத்தை விரித்துப் படுத்துக்கொண்டு கதை பேசிக் கொண்டிருந்தோம்.

எல்லா இடத்திலேயும் கடவுள் இருக்க முடி யாது என்பதனால் தாயைப் படைத்தாராம் கடவுள்.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்றார்கள் முன்னோர்கள். ஆனால் இப்பொழுது உள்ள பிள்ளைகளுக்கு தம் பெற்றோர்களைமதிக்கத்தெரியவில்லையே? அந்த அம்மா எத்தனை கஷ்டப்பட்டு உழைத்துக்கொண்டு வந்த பணத்தை திரு டிச் சென்று செலவு செய்தது மட்டுமல் லாமல் திருப்பித் தன் தாயையே ஏசுகிறானே?

"தாயன்பு மிகவும் உயர்வானது என்பது அவனுக்குப் புரியலேம்மா'' என்று அக்காள் கூறுகிறாள்.

''உண்மைதான் தான் தாயின்மேல் வைத்த அன்பை நிலைநிறுத்த தன் தாய்க் குக் கோயில் கட்டின மகான் ஒருத்தர் இருக்கிறார்" என்கிறார் அம்மா. யாரம்மா அவர்? எல்லோரும் வியப்போடு கேட்கி றோம். அம்மா புன்னகைக்கிறார்.

அதோ எமது வீட்டிலும் இருக்கிறாரே அந்த 'ரமணர் பகவான் தான்"

நாங்கள் ஆச்சரியத்தோடு அந்த மகா னது படத்தைப் பார்க்கிறோம். அம்மாவுக்கு மிகவும் பிடித்த மகானாயிற்றே.

தன் தந்தை இறந்த அந்த மரண அனு பவம் அவரை மிகவும் பாதிக்கிறது. அவரது மனோநிலையும் மாறிப்போகிறது. படிப்பதில் நாட்டமில்லாமல் போக ரமணர் வீட்டைவிட்டுப் புறப்பட்டு திருவண்ணாம லைக்குவந்து விடுகிறார்.

அவரதுதாயாரும் அண்ணனும் அவரைக் காணாமல் எங்கெங்கோ தேடி கடைசியில் திருவண்ணாமலையில் பவளக்குன்றில் அவர் தவமிருப்பதைப் பார்த்து அவரது அன்னை அழகம்மை அவரை வீட்டுக் குவரும்படி மன்றாடிக் கேட்கிறார்.

அழகம்மை அம்மையார் என்ன சொல் லியும் ரமணர் உடன்போக மறுத்து விடுகிறார்.

அழகம்மை அம்மையார் எதுவும்முடியாமல் கண்ணீருடன் திரும்பிப் போகிறார்.

பின்பு ரமணர் பகவான் ஆசிரமத்தில் வந்து தங்கியிருந்தபொழுது அவரது அன்னை யார் தன் மகனுடன் இருக்கும் எண்ணத் துடன் அங்கேயே வந்து தங்கிவிடுகிறார்.

தன் மகன் என்ற பாசம் அன்னைக்கு மேலோங்கியிருந்தாலும் ரமணர் சாதாரண மாகவே இருந்தார்.

தன் அன்பை விசேஷமாக வெளிக்காட் டாமல் எல்லோருக்கும் கொடுக்கும் மதிப்பும் மரியாரையும் கொடுத்து வந்தார்.

அவரது அன்னை நோய்வாய்ப்பட்டிருந்த போது அருகிலிருந்து அவரைக் கவனித் துக்கொண்டாராம்.

இறக்கும் தறுவாயில் பகவான் தன் தாயின் தலையைத் தன் மடிமீது வைத்து தனது கையால் அவரது நெஞ்சை இதமாகத் தடவிக் கொடுத்தாராம். பகவான் மடியி லேயே அன்னை உயிர்நீத்தார். தன் அன் னைக்குச் சமாதி எழுப்பி பின் அவர் நினை வாக ஒரு சிறு கோயிலும் கட்டினார் ரமண பகவான்.

கிருஷ்ணபகவான் கூட தனது வளர்ப்புத் தாயான யசோதையின் மேல் அதிக பாசம் வைத்திருந்தாராம். ஆனாலும் ரமணர் ஒருவர்தான், தான் வாழ்ந்த ஆசிரமத்தின் இடத்திலேயே தன் தாயின் நினைவாக ஒருசிறுகோயிலே கட்டியுள்ளார் என்று கதை சொல்லி முடித்தார் அம்மா.

அம்மா கதைசொல்லி முடித்த போது எங்கள் எல்லோரது கண்களிலும் கண்ணீர்.

தன்தாய் திட்டுகிறார் என்பதற்காக அவரைப் புண்படும் வார்த்தை களால் பேசக்கூடாது. வளர்ந்த பின்னால் அவரை உதாசீனப் படுத்தவும் கூடாது.

தன் மகன் நல்ல நிலைக்கு உயர்ந்து வருவான் என அவனது தாய் வாழ்த்தினாலே அவன் நல்லபடியாக வாழ்வான் என்கிறார் அம்மா.

நான் சட்டென்று என் அம்மா வைக் கட்டிப்பிடித்து அவரது மடியில் படுத்துக்கொண்டேன். எனக்கு நிழலாய் இருக்கும் என் தாயைநான்பெரியவானதும்அன் பாக பரிவாகப் பாதுகாப்பேன்.

வரலாற்றில் இன்றைய தினம்

1502 - லிஸ்பன், போர்த்துக்கல்லிருந்து வாஸ்கொடகாம இந்தியாவுக் கான தனது இரண்டாவது கடற்பயணத்தை மேற்கொள்ளத் தொடங்கினார்.
1554 - ஒருவருடத்துக்கு முன்னர் இங்கிலாந்தின் அரசியாக 9நாள்கள் உரிமை கோரிய லேடி ஜேன் கிரே தேசத்துரோகக் குற்றசாட்டில் சிரச்தேசம் செய்யப்பட்டார்.
1855 - மிக்சிகன் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
1912 - சீனாவின் கடைசிப் பேரரசர் சுன்ரொங் பதவி துறந்தார்.
1914 - ஆபிரகாம் லிங்கன் ஞாபகார்த்த நினைவுக் கல் முதன் முதலில் வோஷிங்டனில் நடப்பட்டது.
1934 - ஒஸ்ரிய சிவில் போர் தொடங்கியது.
1946 - ஆபிரிக்க அமெரிக்கரான மூத்த அமெரிக்கப் படைவீரர் ஜஸாக் வூபார்ட் தென் கலிபோர்னியா பொலிஸ் அதிகாரியொருவரால் கடுமை யாகத் தாக்கப்பட்டு இரண்டு கண் பார்வைகளையும் இழந்தார்.
1997 - மணமாகாத பெண்களும் குழந்தைகள் பெறலாம் என இஸ்ரேல் அரசினால் சட்டம் நிறைவேற்றம்.
1999 - அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அமெரிக்க செனட்டினால் அவர் மீதான குற்றச் சாட்டுகளிலிருந்து விடுக்கப்பட்டார்.
2002 - ஈரானிய சுற்றுலா விமானமான ரியூபோலி TU154 மலைப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியதில் 119 பேர் சாவு.
2014 - அதிநவீன ஏவுகணையை ஈரான் சோதனை செய்தது.
2014 - 'கர்ம வினை' தொடர்பாக தாம் பேசிய பேச்சு, சட்டத்துக்கு முரணாக இருந்தால் தன்மீது நடவடிக்கை எடுக்கலாமென வடமாகாண சபை முதலமைச்சர் தெரிவிப்பு.
2014 - உலக நாடுகளிடமிருந்து இலங்கை தன்னைத் தனிமைப்படுத்த முடியாதென இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவிப்பு.



ஆகாயம் தாண்டி வா

ஆடிவா ஓடிவா
ஆகாயம் தாண்டி வா
அழகுமயிலைப் போல நீயும்
தோகை விரித்் தாடிவா,

கிழங்கு வத்தல் தின்னலாம்
கண்ணாமூச்சி ஆடலாம்
குனிந்து நிமிர்ந்து குதிக்கலாம்
குச்சி தள்ளி ஓடலாம்!

ஆடிவா ஓடிவா
ஆகாயம் தாண்டி வா
நாலுபாய்ச்சல் குதிரைப்போல
துள்ளித் துள்ளி ஓடி வா,

நொண்டிக் காலும் ஆடலாம்
நிலாமேலே ஏறலாம்
மூச்சடக்கி ஓடலாம்
முழுக்கடலைத் தாண்டலாம்!

ஆடிவா ஓடிவா ஆகாயம்
தாண்டி வா
ஆண்ட கதையைப் பாடி வா
பழையவீரம்(மி) ஊட்ட வா,

ஏழு கோள் எட்டுக் கோள்
எட்டி எட்டிப் பார்க்கலாம்
கணினியிலே காட்டும் உலகை
வியர்வையாலே மறைக்கலாம்!!

பழமொழிகள்

1. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விசம்
2. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூச் சர்க்கரை
3.ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்
4. ஆதாயமில்லாமல் வியாபாரி ஆற்றோடு போகமாட்டான்
5. யானைக்கும் அடி சறுக்கும்
6.) ஊருடன் ஒட்டி வாழ்
7. பதறாத காரியம் சிதறாது
8.கூழானாலும் குளித்துக் குடி
9.கந்தையானாலும் கசக்கிக் கட்டு
10. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நல்ல மனிதனுக்கு ஒரு வார்த்தை
11. ஆடையில்லாதவன் அரை மனிதன்
12. ஆழம் தெரியாமல் காலை விடாதே
13.ஆடிப் பட்டம் தேடி விதை
14. ஆட மாட்டாத நடன மாதுகுக் கூடம் கோணலாம்
15. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
16. அறுக்க மாட்டாதவன் கையில் ஐம்பத்தெட்டு அரிவாள்
17. உயிர் காப்பான் தோழன்
18. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
19. கற்றுக்கொடுத்த பாடமும், கட்டிக் கொடுத்த சாதமும் நீண்ட நாள் வருவதில்லை
20. தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு உகந்த பாலவிகாஸ் கல்வி

ஆரபி உமாசங்கர்

அறிவியல் ஓங்கி, உலகம் தொழில்நுட்ப வலையால் பின்னப்பட்டு, வாழ்க்கை இயந்திர மயமாகிக் கொண்டிருக்கும் இன்றைய யுகத்தில் மனிதனை மனிதனாக்கி, அதன் மூலம் அவனைப் புனிதனாக்கும், கல்வி முறையாக ஆன்மிகக் கல்வி விளங்குகின்றது. இது ஒழுக்க நெறி என்றும், அறநெறி என்றும், வாழ்வு நெறி என்றும் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. ஆனால் பாலவிகாஸ் கல்வி என்று அழைக்கப்படும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் கல்வித் திட்டமானது ஒரு பிள்ளையை நல்ல மாணவனாகவும், அந்த மாணவனை சிறந்த ஒழுக்கமுள்ள இளைஞனாகவும், அந்த இளைஞனை சிறந்த ஒரு ஆளுமை உள்ள மனிதனாகவும் சமுதாயத்துக்குத் தருவிக்கின்றது. அதாவது, அறநெறிக் கல்வியானது ஒரு பிள்ளையின் சிறுபராயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

யுகம் யுகமாக, காலந்தோறும் எத்தனையோ ஞானிகளும், மகான் களும், ஆன்மிகத் தலைவர்களும் இந்த பூமியிலே தோன்றி மக்கள் வாழும் முறை களை பக்குவமாக எடுத்தியம்பியுள்ளனர். ஆனாலும் மனிதனின் வாழ்வு முறை அவனது அமைதியையும் ஆனந்தத்தையும் குலைத்து, அவனைப் புறம்போக்கிலே சிந்திக்க வைத்து, திசை திருப்பி, அவனை அவலப்படவும் அவஸ்தைப்படவும் செய்கின்றது. இந்த நிலையிலே மனிதன் மனிதனாக வாழவும் அவன் செயற்பாட்டிலே தெய்வீக நிலையைப் பெற்றுக்கொள்ளவும் அவனது சிறுபராயத்திலிருந்தே அறநெறிக் கல்வியைப் பெற்றுக்கொள்ளவும், இதன்மூலம் சீரான வாழ்வுமுறையை அவன் வாழ்ந்து அமைதி அடைய முடியும் என்ற நோக்கிலே பகவானால் ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வித்திட்டமே இந்த பாலவிகாஸ் கல்வி ஆகும்.

பாலவிகாஸ் என்பதன் பொருள் குழந்தைகளை மலரச் செய்தல் என்பதாகும். அதாவது குழந்தைகளின் உள்ளத்தில் இருக்கும் தெய்வீகத்தையும், ஆற்றலையும் வெளிக்கொணரச் செய்தல் என்பதாகும்.

மாணவியாகிய எனது செயற்பாடுகள், ஒவ் வொன்றையும் என்னுடைய முழு ஆற்றலையும் பயன்படுத்தி உன்னதமான செயற்பாடாக மாற்றுகின்ற ஒரு தன்மையைத் தந்தது பெருமை மிகுந்த இந்த பால விகாஸ் கல்வியே ஆகும்.

பாடசாலையில் என்னால் வழங்கப்படும் நற்சிந்தனையைக் கேட்டபின் ஆசிரியரால் உமக்கு எப்படி இந்தத் திறமையும், ஆற்றலும் ஏற்பட்டன. நன்றாகச் செய்தீர் என வாழ்த்தப்படும்போது இதற்கு வழிவகுத்த பாலவிகாஸ் கல்வியைப் பெருமையோடு நினைத்துக்கொள்வேன். எனது கல்விச் செயற்பாட்டிலே பொறுமையோடும், மன உறுதியோடும், எடுத்த காரியத்தை மிக உன்னதமாகச் செயற்படுத்த வேண்டும் என்ற வைராக்கியத்தையும் பெற்றுத்தருவதோடு, தற்கால மாணவரிடையே எமக்கும் ஏனைய மாணவர்களுக்குமிடையே எண்ணிறைந்த வேறுபாடுகளையும் காட்டி நிற்பதாக இந்தக் கல்வி அமைகின்றது. இங்கு கூறப்படும் பிரார்த்தனை முறைகள் பஜனை, சேவை, இளைஞர் கல்வி வட்டம் என்பன இளந்தலைமுறையினருக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைகின்றன எனலாம். பாடசாலைக் கல்விக்கு எந்தவித இடையூறுமின்றி மேலும் பல விதத்திலும் பல நன்மைகளை ஏற்படுத்தும் இந்தப் பாலவிகாஸ் கல்வியைப் பெற்றுக்கொள்ள மாணவர்கள் தயக்கம் காட்ட வேண்டிய தில்லை. தெய்வப் புலவர் முதல் இன்றைய மகான்கள் வரை கல்வியின் நோக்கம் ஒழுக்கம் என்று கூறிய நீதி நெறியை எமது வாழ்வில் கடைக் கொள்ள மாணவர்கள் ஒருமுறை தங்களைத் தயார்படுத்திக் கொள்ளலாமே.

இவற்றைச் செய்வோம்

என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் என்கிறார் இயேசு லூக்கா நற்செய்தியில் (லூக்.9,22-25). அன்பானவர்களே, இந்தத் தவக் காலத்தில் நாம் எவற்றைத் துறப்பது, நாம் எவற்றை இழந்தால் நல்லது என்று ஒரு சிறிய பட்டியல் முயற்சி செய்து பார்ப் போமே.

குறை கூறுவதைத் துறக்கலாம். நிறை வுள்ளவர்களாக வாழலாம். தாழ்வு மனப் பான்மையைத் துறக்க லாம். உயர்தன்மையுடையவர்களாக வாழலாம். தீர்ப்பிடுவதைத் துறக்கலாம். நல்லெண்ணமுடையவர்களாக வாழலாம்.

அழுது புலம்புவதைத் துறக்கலாம். கடவுள் நம்பிக்கையுடையவர்களாக வாழலாம். நம்பிக்கையற்றதன்மையைத் துறக்கலாம்.....நம்மீதே நம்பிக்கை கொண்டவர்களாக வாழலாம். பகையுணர்வைத் துறக்கலாம். அன்புறவோடு வாழலாம்.

எதிர்மறை எண்ணங்களைத் துறக்கலாம். நேர்மறையான எண்ணங்களோடு வாழலாம். தேவையற்ற காழ்ப்புணர்ச்சியைத் துறக்கலாம். சகோதர உணர் வோடு வாழலாம்.

பொறாமையுணர்வைத் துறக்கலாம். பிறரும் நல்லவர்களே என வாழலாம். புறம்பேசுவதைத் துறக்கலாம் ..... நாவடக்கி நல்லவர்களாய் வாழலாம். பாவத்தைத் துறக்கலாம்.. புண்ணியச் செயல்பாட்டில் வாழலாம்.

இன்றைய நாளில் இச்சிறிய பட்டியலில் கூறப்பட்ட விதத்தில் வாழ்ந்து பார்ப்போம். இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ எமக்குச் சிலுவைகள் தேவை. அன்றாட வாழ்வின் சிலுவைகள் சுமந்து இயேசுவைப் பின்பற்றுவோம்.

– அருட்திரு.பவுல்ராஜ் சே.ச.

தாயகத்துக்குத் திரும்புவதில் ஆர்வம் காட்டும் அகதிகள்

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயித் அல் ஹுசைன் ஆகியோரின் இலங்கைப் பயணத்தை அடுத்து இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவது குறித்து மீண்டும் ஆர்வம் காட்டப்பட்டு வருகிறது.

இலங்கையில் இடம்பெற்ற 30 வருடகால உள்நாட்டுப் போரின்போது தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இந்தியாவுக்குத் தப்பிச்சென்றவர்கள் இவர்கள். 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு வந்தபோது இந்த அகதிகள் இலங்கை திரும்பி வடக்கு, கிழக்கில் உள்ள தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. 2010ஆம் ஆண்டு, சுமார் ஆயிரம்பேர் இலங்கை திரும்பினர். அப்பொழுது ஓரளவு கணிசமான எண்ணிக்கையானோர் இலங்கை திரும்புவார்கள் என்ற எதிர்பார்ப்பு இருந்த போதிலும், முன்னைய ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளால், இனவாதப் போக்கினால் சிறுபான்மை சமூகங்களுடனான முரண்பாடுகள் அதிகரிக்க ஆரம்பித்தபோது அகதிகள் வருகை வீழ்ச்சியடைந்தது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான படகுப் பாதைச் சேவை கூட நிறுத்தப்பட்டது.

2010ஆம் ஆண்டுக்கு பின்னர் (கடந்த செவ்வாய் வந்த 43 அகதிகள் நீங்கலாக) 4,589 அகதிகள் மட்டுமே இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பியிருந்தனர். இவ்வாறு திரும்பியவர்களிலும் சிலர் தமது எதிர்பார்ப்புகள் நிறைவேறாத நிலையில் மீண்டும் இந்தியா சென்றதால், அகதிகளை இலங்கைக்கு அனுப்புவது தொடர்பான செயற்பாடுகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இலங்கை திரும்புவதற்கு ஆர்வம் காட்டியோரும் பின்னர்தயக்கம்காட்டினர். இலங்கையில்பாதுகாப்புடனும் கௌரவத்துடனும்வாழமுடியும்என்றஉத்தரவாதத்தை வழங்க முன்னைய அரசு தவறியது. எனினும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் புதிய ஆட்சியாளர்கள் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக இந்தியாவிலுள்ள குறிப்பாக, தமிழ் நாட்டிலுள்ள அகதிகள் இலங்கை திரும்புவதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று தெரிகிறது. தசாப்த காலங்களாக இந்தியா சென்று வசித்தவர்களை மீள்குடியேற வரும்படி அழைப்பு விடுவது சுலபமான விடயம் அல்ல. மீள்குடியேற்றப்படும் மக்கள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிதி உதவிகள் வழங்கப்பட வேண்டும். தொழில் வாய்ப்புகள், காணிப் பிரச்சினை என்று பல பிரச்சினைகளை இவர்கள் எதிர்நோக் கலாம். இவற்றுக் கெல்லாம் மேலான பிரச்சினைகள் பொரு ளாதாரத் தைக் கட்டி எழுப்புவது, சமூக உறவுகளை மீளவும் ஏற்படுத்துவது. யுத்தத்தினால் கணவரை இழந்த ஆயிரக்கணக்கான விதவைகள், அடிமட்ட வறுமை நிலையில் உள்ள மக்கள், என்பவை சமுதாயத்தின் முன் உள்ள புதிய பிரச் சினைகள். இந்தியாவில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள் வாழ்கின்றனர். இவர்களில் தமிழ் நாட்டில் மட் டும் 64 ஆயிரம் அகதிகள் 109 முகாம்களில் உள்ளனர். தற்போது உருவாகியுள்ள சுமுகமான சூழ் நிலையில் இவர்கள் தமது தாயக பூமியான வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் திரும்பிவந்து அரசியல் ரீதி யாகவும், பொருளாதார ரீதியாகவும் எமது சமூகத்தைப் பலப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்: பணிகளில் பரபரப்புடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச்செலவுக்காக கடன் வாங்குவர். ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்க்கவும்.

இடபம்: இளமைக்கால நிகழ்வுகளை நண்பரிடம் பேசுவீர்கள். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

மிதுனம்: மனதில் இருந்த குழப்பம் விலகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். உறவினர் கேட்ட உதவியை வழங்குவீர்கள். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்

கடகம்: முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

சிங்கம்: உங்களின் நற்செயலைச் சிலர் குறை சொல்வர். தொழிலில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது.

கன்னி: புதியவர்களின் நட்புக் கிடைக்கும். தொழில் வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவர். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி காண்பர்.

துலாம்: பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, அணிகலன் வாங்குவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

விருச்சிகம்: வீண் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். உடல் நலனில் அக்கறை தேவை

தனுசு: நண்பர்கள் அலட்சியமாகப் பேசுவர். தொழில் வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

மகரம்: நண்பர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.

கும்பம்: மனக்குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். குடும்பத்துக்கான பணச்செலவு அதிகரிக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

மீனம்: மனதில் நிம்மதி நிறைந்திருக்கும். பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில் வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

துப்பறியும் நயன்தாரா

சென்ற ஆண்டு வெற்றிப்பட நாயகி வரிசையில் முதலிடத்தைப் பிடித்த நயன்தாரா, அதே உற்சாகத்துடன் இந்த ஆண்டும் தொடர்ந்து படங்களில் நடித்து வருகிறார்.

இந்த வரிசையில் தற்போது விக்ரமுக்கு இணையாக "இருமுகன்" படத்தில் நடித்து வருகிறார். விக்ரம் இரண்டு வேடத்தில் நடிப்பதாகக் கூறப்படும் இந்தப் படத்தில் நயன்தாரா இரகசிய உளவாளியாக நடிப்பதாகத் தற்போது செய்திகள் வெளிவந்துள்ளன. இதனால், இந்தப் படத்தில் நயன்தாராவுக்கு அக்ஷன் காட்சிகளும் இருக்கும் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே நயன்தாரா "பில்லா" படத்தில் அக்ஷன் காட்சிகளில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. "இருமுகன்" படத்தை "அரிமா நம்பி" படத்தை இயக்கிய ஆனந்த் சங்கர் இயக்குகிறார். நித்யா மேனன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார். "புலி" பட தயாரிப்பாளர்களில் ஒரு வரான சிபுதமீன்ஸ் தயாரிக்கிறார். படக் குழு இந்த வருடத்தின் இறுதியில் படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.

தொழில் மரியாதையும் சுய மரியாதையும்.

பாதணிக் கடைக்கு ஒருவர் சென்றார். பணியாளர் அவரை வரவேற்று, அழைத்துச் சென்று பாதணிகளை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டினார். அவரை அமர வைத்து, அவரது காலடியில் அமர்ந்து ஒவ்வொரு பாதணியாக அணிவித்துக் காட்டினார். அவருக்குச் சங்கடமாக இருந்தது. நானே போட்டுப் பார்க்கிறேன் என்றார். பணியாளர் விடவில்லை.

பணியாளரே அவருக்கு உதவினார். பாதணி வாங்கச் சென்றவர் பெருந்தன்மையாகச் சொன்னார் "ஐயா! நானும் மனிதன், நீங்களும் மனிதர். எனது கால்களை நீங்கள் தொடுவது எனக்கு ஒரு மாதிரி இருக்கிறது"

பணியாளர் சிரித்தபடியே "இந்தக் கடைக்கு வெளியே போய் விட்டால், ஒரு கோடி ரூபாய் கொடுத்தாலும் நான் உங்கள் கால்களைத் தொடமாட்டேன். அது எனது சுயமரியாதை!"

கடைக்குள் நீங்கள் ஒரு கோடி கொடுத்தாலும், உங்களுக்கு உதவுவதை நிறுத்த மாட்டேன். இது எனது தொழில் மரியாதை -என்றார்.

சி.பி.செந்தில்குமார்

எவ்வளவு பணம் சம்பாதிக்கிறாய்? எவ்வளவு செலவு, எத்தனை சதவீதம் சேமிக்கிறாய் என்பதைப் பொறுத்தே உன்னுடைய முன்னேற்றம் அமையும்.

சுடோக்கு
எண் விளையாட்டு

5			7			1	3	
	4			6				
		3					9	
6	3			7			5	
2		1						
	5							
			1			6		7
			6	3		4	1	
					4			3

நேற்றைய சுடோக்கின் விடை

4	6	5	9	8	7	1	3	2
1	2	8	5	6	3	9	4	7
3	7	9	1	4	2	8	5	6
5	1	6	8	3	4	7	2	9
9	4	2	7	5	1	3	6	8
7	8	3	6	2	9	4	1	5
2	9	7	3	1	5	6	8	4
8	5	1	4	9	6	2	7	3
6	3	4	2	7	8	5	9	1

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை.1–9 வரையானஎண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவேநிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில்ஏனையவற்றைநிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

பதாரி குடியான்

அத்தை: ஏதாவது சேதி உண்டா? நான் டுவிட்டரில 5000 followers தாண்டிட்டேன்அத்தே...

அத்தை மகன்: இனியும் வெட்டியாகத்தான் இருக்கேன்னு சொல்லுமாமா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரக்கறி விலை நிலைவரம்



	மருதானை பம	கொழும்பு	கண்டாவளை	தெஹிவளை	திருகோணமலை	அநுராதபுரம்	யாழ்ப்பாணம்	மட்டக்களப்பு
முள்ளங்கி	30	60	40	60	30	40	30	30
கத்தரி	70	80	80	100	60	60	80	50
கரட்	250	240	200	180	240	200	90	250
மரவள்ளி	40	50	40	40	40	40	35	40
பயிற்றை	160	140	100	120	140	140	100	100
பாகல்	120	120	80	140	120	160	90	200
கருணைக்கிழங்கு	70	80	80	60	60	120	50	50
பெ.வெங்காயம்	70	70	60	60	60	70	50	50
சி.வெங்காயம்	70	80	50	80	70	80	60	80
பூசணி	60	80	70	100	100	120	40	80
தக்காளி	60	80	50	60	60	80	60	60
வாழைக்காய்	70	60	40	60	60	60	40	40
கீரை	20	30	40	10	30	40	15	30
பொன்னாங்காணி	40	40	30	40	20	30	20	10
பச்சை மிளகாய்	200	280	200	200	180	300	200	220
புடோல்	60	80	70	60	80	120	40	60
கோவா	80	100	80	100	70	120	55	80
வெண்டி	120	120	80	80	140	100	70	120
போஞ்சி	100	80	100	100	80	120	80	100
லீக்ஸ்	100	120	100	100	70	200	90	100
தேங்காய்	50	45	50	40-50	50	40	30-40	40
உருளைக்கிழங்கு	70	60	60	70	60	70	50	80
தேசிக்காய்	100	80	80	80	60	60	40	40
வல்லாரை	20	20	10	20	20	20	10	10
கறிமிளகாய்	200	290	200	180	200	200	180	300
இராசவள்ளி	150	140	140	100	140	160	90	80
முருங்கைக்காய்	1000	600	800	300	800	800	400	500

வக்கியூம் கிளினர்

வக்கியூம் கிளினர் யாழ். நகரில் விற்பனை செய்யப் படுகிறது. இதனால் காப்பெற், இடுக்கான இடங்களை இலகு வாகச் சுத்தப்படுத்தலாம். நுண் ணிய தூசியை இலகுவாக அகற்ற முடியும். இது 10,000 முதல் 11,000 ரூபா வரை விற்பனை செய்யப்படு கிறது.

நாளை

மாசி-01

சனிக்கிழமை 13.02.2016

திதி: பஞ்சமி மு.ப.11.06

நட்சத்திரம்: ரேவதி பி.ப.11.24

ராகுகாலம்: 09.34-11.04 வரை

சுபநேரம்: 03.34-05.04 வரை

அவல் பிட்டு

தேவையான பொருள்கள் :

அவல் – 1 கப்
துருவிய வெல்லம் – 1 கப்
துருவிய தேங்காய் – அரை கப்
துவரம் பருப்பு – அரை கப்
நெய் – 1 தேக்கரண்டி
முந்திரிப் பருப்பு – தேவைக்கேற்ப
நல்லெண்ணெய் – 1 தேக்கரண்டி
உப்பு அரைத் தேக்கரண்டி
கேசரிப்பவுடர்– 1 சிட்டிகை
ஏலக்காய்பொடி–அரைத்தேக்கரண்டி

செய்முறை:

☆ அவலை வெறும் சட்டியில் சிவக்க வறுத்து, கரகரப்பாக அரைத்துக் கொள்ளவும். அதில் சிறிது உப்பு, கேசரி பவுடர் சேர்த்து கலந்த இளம் சூடான தண்ணீரை தெளித்து, பிசிறி வைக்கவும். துவரம் பருப்பை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து தண்ணீரை வடித்து, பருப்பை ஈரமில்லாமல் பிழிந்து தனியே வைக்கவும். நெய்யில் முந்திரிப் பருப்பை வறுத்து எடுக்கவும்.

☆ஒரு சட்டியில் வெல்லத்தைப் போட்டு மூழ்கும்வரை தண்ணீர் விட்டுச் சூடாக்கவும். வெல்லம் கரைந்ததும், வடிகட்டி மறுபடியும் சட்டியைக் கழுவி அதில் வெல்லக் கரைசலைக் கொட்டி, பாகுவரும்வரை கிளறவும்.

☆ இளம் உருண்டைப் பாகு வரும்போது தேங்காய்த் துருவல், துவரம் பருப்புச் சேர்த்து கலந்து விட்டுப் பிசறிய அவல் பொடியைச் சேர்க்கவும். நன்றாகக் கிளறி விட்டு, ஏலக்காய் பொடி, வறுத்த முந்திரி, நல்லெண்ணெய் சேர்த்து உதிரியாக வரும்வரை கிளறி எடுக்கவும்.

சமையல் குறிப்புகள்

- சமையல் செய்யும்போது எல்லாம் சரி யாகச் சேர்த்தால்தான், சரியான ருசி கிடைக்கும். அதுபோல அவை மண மாகவும் இருக்க சில வழிகள்.
- இட்லி வாசனையாக இருக்க வேண்டு மானால் குக்கர் தண்ணீரில் கொத்து மல்லி, எலுமிச்சம்பழத் தோல் போடலாம்.
- கீரை வெந்ததும் மசித்து, எலுமிச்சம் பழம் பிழிந்தால் நன்றாக இருக்கும். மணமாகவும் இருக்கும்.
- சமைக்கும்போது காய்கறிகள் நிறத் தையும், மணத்தையும் இழக்காமல் இருக்க திறந்து வைத்து சமைக்கவும். (சமைத்த பின் மூடிவிடவும்)
- ரொட்டி மென்மையாக இருக்க அதன் மாவை சுடுதண்ணீரில் பிசையவும்.
- முட்டையை உடைத்து ஊற்றியவுடன் சிறிது பாலையும் உப்புத்தம் மாவையும் சேர்த்து தயாரிக்கவும். குழந்தை களுக்கும், பெரியவர்களுக்கும் சாப்பிட மிருதுவாக இருக்கும்.

நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

	யாழ்ப்பாணம்	மட்டக்களப்பு	திருகோணமலை	கொழும்பு	நீர்கொழும்பு	காலைதீவு	மாத்தளை
இறால்	600	600	600	700	600	800	600
நண்டு	250	400	300	400	400	400	–
கணவாய்	550	400	500	500	500	500	–
பாரை	450	500	500	600	600	800	350
சுறா	400	600	600	700	700	800	600
சீலா	250	400	400	500	450	1200	350
விளை	500	400	400	600	500	500	400
முரல்	300	400	350	400	300	500	–
கும்பிளா	400	400	300	500	400	400	350
கிழாக்கன்	500	800	–	–	450	400	–
ஓரா	300	350	–	–	300	400	350
திரளி	200	250	200	200	200	300	300
நகரை	150	250	–	280	350	200	350
சூடை	100	200	100	150	200	150	–
ஒட்டி	250	250	150	200	200	200	100
திருக்கை	150	350	200	400	300	300	150
மதனம்	100	250	180	350	250	200	250
கொய்	80	200	60	100	120	100	–
பாலை	300	250	250	300	400	300	–
வாழை	100	150	200	400	300	100	250

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விபத்தில்

உத்தரவிட்டுள்ளார் யாழ்.நீதிமன்ற நீதிவான் சி. சதீஸ்தரன்.

திருநெல்வேலியில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கர விபத்தில் பார்த்தீபன் சுவஸ்திகன் என்ற ஐந்து வயதுப் பாலகன் உயிரிழந்தான். குறித்த விபத்து ஏற்படக் காரணமான குற்றச்சாட்டில் மினிபஸ் சாரதி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த விபத்துத் தொடர்பான வழக்கு நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரினர்.

எனினும் குறித்த கோரிக்கையை நிராகரித்த நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன், குறித்த வழக்கைத் துரிதப்படுத்துமாறு கோப்பாய் பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டது.

இதன்போது தனது கட்டளையில் நீதிவான்,

குறித்த வழக்கில் விளக்கமறியலில் இருக்கும் சந்தேகநபருக்குப் பிணை வழங்குமாறு கோரி மன்றில் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணிகளால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. விளக்கமறியலில் இருந்து வரும் சந்தேகநபருக்குப் பிணை வழங்க வேண்டுமா அல்லது வழங்கக் கூடாதா என்பதற்கு அப்பால், இந்த வழக்குடன் தொடர்புடைய சம்பவம் ஆராயப்படவேண்டும்.

பாடசாலை விட்டுத் தாயாருடன் ஓட்டோவில் வீடு நோக்கிச் சென்ற பாலகனின் உயிரைப் பறித்த குறித்த விபத்துச் சம்பவம் மிகவும் பாரதூரமானது. யாழ்ப்பாணம் – பலாலி வீதி, திருநெல்வேலியில் சன நெருக்கடி மிகுந்த இடத்தில் மிகவும் சொற்ப பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பயணிகள் பஸ்ஸைச் செலுத்தும் பொறுப்பற்ற சாரதி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு குற்றச் செயலே இது.

இது வீதி விபத்து என்பதற்கப்பால், ஒரு குற்றத்துக்கீடமான மனித உயிர் போக்கல் ஆகும். இந்த விபத்தை ஏற்படுத்திய சாரதி, தங்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த இ.போ.ச பஸ்ஸை முந்திச் செல்வதற்காக, தான் செல்ல வேண்டிய பக்கத்தை விட்டு பிழையான பக்கத்தால் வேகமாக முன்னோக்கிச் சென்று, எதிரே வந்த ஓட்டோவைப் பயங்கரமான முறையில் மோதியதுடன், வாகனத்தைக்கட்டுப்படுத்த முடியாத நிலையில் அந்தப் பகுதியிலிருந்த இரும்புக் கம்பத்துடன் மோதிய பின்னரே வாகனம் நின்றுள்ளது.

குறித்த சாரதியால் புரியப்பட்ட இந்தச் செயல் ஒரு கவனவீனமான அல்லது அசட்டையான செயல் என்பதற்கு அப்பால், குற்றத்துக்கிடமான மனித உயிர்போக்கும் ஒரு செயல் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான செயல்களுக்கு நீதிமன்றினால் பிணை வழங்கப்படமுடியாது. மிகவும் பாரதூரமான செயலைப் புரிந்து விட்டு, தன் பக்கத்தில் உள்ள நியாயத்தை முன்வைத்து, சந்தேகநபர் இலகுவாகத்தப்பித்துக்கொள்ள நீதிமன்றினால் இடமளிக்க முடியாது.

ஆகவே இந்த வழக்கின் விசாரணைகளை மிகவும் துரிதகதியில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஏதுவாக, சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரிக்கும் கட்டளையிடுகிறேன்.

அத்துடன், போக்குவரத்துப்பொலிசாரின் பற்றாக்குறை – வேறு காரணங்களை முன்வைக்காது தேவையான பொலிசாரைப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபடுத்தி போக்குவரத்து விதிகளை மீறிச் செயற்படும் சாரதிகளை மன்றின் முன் நிறுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் யாழ்.பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் நீதிமன்று கட்டளையிடுகிறது.

மேலும், வாகனங்களை நிறுத்தும் இடம், நிறுத்த முடியாத இடம் என்பவற்றைத் தெளிவான முறையில், அறிவித்தல்களை உரிய இடங்களில் பொருத்துமாறும் பயணிகள் பஸ்தரிப்பிடங்கள் இல்லாத இடங்களில் அவற்றை அமைத்துப் பாதுகாப்பான போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் நல்லூர் பிரதேச சபை செயலாளர், யாழ்.மாநகர சபை ஆணையாளர் மற்றும் வடமாகாண சபை போக்குவரத்து அமைச்சர் ஆகியோர்களுக்கு நீதிமன்று கட்டளையிடுகிறது.

வீதிப்போக்குவரத்து விதிகளை மீறிச் சொற்ப பணத்தை பெறும் நோக்கத்திற்காகப் போட்டி போட்டுச் செல்லும் சாரதிகளுக்கு எதிராக, உடன் நடவடிக்கை எடுத்து, அவர்களை நீதிமன்றில் நிறுத்துமாறும் பொலிசாருக்கு கட்டளையிடப்படுகிறது. அதனைப் பொலிஸார் தவறாது செயற்படுத்தவேண்டும் என்றும் நீதிவான் தனது கட்டளையில் குறிப்பிட்டுள்ளார். (த-வ-4-103)

பக்கச்சார்பான

போர்க்குற்ற நீதிமன்றம் அமைத்து, நாட்டையும், இராணுவ வீரர்களையும் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை முன் வைத்து அறிக்கை வெளியிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

அரசின் இந்த நவடிக்கைக்கு எதிராக மக்கள் அணி திரள வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

ஜ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனின் இலங்கை வருகை தொடர்பில் தன்னிலை விளக்க அறிக்கையை வெளியிட்டுள்ளார் நேற்று மகிந்த ராஜபக்ச.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஆண்டு ஜ. நா. மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட யோசனையை செயற்படுத்துவதாக, இலங்கைக்கு வருகை தந்த மனித உரிமைகள் ஆணையாளரிடம், பிரதமர் மற்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளனர்.

இந்த யோசனையின் பிரதானம் என்னவெனில், அது இலங்கை அரசினால், ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் வாக்களிப்பின்றி நிறைவேற்றப்பட்டமையே.

இதற்கு முன்னதாக ஜெனிவாவிலுள்ள இலங்கைக்கான தூதுவர், அந்த யோசனையில் மாற்றம் செய்ய முற்பட்ட வேளை, இலங்கை அரசு அதற்கு இடமளிக்காது, அமெரிக்காவினால் வெளியிடப்பட்ட முறையிலேயே ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தது.

தமிழ் மக்களைக் கொலை செய்தமை –அவர்களைச் சித்திரவதை செய்தமை மற்றும் வடக்கில் திட்டமிட்டே உணவுத் தட்டுப்பாடுகளை ஏற்படுத்தியமை ஆகியவற்றை உள்ளடக்கிய மனித உரிமைகள் சபையின் பக்கச்சார்பான அறிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளாது.

இதன்மூலம் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்களைக் கொண்ட போர்க்குற்ற நீதிமன்றம் அமைப்பதற்கான ஒப்புதலை அரசு வழங்கியுள்ளது.

இரண்டாவதாக, போர்க் குற்றத்தில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் இராணுவ வீரர்களை போர்க் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கு போதுமான சாட்சிகள் இல்லாமல் போனாலும், அவர்களைத் துறை ரீதியான நடவடிக்கைள் மூலம் பதவி விலக்குவதற்கும் அரசு இணங்கியுள்ளது.

உண்மையில் அது 1815 ஆம் ஆண்டில், மேல் நாட்டு ஒப்பந்தத்துடன் ஒப்பிடக் கூடிய நாட்டுக்கு பிரதிகூலத்தை ஏற்படுத்தும் இணக்கப்பாடு ஆகும்.

அமெரிக்காவின் யோசனையை எந்தவொரு மாற்றமும் இன்றி ஏற்றுக் கொண்டு, அது இலங்கைக்குக் கிடைத்த மிகப்பெரிய இராஜதந்திர வெற்றியாக மக்கள் மத்தியில் சித்திரிக்க முற்படுகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக சர்வதேச நீதிபதிகளை உள்வாங்கும் விடயத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் இருவேறு கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

2002 இல் விடுதலைப்புலிகளுடன் எவ்வாறு அலட்சியமான விதத்தில் போர்நிறுத்த உடன்படிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி கைச்சாத்திட்டதோ அதேஅலட்சியத்துடன் அது ஜெனீவாத் தீர்மானத்தை கையாள்கின்றது.

இந்த மாபெரும் துரோகத்தில் ஐக்கிய தேசிய கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்துள்ளமை கடும் கவலையை அளிப்பதாகவுள்ளது. (த-வ-5)

யோசிதவுக்கு

மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வர் யோசித ராஜபக்சவுக்கான விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது.

இவரையும், இவருடன் கைதான ஏனைய நால்வரையும் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு கடுவெல நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சி.எஸ்.என். தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் யோசித ராஜபக்ச, மகிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளர் ரொஹான் வெலிவிட்ட, நிஷாந்த ரணதுங்க உள்ளிட்ட ஐந்து பேர் கடந்த ஜனவரி 30ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு கடுவெல நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இவர்களுக்கு நேற்றுவரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் நேற்று மீண்டும் கடுவெல நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது நீதிமன்ற வளாகத்தைச் சுற்றிப் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஷிரந்தி ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, மகிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்டவர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

யோசிதவுக்குப் பிணை வழங்கப்படும் என்று எதிர்பார்த்த மகிந்த குடும்பத்தினருக்கு இறுதியில் அங்கு ஏமாற்றமே கிடைத்தது.

யோசித உட்பட ஐவருக்குமான விளக்கமறியலை எதிர்வரும் 25ஆம் திகதிவரை நீடிப்பதாக கடுவெல நீதிமன்ற நீதிவான் அறிவித்தார்.

இதனையடுத்து பலத்த பாதுகாப்புடன் யோசித உட்பட ஐவரும் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (த-சி)

நுட்பம்

விண்டோஸ் 10க்கு புதிய இணைய பக்கம்

விண்டோஸ் 10 தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் வெறும் வகையில் மைக்ரோசொப்ட் நிறுவனம் புதிய இணையப் பக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த நிறுவனத்தின் அண்மைய வெளியீடான விண்டோஸ் 10 இயங்குதளம் வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த நிலையில் விண்டோஸ்10 இயங்குதளம் குறித்த புதிய மேம்படுத்தல்கள், தகவல்கள் ஆகியவற்றை வாடிக்கையாளர்களுக்கு ஒரே இடத்தில் வழங்க மைக்ரோசொப்ட் நிறுவனம் முடிவுசெய்துள்ளது.

தற்போது இதற்காக புதிய இணையப்பக்கத்தை வெளியிட்டுள்ளது. இந்தப் பக்கத்தில் விண்டோஸ்10 குறித்த அனைத்து தகவல்களும் இடம்பெற்றிருக்கும். அங்கீகாரம், மேம்படுத்தல்களை நிறுவுதல் மற்றும் இயங்குதளத்தை நிறுவுதல் போன்றவற்றில் ஏற்படும் பிரச்சினைகளை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது குறித்த விவரங்கள் அதில் பதிவேற்றப்பட்டிருக்கும்.

இது தொடர்பாக மைக்ரோசொப்ட் நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலில் – எங்கள் வாடிக்கையாளர்களையும் அவர்களின் கருத்துக்களையும் இணைப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இதன் காரணமாக விண்டோஸ் 10 மேம்படுத்தல் குறித்த பல்வேறு தகவல்களை விண்டோஸ் மேம்படுத்தல் பக்கத்தில் தெரிவிக்கவுள்ளோம். புதிய அறிவிப்புகள் வெளியாகும் போதெல்லாம் இந்த பக்கம் புதிப்பிக்கப்படும் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூகுளின் தானியங்கிக் கார் விரைவில் பயன்பாட்டுக்கு!

கூகுள் தயாரித்துள்ள ஓட்டுநர் இல்லாமல் தானாகவே இயங்கும் கார்கள் விரைவில் விற்பனைக்கு வரலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஓட்டுநர் இல்லாமல் தானாகவே இயங்கும் கார்களை தயாரிக்கும் முயற்சியில் மெர்ஸிண்டிஸ், பி.எம்.டபிள்யூ போன்ற பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. அவற்றுள் கூகுள் நிறுவனம் ஒருபடி முன்சென்று வரும் 2020ஆம் ஆண்டில் இந்த வகை கார்களை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்தநிலையில் கூகுளின் தானாக இயங்கும் கார்களுக்கு மனித ஓட்டுநர்களுக்கு வழங்கும் அங்கீகாரத்தை அளிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. அதையடுத்து மோட்டார் வாகன பாதுகாப்பு நியமங்கள் தொடர்பான சோதனையில் தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் கூகுள் காருக்குக் கிடைத்துள்ளது.

இதன் மூலம் இந்த கார்கள் விரைவில் சாலைகளில் இயக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார்

ழந்த பாடசாலை மாணவனைத் தமது பிள்ளையாகக் கருதி சகல பெற்றோரையும், யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் முற்பகல் 10 மணிக்கு ஒன்றுகூடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான துண்டுப் பிரசுரம் ஆரம்பப் பாடசாலைகளுக்கு முன்பாக நேற்று விநியோகிக்கப்பட்டுள்ளது. அதில், கடந்த 3 ஆம் திகதி திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி 5 நாள்களின் பின்னர் சுவஸ்திகன் என்ற சிறுவன் உயிரிழந்திருந்தான்.

தனியார் பேருந்துகளும், இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களும் ஒன்றுக்கொன்று முந்திச் செல்வதால் ஏற்படும் உயிரிழப்பும், படுகாயங்களும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. இதுபற்றி அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

எனவே சகலரும் இன – மத பேதமின்றி யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் முற்பகல் 10 மணிக்கு ஒன்று கூடுமாறு வேண்டுகோள் விடுகின்றோம். அங்கிருந்து யாழ்.நகர் நோக்கிப் பேரணியாகச் சென்று, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், உயர் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் ஆகியோரிடம் மனு கைய ளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இதில் சகல பொதுமக்களையும் பங்கெடுக்கு மாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(த-5-10)

நான் முன்

துங்க தெரிவித்துள்ளார்.

அரச ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காண லிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித் துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக் கத்துக்காக, சிங்கள சமூகம் தமது அதி காரங்களை ஏனைய சமூகங்களுடன் பகிர்வதில் தவறில்லை. அதிகார பரவலாக்கம் என்பது சிங்கள மக்களுடைய அதி காரங்களை குறைப் பது என்று அர்த்தமல்ல. மாறாக அவர்களைப் போன்று ஏனைய சமூகங்களும் உரிமைகளை அனுபவிக்கவேண்டும் என்பதே அர்த்தமாகும்.

2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எமது அரசு கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தை விட முன்னேற்றகரமான தீர்வு திட்டம் ஒன்றைக் கொண்டுவர தற்போதைய அரச நடவடிக்கை எடுத்து வருகிறது. அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளிலும் இந்த நோக்கைக் கொண்டு அரசு செயற்படும். மகிந்த ராஜபக்சவை பொறுத்தவரையில் அவர் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவைப் பதவியில் இருந்து அகற்றமுன்னின்று செயற்பட்டவர். எனவே அவர் கட்சிக்கு எதிராக செயற்படுவது முதல் தடவையல்ல - என்றார். (த-5)

தேவை

தனியார் கல்வி நிலையத்திற்கு வாங்கு, மேசை தேவை.

(6876) (14.19.20)

தொடர்பு: 077 224 7596

கன்டர் வாகனம் விற்பனைக்கு

TATA கன்டர் - 709 விற்பனைக்கு உள்ளது.

விலை ஒன்பது லட்சம் ரூபா

(6922) (14.19.20)

தொடர்பு: 077 574 2069

தவறிவிட்டது

திறப்புக் கோர்வை ஒன்று கே.கே.எஸ் வீதியில், கொக்குவிலுக்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கொக்குவில் சந்தியில் உள்ள அம்பாள் களஞ்சி யத்தில் ஒப்படைக்கவும்.

தொடர்புக்கு: 077 4156 133

தேவை

யாழ் நகரை அண்மித்த அச்சகத்துக்கு வேலை தெரிந்தவர்கள் பழகவிரும்புப வர்கள் தேவை. (பெண்கள் மட்டும்.)

076 807 9282

வீடு வாடகைக்கு

யாழ் நாவலர் வீதியில் சிறிய தற்காலிக வீடு வாடக்கைக்கு விடப்படும்.

(தங்கியிருந்து படிப்பவர்க்கு முன்னுரிமை)

071 8474325

Majestic Cineplex Jaffna

கார்கிள்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்

மஜெஸ்டிக் பிளாட்டினம்

10.00 / 1.00 / 7.00 4.00 p.m.

Fri/Sat/Sun 9.30 p.m

சில்வர் 10.15 / 1.15 / 4.00 / 7.00 Fri/Sat/Sun 9.30 p.m

பிளாட்டினம் 10.15 / 1.15 / 4.00 / 7.00 Fri/Sat/Sun 9.30 p.m

விசாரணை ☎ 021-2227712

Find us on facebook CeylonTheatres

www.ceylontheatres.lk

அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

பகிரங்க ஏலம்

2016.03.01 முதல் 2016.12.31 வரையான காலப்பகுதிக்கு கீழ்வரும் வண்டி வாகன தரிப்பு நிலையம், சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் 2016.02.19 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு பிரதேசசபை தலைமைப் பணிமனையில் நடைபெறும். அதில் கலந்துகொள்ள விரும்புவோர் 2016.02.12 ஆம் திகதி தொடக்கம் 2016.02.19 ஆம் திகதி மு.ப 10.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புப்பணத்தினை செலுத்தி ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தி ஏலத்தில் பங்குபற்றலாம். மேலதிக தகவல்களை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏல அறிவித்தல் அட்டவணை

இல	குத்தகை விவரம்	வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது)
01	கொடிகாமம் மத்திய சந்தையிலுள்ள வண்டி வாகன தரிப்பு நிலையம்	6500.00
02	கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01	500.00
03	கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02	500.00
04	கொடிகாமம் மாட்டிறைச்சிக்கடை	7500.00
05	கைதடி பொதுச்சந்தை	500.00
06	கைதடி மாட்டிறைச்சிக்கடை	800.00
07	எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை	500.00
08	எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை	500.00

திரு.அ.வினோராஜ்
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
2016.02.12.

(C/29101)(10.17.20)

OPEN DAY
MEMORIAL UNIVERSITY CANADA
இடம் : SLIIT யாழ்ப்பாண நிலையம்



Memorial University பிரதிநிதி Mr.Peter Gill ஐ SLIIT யாழ்ப்பாண நிலையத்தில் சந்தியுங்கள்.

பெப்ரவரி 15ம் திகதி காலை 10.30 மணி முதல

Free Seminar

கற்கையின் பின் 3 வருடகால வேலை விசாவினை பெறுவதற்கான தகைமை.

அன்றைய தினம் இணைவுக் கட்டணமான ரூ 10,000 த்துடன் இணைந்துகொள்பவர்களுக்கு கற்கைநெறிக்கான கட்டணத்தில் ரூ. 100,000 கழிவு சலுகை.

Canadian Business Degree க்கான நேரடி நுழைவு

O/L மற்றும் A/L கற்கையின் பின்

எங்களை தொடர்புகொண்டு இன்றே உங்கள் ஆசனங்களுக்கான முன்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

முன்பதிவுகளை மேற்கொள்வதற்கு: 0772665555 / 0773550660
SLIIT Jaffna Center 0217204204

MEMORIAL UNIVERSITY
SLIIT COMPUTING
SLIIT COMPUTING | BUSINESS | ENGINEERING

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம்
O/L, A/Lஎழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள்,தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் இளைய முதியோர்.
ஆங்கிலத்தில் ஒன்றுமே தெரியாதவர்களும் கூட
மிகக்குறுகிய காலத்தில் இலகுவாக ஆங்கிலம் பேசமுடியும்!
2 வது சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 13.02.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
13-02-2016 இற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் வேண்டும்.
SAAMSON
Experts in English Training
278, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

Special General Meeting of the Jaffna Science Association

A special general meeting of the Jaffna Science Association (JSA) is scheduled to be held on 25th of February at 10.00 am at the Physics Mini Auditorium, Faculty of Science, University of Jaffna.

Agenda

- Introducing foreign memberships
- Appointing an advisory/monitoring panel for JSA activities
- Registering the JSA as a non-profit making company

All members are kindly requested to present to the meeting.

நன்றி
செயலாளர்
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
http://www.thejsa.org/

41ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.01.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது "குடும்ப விளக்கு"

அமரர் கந்தன் துரைசிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 03.02.2016 அன்று நடைபெறவிருந்தது தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை. எனவே 41ஆம் நாளான நாளை (13.02.2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

பாரதி வீதி, அச்சுவேலி. குடும்பத்தினர்.

(68871)(10 17.18.20)

31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
15.10.1934

மறைவு
13.01.2016

கடந்த 13.01.2016 புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

சின்னத்துரை கோபாலபிள்ளை

அவர்களின் 31ஆவது நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (12.02.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லமான இல.15, சங்கிலியன் வீதி, நல்லூரில் நடைபெறவுள்ளதால் அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இல.29, கீர்த்தனா ஸ்ரோர்ஸ்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
மருமகன்: 077 3353 644

குடும்பத்தினர்.

(68771)(10 17.18.20)

ஏழாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
20.09.1985

அரக்கர் பிடியில்
12.02.2009

அமரர்
மகேந்திரன் நவநீதன் (நீதன்)
நயினாதீவு

நீதனே....

காற்றோடு வந்த உந்தன் மரணச்செய்தியை
இன்னும் கூட நம்ப மறுக்கிறது எங்கள் மனம்
நிஜமற்ற இவ்வுலகில் நீ நடந்த தேசமெல்லாம்
நினைவிழக்க முடியாமல் உந்தன் சுவடுகளை
தேடுவது உனக்குத் தெரியவில்லையா?
வாழும் வயதினிலே வரலாறாகிப் போனாயே
ஊரே உன் இழப்பால் உணர்விழந்து தவிக்குதையா
சாவு வந்த சடுதியிலே உன்னை அழைத்த மாயமென்ன
சோகமே உருவான அப்பாவும் சோபையே இழந்த
அம்மாவும் அன்புத் தம்பியின் அலறல்களும் ஆசைத்
தங்கையின் சிதறல்களும் உறவுகளின் கண்ணீர்
கதறல்களும் உந்தன் கண்களுக்குத் தெரியவில்லையா?
தீராத பாச அலை நீ பேசிய அன்பு மொழிகளோடு
மீட்டுகின்றோம் மீண்டும் நீ வருவாயா...?

என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.
4ஆம் வட்டாரம், நயினாதீவு.

31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

அமரர் சந்திரன் சுதர்சன்

கடந்த 13.01.2016 புதன்கிழமை இறையடி சேர்ந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு சந்திரன் சுதர்சன் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (12.02.2016) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கீசான் தொலைத்தொடர்பகம்
நாவலடி, உடுப்பிட்டி.
தொ.பே - 077 6943 178

குடும்பத்தினர்.

(J/29099)(15,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசமைப்புக்குக்

கொள்ளுமாறு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக மக்கள் கருத்தறியும் அமர்வு கடந்த 5 ஆம் திகதி வடக்கில் ஆரம்பமானது. வவுனியா மாவட்டத்தில் 5 ஆம், 6 ஆம் திகதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 8 ஆம், 9 ஆம் திகதிகளிலும், மன்னார் மாவட்டத்திற்கான அமர்வு, நேற்று முன்தினம் புதன் கிழமையும், நேற்று வியாழக் கிழமையும் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்றும், நாளையும் இந்த அமர்வு இடம்பெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் காலை 9 மணி தொடக்கம் பி.ப 3 மணி வரை இந்த அமர்வு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எந்தவொரு பொதுமகனும், பொது அமைப்பும் தமது பிரச்சினைகளை – அரசமைப்புக்கான ஆலோசனைகளை முன்வைக்க முடியும்.

இதன் ஆரம்ப அமர்வுகளில் தமிழ் மக்களின் பங்கேற்பு மிகக் குறைவாக இருந்தது. தற்போது ஓரளவு தமிழ் மக்கள் இதில் பங்கேற்றுத் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (த-5-ri7)

பரிசோதனை

டுள்ளது. சீன நிறுவனம் ஒன்றின் ஊடாக இந்தப் பரிசோதனை வீடமைப்புத் திட்டம், மல்லாகத்திலும் – வளலாயிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மீள்குடியேற்றமற்றும்புனர் வாழ்வு அமைச்சினால் வடக்கு – கிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன. 2 மில்லியன் ரூபா செலவில் ஒவ்வொரு வீடுகளும் அமைக்கப்படவுள்ளன. ஒப்பந்த நிறுவனத்தின் ஊடாக இந்த வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. சீன ஒப்பந்த நிறுவனம் ஒன்றும், இந்தவேலைகளை மேற்கொள்வதற்கு விண்ணப்பித்திருந்தது.

குறித்த சீன நிறுவனத்தினால், யாழ்ப்பாணத்தில் இரண்டு இடங்களில்வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பரிசோதனை அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மல்லாகத்திலும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளலாயிலுமே இந்தப் பரிசோதனைவீடுகள்அமைப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வீடமைப்புத் திட்டம் தொடர்பில்வடக்கு–கிழக்கிலுள்ள சிவில் அமைப்புக்கள் ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்குக் கடிதம் அனுப்பியிருந்தன. அதில், வீடமைப்புத் திட்டத்தைப் பயனாளிகளிடம் கையளித்து அவர்களே மேற்கொள்ளும் வகையில் முன்னெடுக்க வேண்டும் என்று அவை வலியுறுத்தியிருந்தன.

இவ்வாறானதொரு நிலையிலேயே, ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் பரிசோதனை வீடுகள் அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

12 இந்திய

யலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினமிரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மன்னார் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர்கள் மீன்பிடிக்குப் பயன்படுத்திய இரண்டு ட்ரோலர் படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மன்னார் நீதிவானிடம் முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-4)

உயிரிழப்பு

முந்திச் செல்ல முயற்சி எடுக்கும் நடத்துநர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்படுவார்கள் எனவும் மேல்நீதிமன்றநீதிபதிசுட்டிக்காட்டியுள்ளார். மேல் நீதிமன்ற நீதிபதியின் குறித்த அறிவிப்பின் மூலம், விபத்தின் மூலம் உயிரிழப்பை ஏற்படுத்தும் வாகனச் சாரதிகளுக்கு எதிராக, கொலைக்குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்படும்போது, அதி உச்ச தண்டனையான சாவுத் தண்டனை வழங்கப்படும் என்பது இலங்கை குற்ற வியல் சட்டக் கோவை சுட்டிக்காட்டுகின்றது.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் திகதி நீர்வேலியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சின்னட்டி சண்முகம் என்பவர் கொல்லப்பட்டார்.

இந்த விபத்து ஏற்படக் காரணமான வாகானச் சாரதி என்ற குற்றச்சாட்டில் கைதடியைச் சேர்ந்த நபர் நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டார். அதன்படி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபா நட்ட ஈடும், 16 ஆயிரத்து 500 ரூபா நீதிமன்ற அபராதமும் விதிக்கப்பட்டது.

குறித்த வழக்கில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால், குற்றஞ்சாட்டப்பட்டவரின் சாரதி அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த நபர் தமது சாரதி அனுமதிப் பத்திரத்தை மீள வழங்குமாறு கோரி, யாழ்.மேல்நீதிமன்றில் தாக்கல் செய்த மீளாய்வு மனு மீதான விசாரணை நேற்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, வாகானச் சாரதிகளுக்கான வீதிப்போக்குவரத்து விதிகள் தொடர்பில் கண்டிப்பான விடயங்களை மேல்நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டியதுடன், விபத்துக்கள் தொடர்பில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப் படவேண்டுமென்ற யோசனைகளையும் முன்வைத்தார்.

இதன்போது, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்ததாவது,

சில வருடங்களுக்கு முன், பொல்காவலையில் ரயில் வருவதனையடுத்து, ரயில் பாதை பூட்டப்பட்டிருந்தது. எனினும் குறித்த பாதை ஊடாக வாகனத்தைச் செலுத்திய பஸ் சாரதி, நடத்துநர் இருவருக்கும் எதிராகக், கொலை வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது. அதேபோன்று விபத்தை ஏற்படுத்திவிட்டு அதனை விபத்துச் சாவு என்று கூறமுடியாது. சாரதிக்கும் நடத்துநருக்கும் எதிராக் கொலை வழக்குகள் தாக்கல் செய்யப்படவேண்டும்.

விபத்தை ஏற்படுத்தும் சம்பவங்களை, போக்குவரத்துப் பொலிஸார், சட்டமா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்று, கொலைக் குற்ற வழக்காகத் தாக்கல் செய்ய வேண்டும்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சாரதிகளும் தனியார் பஸ் சாரதிகளும் பெரும்பாலான விபத்துக்களுக்குக் காரணமாகவுள்ளனர். அவர்களுக்கு அரச நிர்வாக அதிகாரிகளால் பல தடவைகள் ஆலோசனை வழங்கப்பட்டும், அவர்கள் திருந்துவதாகத் தெரியவில்லை.

எனவே சில விடயங்கள் நீதிமன்றின் கவனத்தில் கொள்ளப்படுகிறன. அதன்படி பின்வரும் அறிவுறுத்தல்கள் முன்வைக்கப்படுகின்றன:-

1. ஒவ்வொரு தனியார் பஸ்களும் உரிய முறையில் பராமரிக்கப்படுகிறதா என்பதனைத் தனியார் பஸ் உரிமையாளர்கள் உடனடியாகப் பரிசோதனை செய்து கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. பஸ்களின் மிதிபலகையில் நின்றவாறு மற்றைய வாகனங்களை முந்திச் செல்வதற்கு உதவியளிக்கும் அனைத்து நடத்துநர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள்.

3. தனியார் பஸ் சாரதிகள் வேகமாக -போட்டிக்குப் பஸ்களைச் செலுத்தி ஒரு வாகனத்தை மற்றைய வாகனம் முந்திச் செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டால், குறித்த தனியார் பஸ்களின் போக்குவரத்து உரிமம் நீதிமன்றால் இரத்துச் செய்யப்படும்.

அத்துடன், சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய பஸ்கள் அனைத்தும் பயணிகள் போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாது என்ற கட்டளையை நீதிமன்றம் பிறப்பிக்கும் என்று அனைத்து தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் நீதிமன்று இறுதி எச்சரிக்கை செய்கிறது.

4. குற்றச்செயலில் ஈடுபட்ட எந்தவொரு வாகனமும் நீதிமன்றினால் விடுவிக்கப் படமாட்டாது. இலங்கைப் போக்குவரத்துச் சபை சாரதிக்கும் நடத்துநருக்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

சாரதியும் நடத்துநரும் கைது செய்யப்பட்டுக் கொலைக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கும் சூழ்நிலை ஏற்படும். நீதிமன்றைப் பொறுத்தவரை மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு உள்ளது. குற்றச்செயல் புரிபவர்களுக்கு நீதிமன்றம் தயவு தாட்சண்யம் இன்றி, இரக்கமின்றித் தண்டனை வழங்கவேண்டும். வழக்கு விசாரணைகள் நிறைவடையும்வரை வாகன உரிமம், சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு, கொலை வழக்குத் தாக்கல் செய்யப்படும். பிணை இலகுவில் வழங்கப்படமாட்டாது.

5. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சாரதிகள், தனியார் பஸ்களுடன் போட்டிபோட்டு ஓடக்கூடாது. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் நடத்துநர்களும் தனியார் பஸ்களின் நடத்துநர்களும் மிதிபலகையில் நின்று பயணிக்கக்கூடாது.

6. விபத்துச் சாவு போன்ற குற்றச் செயல்கள் இனிமேல் இடம்பெற அனுமதிக்க முடியாது. இவற்றைக் கூட்டங்கள் வைத்து ஆலோசனை வழங்க முடியாது. புத்திமதிகள் சொல்ல வேண்டிய அவசியம் இனி மேல் இல்லை. சிறைத் தண்டனைகள் மட்டுமே இத்தகைய குற்றங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் என்று நீதிமன்று தீர்மானிக்கின்றது.

6. இந்த விடயங்களில், இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர், உயர் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். குறித்த அதிகாரிகள் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்துகொண்டு அவர்களது பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் என்ன செய்கிறார்கள் என்பது தெரியாது இருக்க முடியாது.

அனைவரும் வீதிக்கு இறங்கிக் கடமை செய்ய வேண்டும். அதன் தலைவர்கள் - அதிகாரிகள் - சாரதிகள் - நடத்துநர்கள் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

7.தனியார் பஸ் உரிமையாளர்கள், சங்கம் வளர்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஒழுக்கம் இல்லாத வாகன சாரதிகள், உரிமையாளர்களுக்கு சங்கம் வளர்க்க வேண்டிய அவசியமில்லை. தனியார் பஸ் சங்கம் நீதிமன்றினால் தடை உத்தரவு வழங்கப்பட்டு மூடப்படும்.

அத்துடன், குறித்த சங்க நிர்வாகிகள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். மக்களுடன் - அவர்களின் வாழ்க்கையுடன் - அவர்களின் உயிர்களுடன் விளையாடும், எந்தச் சங்கத்துக்கும் அனுமதியில்லை. அத்தகைய சங்கத்துக்கு எதிராக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

8.போக்குவரத்துப் பஸ்களைப் பரிசோதனை செய்யும் ஆணையாளர்கள், பரிசோதகர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் வீதியில் ஓடுவதற்குத் தகுதியானதா என்பதை உடனடியாகப் பரிசோதனை செய்ய வேண்டும்.

நீதிமன்றுக்கு அழைக்கும்போது, குறித்த பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மேலும். (த-வ-4)

நல்லெண்ணத்தை

வகையில் பொன்சேகாவின் நியமனம் அமைந்திருக்கிறது. நாடாளுமன்ற ஆசனமும், உயர் இராணுவப் பதவியும் அவருக்கு வழங்கப்பட்டிருப்பதானது புதிய அரசு பதவிக்கு வந்த பின்னரான நல்லெண்ணத்தை அச்சுறுத்துவதாக உள்ளது.

இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கை அரசைக் கடுமையாகச் சாடியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரின் இறுதிக் கட்டத்தில் சரத் பொன்சேகாவின் கட்டளையின் கீழ் செயற்பட்ட படையினர், பொதுமக்கள் மற் றும் மருத்துவமனைகள் மீது சட்ட விரோத மாகப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். பாலியல் வன்புணர்வுகளையும், ஏனைய பாலியல் வன்முறைகளையும் நிகழ்த்தியிருந்தனர். சரணடைந்தவர்கள் நீதிக்குப் புறம்பாக படுகொலை செய்யப்பட்டனர். இந்த மீறல்களுக்குப் பொறுப்புக்கூற இலங்கை அரசு தவறியதனாலேயே, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இது பரந்தளவிலான மீறல்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூத்த இராணுவ அதிகாரிகளை இலங்கை அரசு பாதுகாக்கலாம் என்ற சமிக்ஞையையே வழங்கியிருக்கிறது. பொறுப்புக் கூறல் தொடர்பாக கண்துடைப்பு நடவடிக்கைகளை எடுக்காது அதனைத் தீவிரமாக முன்னெடுத்து, மக்களுக்கும், ஐ.நா.வுக்கும் அர்த்தமுள்ள வகையில் தனது கடப்பாட்டை அரசு நிரூபிக்க வேண்டும்.

போர்க் குற்றங்களுக்கு இந்த அரசு நீதியை வழங்கும் வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று நம்பியிருந்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பத்தினரின் நம்பிக்கையை சிதைக்கும் வகையில் பொன்சேகாவின் நியமனம் அமைந்திருக்கிறது.

எல்லா இலங்கையர்களுக்கும் நீதி கிடைக்கவேண்டும் என்று தலைவர்கள் உறுதியான நிலையைக் காண்பிக்கவேண்டிய இந்த நேரத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் பொறுப்புக் கூறல் விடயத்தில் வருத்தமளிக்கும் சமிக்ஞைகளை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

சரத் பொன்சேகாவுக்கு நாடாளுமன்ற ஆசனமும், உயர் இராணுவப் பதவியும் வழங்கப்பட்டிருப்பதானது இவர்களின் புதிய அரசு பதவிக்கு வந்த பின்னரான நல்லெண்ணத்தை அச்சுறுத்துவதாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-5)

மரண அறிவித்தல்

பொன்னம்மா சத்திலிங்கம்

கைதடி மத்தி, கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்மா சத்திலிங்கம் கடந்த (10.02.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி மத்தி, கைதடி.
076 6156 414 (68877)(15.17.20)

தகவல்: குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி இரத்தினம் இராசதுரை

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வதிவிடமாகவும் தற்போது நீர்வேலியில் வசித்தவருமாகிய திருமதி இரத்தினம் இராசதுரை நேற்று (11.02.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும் நவமணி, பூமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும் சிறீஸ்கந்தராசா, சந்திரலீலா, சுரேஸ்குமார், ஜெயந்தி, ரஞ்சினி, ரோகினி, சிவாஜினி, சுதாஜினி, முருகதாஸ் ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (பெறாமகன்) தி.முருகதாஸ்
T.P: 077 9426 714 (68885)(5.17)

மரண அறிவித்தல்



திரு. வைரமுத்து இராசையா சிவபாலசிங்கம் (V.R.S)

தோற்றம்: 11.07.1945 மறைவு: 10.02.2016

யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு பழனியாண்டவர் கோயிலடி, மற்றும் ஆனமடுவை வதிவிடமாகவும் கொண்ட **இராசையா சிவபாலசிங்கம்** அவர்கள் 10-02-2016 அன்று ஆனமடுவில் காலமானார். அன்னார் வைரமுத்து இரசையா - சிவபாக்கியம் (நல்லபிள்ளை) அவர்களின் மகனும் சுப்பையா சதாசிவம் - பூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திரவதனா(சந்திரா) அவர்களின் அன்புக்கணவரும் ரிசிகேசன், ஆரணி, கஜந்தன்(MGM - ஆனைமடுவ), கஜானன்(V.R.S - ஆனைமடுவ), அமரர் கௌரீசன் ஆகியோரின் தந்தையும் ஜெயவாணி, சிவபிருந்தன் ஆகியோரின் மாமானரும் சிவராசசிங்கம், குபேந்திரசிங்கம்(R.K.S / MATA-ஆனமடு), செல்வராணி, ரவீந்திரசிங்கம், தயாபரசிங்கம், இராஜகுலசிங்கம், நிரோஜினி மற்றும் காலம் சென்றவர்களான ஜெயகுலசிங்கம், குமாரகுலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார். அமரர் சிவலிங்கம் (Auditor-Hatton), தயாளமலர், சுந்தரலிங்கம், தேவகி (இணுவில்), கருணா, ஜெகதீஸ்வரி (ஹட்டன்), சிவனேஸ்வரலிங்கம், உமா, சற்குணலிங்கம் (S.S.Traders - ஹற்றன்) ஆகியோரின் மைத்துனரும் நேத்திரா, ஷஷாங் ஆகியோரின் பாட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் நாளை 13.02.2016) சனிக்கிழமை பகல் 10.00 மணியளவில் நடைபெற்று ஆனமடு பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: 0777785782 , 0773247436
தகவல் - குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியூசிலாந்து – ஆஸ்திரேலியா டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது

நியூசிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது.

வெலிங்டன் மைதானத்தில் இலங்கை நேரப்படி அதிகாலை 3 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். முன்னதாக முடிவடைந்த ஒருநாள் தொடரை நியூசிலாந்து கைப்பற்றிய காரணத்தினால் டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில் ஆஸ்திரேலியா உள்ளது. இந்தத் தொடருடன் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு மக்கலம் விடைகொடுக்க இருப்பதால், அவரை வெற்றியுடன் அனுப்பும் முனைப்பில் நியூசிலாந்து உள்ளது. (ம)

வோவ் பெரும் சுயநலவாதி வோர்ண் மீண்டும் விமர்சனம்

ஸ்ரீவ்வோவ்மீதானதனதுகோபத்தை அவ்வப்போது வெளிப் படுத்தும் சேன் வோர்ண் தற்போது அவரை தன்னுடன் விளையாடிய வீரர்களில் அதிக சுயநலம் பிடித் தவர் என்று காட்டமாக வோவ் குறிப் பிட்டுள்ளார்.

ஸ்ரீவ்வோவ் தொடர்பாக வோர்ண் குறிப்பிடுகையில் – "எனக்கு ஸ்ரீவ் வோவ்வைப் பிடிக்காததற்கு நிறை யக்காரணங்கள் உள்ளன. அதில் ஒன்று என்ன வெனில், என்னுடன் விளையாடிய வீரர்களிலேயே அவர் தான் மிகவும் சுயநலம் பிடித்தவர் என்பதே. அவரை நினைத்தால் எனக்கு கோபம் ஏற்படும் ஒரு விட யம் என்னவெனில் 1999ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இறுதி ஆட்டத்திலிருந்து நான் நீக்கப் பட்டேன். நான்கு ஆட்டங்களைக் கொண்ட அந்தத்தொடரில் தீவுகள் 2-1 என்று முன்னிலை பெற்றிருந்த தது, கடைசி ஆட்டத்தை வென்று தொடரைச்சமன் செய்து பிராங்க் ஒரல் கிண்ணத் தைத் தக்க வைக்க வேண்டும்.

இந்த நிலையில் தலைவரான வோவ், துணைத் தலைவரான நான், பயிற் சியாளர் மார்ஸ் ஆகியோர் அணி யைத் தெரிவுசெய்யவேண்டும். நான் அந்தத் தொடரில் நன்றாகப்பந்து வீசவில்லை. அது என்னுடைய தவறு தான். நாங்கள் அணித்தேர் வுக்கு உட்கார்ந் தோம், அனைவ ரும் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டோம். உடனே ஸ்ரீவ் வோவ் என்னிடம் "நீ இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடவில் லை, உன்னை நீக்குகிறோம்" என் றார். நான் உடனே அணிஎட்படிஇருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? என்றேன். அதற்கு அவர் "நான் தான் தலைவர், நீ விளையாடப் போவதில் லை" என்றார்.

இதுவே வோவ் மீது கோபம் ஏற் படப்பிரதான காரணம் என வோர்ண் குறிப்பிட்டார். வோர்ணை நீக்கிய டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வென்று 2-2 என்று தொடரைச்சமன் செய்து பிராங்க் ஒரல் கிண்ணத்தை தக்கவைத்தது என்பதும் முக்கிய மானது. (ம)

ரி-20 உலகக்கிண்ணத்துக்கான பாகிஸ்தான் அணி அறிவிப்பு

ரி-20 உலகக்கிண்ணத் தொடரிலும், ஆசியாக் கிண் ணத் தொடரிலும் கலந்து கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட் டுள்ளது.

முதலாவது ரி-20 ஆசியாக் கிண்ணத் தொடர் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் மார்ச் 6ஆம் திகதி வரை பங்களா தேஷில் நடைபெறவுள்ளது. தொடருக்கான தகுதிகாண் ஆட்டங்கள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.



ஆசியாக்கிண்ணத் தொடரைப் பொறுத்தவரை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்க ளாதேஷ் ஆகிய 4 அணிகள் நேரடியாக பங்கேற்கின்றன. எஞ்சிய ஓர் அணி எது என்பது தகுதிச் சுற்றுப்போட்டி மூலம் முடிவாகும்.

6ஆவது ரி-20 உலகக்கிண் ணத் தொடர் இந்தியாவில் மார்ச் 8ஆம் திகதி முதல் ஏப் ரல் 3ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது.

ஆசியாக்கிண்ணத் தொட ருக்கான அணியையும், ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான அணி யையும் ஒவ்வொரு கிரிக்கெட் கட்டுப்பாட் டுச்சபையும் அறிவித்து வந்தன.

தொடர்களுக்கான பாகிஸ் தான் அணி நேற்று அறி விக் கப்பட்டுள்ளது. அணி விவரம் – அப்ரிடி (தலைவர்), கபீஸ், மலிக், இர்பான், ரம்மன் ரயீஸ், ரியாஸ், பாபர் அசாம், இப் திகார் அகமட், முகமட் ஆமீர், உமர் அக்மல், சர்பாஸ் அகமட், இமாத் வாசிம், அன்வர் அலி, குர்ரம் மன்சூர். (ம)

இந்தியா - இலங்கை அணிகளின் இரண்டாவது ரி-20 ஆட்டம் இன்று



இந்தியா – இலங்கை அணிகளுக்கு இடையி லான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று ராஞ்சி யில் நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதலாவது ரி-20 ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றிருந்தமையால் தொடரில் தனது ஆதிக்கத்தைத்தக்கவைக்க வேண்டுமாயின், இந்த ஆட் டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாய நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. ஆட்டம் இலங்கை, இந்திய நேரப்படி இரவு 7.30 மணிக்கு நடை பெற வுள்ள தது. (ம)

இந்தியாவுடன் தொடரை நடத்த ஐ.சி.சியிடம் உதவி கேட்டது பாக்.

இந்தியா – பாகிஸ்தான் அணி களுக்கு இடையிலான தொடர் நடைபெறுவதற்காக இருநாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை களும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டன.

அதன்படி கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பாகிஸ்தான் தொடரை நடத்துவதாக இருந் தது. இதில் மூன்று வகை ஆட் டங்களும் இடம்பெறும் வித மாக ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது.

இந்தத்தொடருக்கான அனைத்து சாத்தியக்கூறுகளும் நெருங்கி வரும் நிலையில் பஞ்சாப் மாநிலத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இதனால் இந்தத் தொடர் குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட் டுச்சபை எந்த முடிவும் எடுக்க வில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் பல் வேறு கட்ட பேச்சுவார்த்தை களில் ஈடுபட்டது.

இருந்தாலும் இவை எந்த பய னும் அளிக்கவில்லை. இறுதி யில் தொடர் கைவிடப்பட்டது. தற் போது இந்தப் பிரச்சினையை ஐ.சி.சியின் பார்வைக்கு பாகிஸ் தான் கொண்டு சென்றுள்ளது. அ ண் மை யில் டுபாயில் இடம்பெற்ற சர்வதேச கிரிக்கெட் கட் டுப் பாட்டுச் சபையின் பொதுக்கூட்டத்தில் இந்தியா-பாகிஸ்தான் தொடர் நடை பெறாமையால் தமக்கு ஏற்பட்ட நட்டத்தை புள்ளிவிவரத்துடன் குறிப்பிட்டுள்ள பாகிஸ்தான், இந்தியாவுடன் தொடரை நடத்த ஐ.சி.சி. உதவவேண்டும் என் றும் கேட்டுள்ளது. (ம)

சிறுநீரகச் சிக்கலில் மெஸ்ஸி மீண்டும் சிலகாலங்கள் ஓய்வு?

சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகளால் அவ்வப்பொழுது அவதிப்பட்டுவரும் மெஸ்ஸிக்கு அத்தகைய பிரச்சினை மீண்டும் ஏற்பட்டுள்ளது. மெஸ்ஸியின் சிறுநீரகத்தில் கல் மற்றும் சிறிய நோய்த்தொற்று உள்ளதாக கடந்த வருடம் ஜூன் மாதம் அவரது பிரத்தியேக மருத்துவர் தெரிவித்திருந்தார். இதன்பின் மெஸ்ஸிக்கு சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகள் அவ்வப்பொழுது ஏற்பட்டு வந்தன. இத்தகைய பிரச்சினை தற்பொழுதும் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் நேற்றுமுன்தினம் பூரண மருத்துவச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். நாளை இடம்பெறவுள்ள கிங்ஸ் கிண்ண அரை யிறுதி ஆட்டத்தில் வலென்சியா, பார்சிலோனா அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் மெஸ்ஸி பங்கேற்கமாட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனி னும் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பார்சிலோனா நிர் வாகம், மெஸ்ஸி களமிறங்குவார் என்று உறுதியாகத் தெரிவித்துள் ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கமலாவதி ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடர்

கிளிநொச்சி, பெப். 12

கமலாவதி சந்திரகாந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து வருடாவருடம் நடத்தும் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியையும் உப அதிபருமான கமலாவதி சந்திர காந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான வடமாகாண பாடசாலைகளின் 20 வயதுப் பிரிவினருக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 25ஆம், 26ஆம், 27 ஆம் திகதிகளில் கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தொடரில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் நிர்வாகத்துடனோ அல்லது கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க நிர்வாகத்துடனோ தொடர்பு கொண்டு இந்த மாதம், 15 திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (மு-23)

ஈகிள்ஸிடம் வீழ்ந்தது அல் ஹிஜிரா அணி

யாழ்ப்பாணம், பெப். 12

சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஈகிள்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது. வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல் ஹிஜிரா அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் ஈகிள்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (மு-23)

அன்ரனிஸ் அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 12

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணி வெற்றி பெற்றுள்ளது. தொடரின் ஆட்டங்கள் உரும் பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (மு-23)

யாழ். இந்துக்கல்லூரியின் துடுப்பாட்ட வளர்ச்சிக்காக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் சில உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (422)

அரையிறுதியில் பங்களாதேஷை வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்கு மே.தீவுகள் தகுதி

19 வயதினருக்கான உலகக்கிண்ணத் தொடரில்

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவுடன் மோதத் தகுதி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.

உலகக்கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது. முதலாவது அரையிறுதியில் இலங்கையை வீழ்த்தி இந்திய அணி ஏற்கனவே இறுதிக்கு முன்னேறியிருந்தது. எனவே இந்தியாவுடன் இறுதியில் மோதப்போவது யார்? என்பதைத் தீர்மானிக்கும் ஆட்டமாக இந்த ஆட்டம் அமைந்தது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக மிராஸ் 60 ஓட்டங்களையும், சாய்புடின் 36 ஓட்டங்களையும், ஜோய் ராஸ் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தீவுகளின் சார்பாக பவல் 3 இலக்குகளையும், கோல்டர், ஸ்பிங்கர் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஜோன், ஜோசெப் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

227 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 48.4 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ஸ்பிரிங்ரர் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும், கெட்மையர் 60 ஓட்டங்களையும், போப் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக சபொன் 3 இலக்குகளையும், சாய்புடின், மிராஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (மு)

சென்.மேரிஸ் அபார வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 12

ஈ.கே.குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.மேரிஸ் அணி அபார வெற்றிபெற்றுள்ளது.

கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே.குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலையில் அமைந்துள்ள, கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 4.15 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (மு-23)

இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 12

ஆவரங்கால் மகாஜன வித்தி.

ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. அதிபர் க.விஜயதேவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொள்ளவுள்ளார்.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

கனகரத்தினம் மத்திய ம.வி.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. கல்லூரியின் அதிபர் லு.மகேஸ்வரனின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுங்கத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற உதவி அதியட்சகர் கனகசபை நாகேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோண்டாவில் இந்துக்கல்லூரியின் மைதானத்தில்நடைபெறவுள்ளன. கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

கோப்பாய் ம.வி.

கோப்பாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் த.ஞானப் பிரகாசத்தின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் வீ.கருணலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

கொழும்புத்துறை துரையப்பா வித்தி.

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் நடேசு தயாளனின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் கமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (மு-422)

ஊர்சுற்றும் ஓட்டம்

யாழ்ப்பாணம், பெப். 12

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஊர் சுற்றும் ஓட்டம் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு பழைய மாவட்ட செயலக முன்றிலில் இடம் பெறவுள்ளது.

ஆண்களுக்கான ஓட்டம் 12 கிலோமீற்றர் தூரம் உடையதாகவும், பெண்களுக்கு ஓட்டம் 8 கிலோமீற்றர் தூரம் உடையதாகவும் இடம்பெறவுள்ளன. (மு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1037 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 20.02.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 22.02.16 Mon@ 4pm.
Bus நிலையம் → ஆரியகுளம் →100M→ பலாலி வீதி →FLCentre

இரண்டாம் இடத்தில் இலங்கை; எட்டாத உயரத்தில் இந்தியா

நேற்றுமட்டும் 42 பதக்கங்களை அள்ளியது இலங்கை

இந்தியாவின் குவாத்தி நகரில் நடைபெற்றுவரும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் நேற்று இலங்கைக்கு மேலதிகமாக 42 பதக்கங்கள் கிடைக்கப்பெற்றன. ஒட்டுமொத்த பதக்கங்களின் அடிப்படையில் இலங்கை 146 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. இவற்றில் 24 தங்கப்பதக்கங்களும், 48 வெள்ளிப் பதக்கங்களும், 74 வெண்கலப்பதக்கங்களும் அடங்குகின்றன.

பெண்களுக்கான 200 மீற்றர் பின்புற நீச்சல், ஆண்களுக்கான கோலூன்றிப்பாய்தல், நான்கு வீரர்களைக்கொண்ட 100 மீற்றர் அஞ்சலோட்டம், நான்கு வீராங்கனைகளைக்கொண்ட 100 மீற்றர் அஞ்சலோட்டம், ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டம் ஆகியவற்றில் இலங்கைக்கு நேற்றுத் தங்கப்பதக்கங்கள் கிடைத்தன.

இதன்படி ஒட்டுமொத்த பெறுபேறுகளின் அடிப்படையில் 135 தங்கப்பதக்கங்கள், 76 வெள்ளிப்பதக்கங்கள், 19 வெண்கலப்பதக்கங்கள் உட்பட மொத்தமாக 230 பதக்கங்களைப் பெற்று இந்தியா முதலிடத்தில் உள்ளது. 24 தங்கப்பதக்கங்கள், 48 வெள்ளிப்பதக்கங்கள், 74 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 146 பதக்கங்களைப்பெற்று இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது. 7 தங்கப் பதக்கங்கள், 22 வெள்ளிப்பதக்கங்கள், 41 வெண்கலப்பதக்கங்கள் அடங்கலாக மொத்தம் 70 பதக்கங்களைப் பெற்று பாகிஸ்தான் மூன்றாவது இடத்தில் உள்ளது.

54 பதக்கங்களுடன் பங்களாதேஷ் நான்காவது இடத்திலும், 32 பதக்கங்களுடன் நேபாளம் ஐந்தாவது இடத்திலும், 15 பதக்கங்களுடன் ஆப்கானிஸ்தான் ஆறாவது இடத்திலும், 5 பதக்கங்களுடன் பூட்டான் ஏழாவது இடத்திலும், இரண்டு பதக்கங்களுடன் மாலைதீவு எட்டாவது இடத்திலும் உள்ளன. (ம)

யாழ் மத்திய கல்லூரி
பழைய மாணவர் வழங்கும்
சென்றலின் இன்னிசை தென்றல்

நுழைவுக் கட்டணம்
5000/-
2000/-
1000/-
மார்ச் 13, 2016
ஞாயிறு மாலை 6.30
யாழ் வீரசிங்கம் மண்டபம்
விளம்பர அனுசரணை
ஆசனமுன் பதிவு
மேலதிக விவரங்களுக்கு
மோகன்குமார் Tel:+94 776 328 653
தமிழ் அழகன் Tel:+94 759 752 244

வேலையாள்கள் தேவை
எமது நிறுவனத்துக்கு நிர்வாக ரீதியான வேலையாள்கள் தேவை.
அடிப்படைத்தகுதி - O/L, A/L
தங்குமிட வசதிகள் இலவசம்
முன்னனுபவம் தேவையில்லை
வேலைசெய்ய ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
Tel: 0772986763, 077 9660885

மொழி வகுப்புகள்
திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் ஜேர்மன் -Deutsch, நெதெர்லாந்து - Dutch, French, Italian English வகுப்புகள் நடைபெறுகின்றன.
விவேகானந்தா அக்கடமி
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 484 2464

விசேட கருத்தரங்கு
SLAS
SLEAS
திகதி சனி 9.00-5.00pm
வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
ஆரம்பம்
13.02.2016-2.00pm
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 077 469 66 95

வெளிவாரிப்பட்டப்படிப்பு
கொழும்பு பல்கலைக்கழகம்
க.பொ.த. உ.த. சித்தியடைந்தோர் நேரடியாகவும்க.பொ.த சா.த சித்தியடைந்தோர் அடிப்படைக்கணினி பயிற்சியொன்றை பூர்த்தி செய்வதன் மூலமும் விண்ணப்பிக்க முடியும். முடிவு திகதி. 14 பெப் 16.
புலமைப்பரிசிலிந்தும் மேலதிக விபரங்களிற்கும்
Type BIT<Name><district> & send to 772395895

MCS IT CAMPUS
மாணவரின் உள்ளத்திலிருந்து
முல்லைத்தீவைச்சேர்ந்த ராஜகநந்தினி தர்மலிங்கம் ஆகிய நான் கொழும்பு பல்கலைக்கில் தகவல்தொழில் நுட்ப பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளேன். இத்தகைமையைப்பெறுவதற்கு வழியமைத்த யாழ் MCS நிறுவனத்திற்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS
SLEAS
திறந்த பரீட்சைகளுக்கு
பிரதி ஞாயிறு
9.00 - 4.00 மணி
சில அனுமதிகள் உண்டு
பிரிவு - II
செவ் - வெள்ளி வரை
பி.ப 5.00-6.30 மணி வரை
அனுமதிகள் உண்டு
SLAS
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
ஞாயிறு 9.00-4.00 மணி வரை
வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்
பிரதி சனி
2.00-5.00 மணி வரை
T.P: 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

SLEAS
மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சை வகுப்புக்கள்
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு ஒவ்வொரு ஞாயிறும் காலை 10.00 - 4.00 மணி வரை
கட்டணம் - 3000/-
குறிப்பு:
கடந்த அதிபர் சேவை தரம் 3 பரீட்சையில் 20% ஆனோர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். சரியான வழிகாட்டலுக்குரிய இடத்தைத்தெரிவு செய்யவும்.
T.P: 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்சல் வங்கி அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.